"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

சித்திரை - வைகாசி - ஆனி - 2000

# கலசம்
# KALASAM



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £1.00

SML

# Royal Jewelry

* மனம் கவரும் தங்க நகைகள்
*தங்கம் - கரட் உத்தரவாதம்
*தாலி - பொன்னுருக்கல் வசதிகள்
*உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ணம் நகைகள் பிரத்தியேகமாய் தயாரிக்கும் வசதிகள்
* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்



புன்னகைக்கு நிகர் எங்கள் பொன்னகையன்றோ!
வாருங்கள் வந்து பார்த்து வாங்குங்கள்!!

**287, HIGH STREET NORTH , EAST HAM,**
**MANOR PARK, LONDON E12 6SL**
**Tel: 0208 472 5500**

ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கலசம்

# KALASAM

சித்திரை-வைகாசி-ஆனி 20000

மணி 8

ஒலி 30



வணக்கம்!
புதிய நூற்றாண்டில் வாழ்க்கையை ஆரம்பித்திருக்கும் கலசம்
வாசகர்களுக்கு  எம் அன்பு கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
இது உங்களது முப்பதாவது இதழ்.
ரமண முனிவருடைய வாழ்க்கை வரலாறு, படங்களுடன் இவ் விதழுக்கு
முத்தாய்பபுச் சேர்க்கின்றது. திருக்கேதீஸ்வரத்தில் இறைவன் சிறை
வைக்கப்ட்டிருக்கின்றார். சிவராத்திரியில் சிவனைக் கும்பிட சிப்பாயக்ள
அனுமதி தரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை! ஆலயங்கள் பல
நிரம்பியிருக்கும் லண்டன் மாநகரில் இந்தப் பிரச்சினை
ஆரவாரப்படுத்தப்படவில்லை!சிலவேளை சிவனே பார்த்துக்கொள்வார் என்ற
நம்பிக்கையோ தெரியவில்லை! பல சமய சங்கங்கள் இந்நாட்டில்
இருந்தபோதும் அவைகளும் இந்தப் பிரச்சினை பற்றி அலட்டிக்
கொள்ளவில்லை. ஏன்? எனக்குப் புரியவில்லை. மக்களும் அலட்டிக்
கொண்டதாக இல்லை! அகதிகளை இந்த நாட்டைவிட்டு
அனுப்பப்போகிறார்கள் என்றவுடன் பல கூட்டங்கள் நடைபெறுகின்றன.
பாராளுமன்ற உறுப்பினர்களை ஓடிஓடிச் சந்திக்கின்றார்கள். தங்களுடைய
இருப்புக்களை உறுதிப்படுத்திக்கொள்ளும் இவர்கள் இறைவனுடைய
இருப்புக் கேள்விக் குறியாக்கப்பட்டதைப்பற்றி வாழாவிருக்கின்றார்கள்.
திருக்கேதீஸ்வரம் பாடல்பெற்ற தலமாயிற்றே என்ற சிந்தனைகள் இவரக்ள
உள்ளத்தில் தோன்றவில்லை. தோற்றாமல் இருப்பது இறைவனின் குற்றமோ
என்றும் எண்ணத் தோன்றுகின்றது. சமயத்தின் காவலர்கள் என்பவர்களும்
ஆலயங்களின் அறங்காவலர்கள் என்று சொல்லப்படுபவர்களும் தேவார
திருவாசகங்கள் சரியா என்பதிலும் இடைச் செருகல் உண்டா என்பதிலும்
கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.
சைவ முன்னேற்றச் சங்கம் தன் பங்குக்காக சிப்பாய்களின் நடத்தையை
ஆட்சேபித்து காரசாரமாக ஒரு கடிதத்தைச் சமர்ப்பித்ததோடு அமை
தியடைந்துவிட்டது. இப்பிரச்சினையை முன்னெடுத்து மக்கள் மத்தியில்
கொண்டு செல்லும் கடமை சங்கத்தினுடையதே.
மக்களாகிய நீங்கள் விழித்தெழ வேண்டும். எங்கள் ஆலயங்களில் கை
வைப்பதென்பது அடிப்படை நம்பிக்கையிலும் அடிப்படைக் கலாசாரத்திலும்
கை வைப்பதற்குச் சமானமாகும். எங்கள் சமயத்தை எவரும்
அழிக்கமுடியாது என்று வரட்டு வேதாந்தம் பேசிக் காலத்தைக் கழிக்கக்
கூடாது.
உங்கள் மனங்களில் உண்மையான ஆத்மீக விழிப்புணர்வு
ஏற்படவேண்டும். உண்மையான ஆத்மீக விழிப்புணர்வு என்பது அநிய-
ாயத்துக்கெதிராக உங்கள் மனங்கள் விழித்தெழுதலே!.
மனந்தான் மனிதனின் ஆறாவது அறிவு.
இந்த ஆறாவது அறிவு மனிதகுல மேம்பாட்டுக்காகப் பயன்படட்டும்.
இதுவே கலசத்தின் ஆசையும்.
இதுவே நியாயமும்கூட.
ஓம் நமசிவாய
–ஆசிரியர்–



ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கலசம் - 30

சித்திரை-வைகாசி-ஆனி 20000

# உள்ளே........

ஆசிரியர்: திரு. மு. நற்குணதயாளன்
துணை ஆசிரியர்: திரு. சி. அற்புதானந்தன்
நிர்வாகம்: திரு. வ.இ. இராமநாதன்
உதவி நிர்வாகம்: திரு. சிவ. அசோகன்

நிர்வாகக் குழு:
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு. ந. சிவராசன்
திரு. S. தர்மலிங்கம்
Dr. N. நவநீதராசா
திரு. இ. சிவானந்தராசா
திரு. S. சிறீரங்கன்
திரு. பால. ரவீந்திரன்

தொடர்பு முகவரி:
49, Marlands Road
Clayhall
Ilford
Essex
IG5 0JJ
Tel: 020 8550 4233
Fax: 020 8550 4233

கலசத்தில் வரும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளராவர். ஆக்கங்களை நிராகரிக்கவோ திருத்தவோ ஆசிரியர் குழுவுக்கு உரிமை உண்டு. தபாலுறை சேர்த்து அனுப்பப்படாத கட்டுரைகள் பிரசுரிக்கப்படாதவிடத்து திருப்பி அனுப்பப்பட மாட்டா.

இலங்கையில் தொடர்பு:
Mr K. Balasubramaniam, 131 Sangamitha Mawatha, Colombo 13
ஜேர்மனியில் தொர்பு:
Mr. K. Parameswaran, Alte-Aakob Str 134, 10969 Berlin Germany Tel: 030 251 0209
டென்மார்க்கில் தொர்பு:
Mr R, Rajendran, Bjergmarkan 21 St.TV 4300 Holbeck Denmark
கனடாவில் தொடர்பு:
Mr Siva. Thirunavukarasu, 25 Thunder Grove Apt 1512 Scarborough, Ontario
Tel: 416 412 3883

| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 01 |
| உள்ளே | 02 |
| ஸ்ரீ ரமண மகரிஷி | 03 |
| சமயம் ஒரு பார்வை | 10 |
| இலக்கியத்தில் கூந்தல் | 32 |
| விவிலிய வேததத்துவங்களும் | 35 |
| வாணி நீ அருள்க வாழ்வு | 41 |
| நந்திக் கொடியின் தத்துவம் | 42 |
| நான் கண்ட அருணகிரியார் | 46 |

**கலசம் வாசகர்களுக்கு கலசம் ஆசிரியர் குழுவினதும் சைவ முன்னேற்றச் சங்க ஆட்சிக்குழுவினதும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

# ஸ்ரீ ரமண மஹரிஷி



(சென்ற இதழ்த் தொடர்ச்சி...)

இந்தச் சில்லறையைக் கொண்டு அடுத்த ஸ்ரேஷன் வரை டிக்கட் வாங்கி அங்கிருந்து நடப்ப தென்று தீர்மானித்துக் கொண்டார். அறையணி நல்லூாரை அடையவும் பொழுது அஸ்தமித்துவிட்டது. ஸ்வாமி தரிசனம் செய்யலாமென்று கோவிலை அடைந்தார். அங்கு ஜகஜ் ஜோதியான ஓர் ஒளி தோன்றியது விக்கிரகத்தி லிருந்து தான் ஜோதி தோன்றுகிறதென்று நினைத்து ஆனந்தித்து உள்ளே சென்று பார்க்கவும் ஒன்றும் காணப்படவில்லை. வெளியேவந்து தியானத்தில் அமர்ந்தார். இதற்குள் கோவில் பரிசாரகர் கோவிலைப் பூட்டவேண்டுமென்று அவரை எழுப்பி விட்டார்.

வெளியே வந்ததும் அர்ச்சகரையணுகி அன்னம் கேட்டார். அவர் கண்டிப்பாகக் கிடையாதென்று கூறிவிடவே கேவிலிலிருந்து திரும்பும் கோஷ்டியைப் பின் தொடர்ந்து பக்கத்துக் கிராமமாகிய கீழூரை அடைந்தார். அப்போது கூட அர்ச்சகரது மனம் இளகவில்லை. ஆனால் கோயில் மேளக்காரர் மனமிரங்கி தனது பங்கை அவருக்குக் கொடுத்துவிடும்படி அர்ச்சகரைக் கேட்டுக் கொண்டார். பிறகு குடி தண்ணீருக்காக ஒரு சாஸ்திரிகளின் வீட்டில் காத்துக் கொண்டிருந்தபோது திடீரென்று உணர்வற்று வீழ்ந்தார். கூடியிருந்தவர்கள் மூர்ச்சை தெளிவித்தனர். உணர்வு திரும்பியதும் தரையிலே சிதறிக் கிடந்த சிறிது அன்னத்தை எடுத்து சாப்பிட்டுவிட்டுத் தூங்கினார்.

அடுத்த நாள் கோகுலாஷ்டமி தெய்வ பக்தி நிறைந்த ஒரு பாகவதர் வீட்டில் அவரை வரவேற்று நல்ல சாப்பாடு செய்வித்ததுடன் பக்ஷணங்ளும் நிறைய கொடுத்தனுப் பினார்கள். வீட்டுக்காரர் காட்டிய அன்பைக் கண்டு தைரியம் ஏற்படவே காதுக்கடுக்கனை அடகு வைத்துக் கொண்டு நாலு ரூபாய் கடன் கொடுக்குமாறு வீட்டுக்கார-ரிடம் கேட்டார். அந்த நல்ல மனிதரும் அதற்கிசையவே ரூபாயை வாங்கிக்கொண்டு ரயிலேறி செப்டம்பர் மாதம் முதல் தேதி காலை திருவண்ணாமலையை அடைந்தார். துடி துடிக்கும் உள்ளத்துடனே நேரே கோவிலைய டைந்தார். எல்லா வாயிற்கதவுகளும் திறந்திருந்தன. ஆனால் என்ன ஆச்சரியமோ அன்று கோவிலில் கொஞ்சங்கூடக் கூட்டமில்லை. மனித அரவம் சற்றும் இல்லை. தட்டுத் தடங்கலின்றி மூலஸ்தானத்திற்குச் சென்று அருணாசலேசரிடம் தான் வந்து சேர்ந்ததைத் தெரிவித்துக் கொண்டார்.

## பாலயோகி

வெளியே வந்ததும் ஊரின் கீழ்க்கோடியிலுள்ள ஐயன் குளத்தருகே சென்று கீழூரில் கிடைத்த பட்சணப் பொட்டலத்தை, இந்தக் கட்டைக்கு தின்பண்டங்கள் எதற்கு என்று நீரில் போட்டார். முடி எடுக்கவேண்டுமா என்று நாவிதர் ஒருவர் கேட்கவே இதுவும் செய்யவேண்டியதுதான் என்று தீர்மானித்தார். அழகிய குடுமி அன்றோடு ஒழிந்தது.

அணிந்திருந்த ஆடையை அவிழ்த்து ஒரு கௌபீ னத்திற்கான துண்டைமடடும் கிழித்துக்கொண்டு மற்றதை எல்லாம் சுருட்டி பூணூலையும் மிச்சமிருந்த ரூபாயையும் கீழே போட்டார். ஸ்நானம் செய்யக் கூடத் தோன்றவில்லை. நேரே கோவிலுக்குள் திரும்பிப் போகும் போது கனத்த மழை பெய்வித்து அருணாசலேசுவரர் அவரை ஸ்நானம் செய்வித்தார். நேரே ஆயிரங்கால் மண்டபத்திற்குச் சென்று தவத்தில் ஆழ்ந்தார்

ஆனால் வெகுநாட்கள் வரை அங்கிருக்க முடியவில்லை. பால சந்நியாசியின் இளமையும் மௌன விரதமும் பலருக்கு ஆச்சரியத்தை விளைவித்தன. அவர் யார் எந்த ஊர் ஏன் இந்தக்கோலம் முதலிய விவரங்கள் அறிய ஆவல்

கொண்டனர். இது தவிர விளையாட்டுச் சிறுவர்களுடைய தொந்தரவும் அதிகமாயிற்று. ஆகவே அவர் தனிமையான ஓர் இடத்தை நாடினார். கோவிலிலே பாதாளலிங்கம் என்ற ஓர் இருட்டுக்குகையைக் கண்டார். பட்டப்பகலில் கூட அதற்குள் செல்ல எவர்க்கும் பயம் தோன்றும். ஆனால் பாலசந்நியாசி பாதாளலிங்கத்தையே நல்ல இடமெனத் தேர்ந்து ஏகாந்த தவ யோகத்தில் ஆழ்ந்தார்.

அங்கே அவர் எத்தனை தினங்கள் தவம் கிடந்தனரோ ஒருவருக்கும் தெரியாது. பிறகு ஒருநாள் பால சந்நியாசி அங்கிருப்பது எப்படியோ வெளியாயிற்று. அந்த ஆயாச நிலைக்காட்சி கண்டோரை வியக்கச்செய்தது. முற்காலத்தே வால்மீகி முனிவர் தம்மைச்சுற்றிலும் கறையான் புற்றுக்கள் எழுந்து மூடிக்கொண்டதையும் உணராது வருஷக்கணக்காக தவம் செய்ததாக கூறுவர். பாலயோகியின் தவ நிலை அதை ஒத்திருந்தது பாதளலிங்கத்தின் இருட்டிலே குடியிருந்த ஈ எறும்பு பூச்சிகளுக்கு யோக நிலையில் இருந்தவர் உடம்பு சரியான இரையாகக் கிடைத்தது. உடம்பின் கீழ்ப்பாகம் பூச்சிஅரித்து ரத்தமும் சீழும் சேர்ந்து கட்டிக்கிடந்தது. ஆனால் அந்தப்பால சந்நியாசிக்கு இதனால் எவ்விதத் துன்பமும் நேர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனந்தநிஷ்டையில் அசையாது வீற்றிருந்தார்.

இந்தக் காட்சியைக் கண்டோர் யாவரும் பிரமித்து போயினர். பாலசந்நியாசியின் தவ வலிமையை நிதர்சனமாக உணர்ந்த சாதுக்கள் அதுமுதல் அவரை மிக மரியாதையாகக் கவனித்து வருவராயினர். ஆயினும் பாலயோகி அடிக்கடி இடம் மாறிக்கொண்டேயிருந்தார். ஸ்ரீசுப்பிரமணியர் கோவிலருகே சில காலமிருந்தார். அதன் பக்கத்தில் உள்ள பூந்தோட்டத்தில் சில நாட்கள். இதன் பின் வாகன மண்டபத்தில் சில தினங்கள். கடைசியாக மங்கைப் பிள்ளையார் கோவிலை அடைந்தார்.

பாலயோகியின் மகிமையை உணர்ந்த உத்தண்டி நயினார் என்னும் சாது இச்சமயத்தில் சுவாமிகளை அடுத்து உபதேசம் பெற வேண்டி அவருக்கு தொண்டு செய்யத் தெடங்கினார். அப்போது கூட விஷமிகளின் தொந்தரவு நீங்கவில்லை. நயினார் இல்லாத சமயத்தில் துஷ்டப் பிள்ளைகள் சுவாமிகளுக்கு பல இடையூறுகள் செய்வதுண்டு. இதைக்கூட அவர் பொருட்படுத்தவில்லை. சுவாமிகளின் பெருமை நாளுக்கு நாள் எங்கும் பரவவே பலபக்தர்கள் தரிசனத்துக்கு வந்து போவராயினர் இதனால் துஷ்டர்களது கொடுமைகள் நின்றன. பக்தர் கூட்டம் பெருகியதால் தியானத்திற்கு இடைஞ்சல் ஏற்படவே சுவா மிகள் அன்பர் ஒருவரின் வேண்டு கோளுக்கு இசைந்து திருவண்ணா மலைக்கு அருகே உள்ள குருமூர்த்தத்தை அடைந்து ஒன்றரை வருஷ காலம் அங்கே சமாதி நிஷ்டையில் இருந்தார். இங்கே தான் முதன் முதலாக சுவாமிகளின் பூர்வோத்திரம் வெளியாயிற்று. கூட இருந்த பக்தர் ஒருவர் சுவாமிகளுக்கு ஆராதனை செய்ய ஏற்பாடுகள் செய்தார். ஆனால் ஆராதனைக்கு முன் கரியால் எழுதப்பட்டிருந்த சில வார்த்தைகள் சுவரில் காணப்பட்டன. இதற்குத் தொண்டிதுவே என்பது அவ்வாக்கியம். இது என்பது பக்தர் கொண்டுவரும் உணவைக்குறிப்பதாகும். இதைக்கண்ட பின் ஆராதனை நின்று விட்டது என்று சொல்லத் தேவையில்லை.

சுவாமிகளுக்கு எழுதப் படிக்கத் தெரியுமென்பது இதன்மூலம் தான் வெளியாயிற்று. இதன்பின் அவ்வூர் தாலுக்கா ஆபீசராக இருந்த ஒருபக்தர் விடாப்பிடியாகச் சுவாமிகளின் பூர்வோத்தரத்தை அறிய முயன்றார். அதைத் தெரிவித்தால் ஒழிய தாம் அவ்விடத்தை விட்டு நகருவதில்லை யென்று சங்கல்ப பம் செய்து கொண்டார். முடிவில் சுவாமிகள் கீழ்க்கண்டவாறு எழுதிக்காண்பித்தார். வேங்கடராமன் திருச்சுழி. பக்தருக்கு இவ்வூர் பெயர் புரியவில்லை. உடனே சுவாமி பக்கத்திலிருந்த பெரிய புராணப் புத்தகத்தை எடுத்து சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடல் பெற்ற திருச்சுழி யென்னும் தில்லிய ஸ்தலத்தின் பெயரைச் சுட்டிக் காட்டினார்.

## தனயன் நிலையைத் தாய் அறிதல்

இந்த விவரங்கள் விரைவில் நாடெங்கும் பரவி மதுரைக்கும். எட்டிவிட்டன. சுவாமிகளுக்கு ஆராதனை செய்ய ஏற்பாடு செய்த பக்தரான குன்றக்குடித் தம்பிரான் மதுரையில் உள்ள மடத்தில் சுவாமிகளின் மகிமையைக்குறித்துப் புகழ்ந்து பிரசங்கம் செய்தார். இதனைக் கேட்ட பையன் ஒருவன் உறவினர் களிடம் ஓடிப்போய் நமதுவேங்கடராமன் திருவண்ணா மலையில் ஒரு பெரிய சாமியாராய் இருக்கிறானாம் என்று கூறினான். சுவாமிகளின் சிறிய தந்தையரான நெல்லையப்பையர் உடயேன திருவண்ணாமலைக்கு கிளம்பினார் சுவாமிகளுக்கு அப்போது ஓர் மாந்தோப்பில் வாசம் அன்னியர்களைப் பெரும்பாலும் அங்கே அனுமதிப்பதில்லைை. நெல்லையப்பையரும் முதலில் ஒரு சீட்டைக 'கொடுத்தனுப்பினார் உள்ளே சென்றதும் அவர் கண்ட காட்சி அவர் மனத்தை உருக்கியது. பாலிய மைந்தனது மேனி அழுக்கடைந்து கிடந்தது தலையிலே புதர் போல் மயிர் கையிலே வளர்ந்த நகங்கள்!!

ஆனாலும் நெல்லையப்பர் மனத்தைத் தேற்றிக்கொண்டார் தங்கள் குடம்பத்தார் ஒருவர் இவ்வளவு உயர்ந்த ஞான நிலையை அடைந்ததைப்பற்றி அவருக்குத் திருப்திதான் ஆனாலும் ஊருக்குத்திரும்பி லந்து தங்கள் பக்கத்தில்

இருக்குமாறு அவர் சுவாமிகளை வேண்டிக் கொண்டார். சுவாமிகளுடைய சௌகரியங்களைக் குறைவில்லாமல் கவனிக்க அது ஏதுவாகும் என்றும் கூறினார். ஆனால் சுவாமிகளிடமிருந்து பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. அவரது அருட்பார்வையில் கூட எவ்வித மாறுதலும் தோன்றவில்லை.

ஆகவே சிறிய தந்தைக்கு ஊருக்கு திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை. ஆளையாவது நேரில் பார்த்தோமே என்ற திருப்தி அவருக்கு. பையன் இனிமேல் ஊருக்குத் திரும்புவது கஷ்டம் என்று சுவாமியின் தாயாரான அழகம்மையிடம் அறிவித்தார். பெற்ற தாயின் மனம் இந்தமுடிவை அவ்வளவு எளிதில் ஒப்புக்கொள்ளுமா?

## தாயின் வருகை

மூத்த பிள்ளை நாகசாமிக்கு லீவு கிடைத்தவுடன் தாயும் அண்ணனும் திருவண்ணாமலைக்குப் புறப்பட்டனர். அங்கே பவளக்குன்றில் உள்ள ஒரு பாறையின் மீது சுவாமி படுத்திருந்தார். பார்வைக்கு எவ்வளவோ மாறுதல் அடைந்திருந்த போதிலும் தன் அருமைக் குழந்தை யென்பது அன்னைக்கு உடனே தெரிந்து விட்டது.

நெல்லையப்பையருக்குக் கிடைத்த பதில் தான் அன்னை அழகம்மைக்கும் கிடைத்தது. நாள் தவறாமல் அண்ணனும் அம்மையும் சுவாமியை விடாப்பிடியாக வேண்டினர். அவர் மனத்தைக் கலைக்க எவ்வளவோ முயன்றனர். அன்னையின் அன்பு முழுவதும் வெளிப்பட்டது. அழுதார், அரற்றினார், வேண்டினார், இறைஞ்சினார் ஒன்றும் பலிக்கவில்லை. எதற்கும் ஒரே நிர்மலமான மௌனம் !

பக்கத்தில் உள்ளவர்களுக்கு இது மகா பரிதாபக்காட்சியாக இருந்தது. தாயின் அன்பு அவர்களின் மனத்தைக் கரைத்தது. பெற்றெடுத்த தாய்க்கு மறுமொழியாவது கொடுக்கும்படி அவர்களும் மன்றாடினார்கள். கடைசியில் சுவாமி ஓர் கடிதத்தில் பின்வருமாறு எழுதிக்கொடுத்தார்.

அவரவர் பிராப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்கிருந்து ஆட்டுவிப்பான் என்றும் நடவாதது எப்படி முயற்சிக்கினும் நடவாது. நடப்பது என்ன தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம் ஆதலின் மௌனமாயிருக்கை நன்று. இதற்குமேல் தாய் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. நாகசாமியின் லீவு முடிந்ததும் மனவருத்தத்துடன் இருவரும் மானா மதுரைக்குத் திரும்பினர்

இதன்பின் சுவாமிகள் மலைமேல் பல குகைகளிலிலும் மாறி மாறித் தங்கி வந்தார். விருபாக்ஷ குகையில் இருந்தபோது அந்தமடத்துத் தலைவர் சுவாமியைப் பார்க்க வருபவர்களுக்கு டிக்கட்டு வைத்துப் பணம் சம்பாதிக்க ஆரம்பிக்கவே அதையும் விட்டுக் கிளம்பிப் பக்கத்திலிருந்த ஒரு வெளியிடத்தில் தங்கினார். அப்போதும் டிக்கட் நின்ற பாடில்லை. கடைசியாக அந்தப் பிரதேசத்தையே நீத்து மற்றோர் குகையை நாடிச் சென்றார். இதற்குள் டிக்கட்டு வைத்த பக்தர் தம் குற்றத்தை உணர்ந்து மன்னிக்கும்படி மன்றாடவே சுவாமியும் கருணை கூர்ந்து திரும்பினார். ஆனால் கோடைக் காலத்தில் விருபாக்ஷ குகையில் வெய்யிலின் கொடுமை தாங்கமுடியாததாகவே அதைவிட்டு நீங்கி முலைப் பால் தீர்த்தத்திற்கு அருகேயுள்ள மாமரக் குகைக்கு மாற வேண்டியதாயிற்று.

விரூபாக்ஷ குகையில் இருந்தபோது பக்திரசம் ததும்பும் அருணாசல அக்ஷரமணமாலை என்னும் துதியை அவர் அருளினார். சுவர்மிகளை அடுத்துள்ள அடியார்கள் பிட்க்ஷைக்காக ஊருக்குள் செல்லும் போதெல்லாம் இப்பாடல்களைப் பாடி வருவராயினர்

### உபதேசங்கள்

இக்காலத்தில்தான் ஆங்கிலம் படித்த சிலரும் சுவாமிகளின் மகிமையை உணர்ந்து அடிக்கடி தரிசனத்துக்கு வரத்தொடங்கினர். இவர்களுள் சிலர் சுவாமிகளைப்பற்றியும் எழுதிக்குறித்து வைத்திருக்கின்றனர், இவர்களுட் சிலர் சுவாமிகளைப் பற்றியும் அவரது உபதேசங்களைப் பற்றியும் எழுதிக் குறித்து வைத்திருக்கின்றனர்.

ஸ்ரீ ஜி சேஷையர்என்னும் பக்தரின் சந்தேகங்களுக்குச் சுவாமிகள் சிறு சிறு சீட்டுக்களில் பதில் எழுதிக்கொடுப்பது வழக்கம். விசாரசங்கிரம் என்னும் நூல் இந்தக் குறிப்புக்களைக் கொண்டு தொகுத்ததேயாகும். ஸ்ரீ சிவப்பிரகாசம்பிள்ளை என்னும் பக்தர் சுவாமிகளின் உப தேசத்தைத் தொகுத்து எழுதியிருக்கின்றார். அந்தக் காலத்திலேயே சுவாமிகளின் ஆத்ம ஞானோபதேசம் எவ்வளவு சிறந்து விளங்கியது என்பதை நானார்? என்னும் அந்நூலில் உள்ள கீழ்க்கண்ட பாகங்கள் நிதரிசனமாகக் காட்டுகின்றன.

மனமற்ற நித்திரையில் தினம் அநுபவிக்கும் தன் சுபாவமான அந்தச் சுகத்தை அடையத் தன்னைத் தான் அறிதல் வேண்டும். அதற்கு நானார்? என்னும் ஞானவிசாரமே முக்கிய சாதனம். நானார்? சப்த தாதுக்களாலாகிய ஸ்தூல தேகம் நானன்று. சப்த ஸ்பரிச ரூப கந்தம் என்னும் பஞ்ச விசயங்களையும் தனித்தனியே அறிகின்ற ஞானேந்திரியங்களும் நானன்று. வசனம் கமனம் தானம் மலவிசர்ஜனம் ஆனந்தித்தல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்கின்ற கன்மேந்திரியங்களும் நானன்று. சுவாஸாதி ஐந்தொழில்களையும் செய்கின்ற பிராணாதி பஞ்சவாயுக்களும் நானன்று. மனமும் நானன்று. சர்வ விஷயங்களும் சர்வ தொழில்களும் அற்று விஷய வாசனைகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும். அஞ்ஞானமும் நானன்று. மேற் சொல்லிய யாவும் நானல்ல,

நானல்லவென்று நேதி செய்து தனித்து நிற்கும் அறிவே நான். அறிவின் சொரூபம் சச்சிதானந்தம்.

**நானார்** என்னும் விசாரணையினாலேயே மனம் அடங்கும். **நானார்** என்னும் நினைவு மற்ற நினைவுகளை எல்லாம் அழித்துப் பிணஞ் சுடு தடிபோல் முடிவில் தானும் அழியும். (அப்போது) ஆதம ஞானமே திகழும்.

இதன் பின் மகரிஷிகளின் அருளுக்குப் பாத்திர மானவர்களுள் முக்கியமானவர் ஸ்ரீ காவ்ய கண்ட கணபதி சாஸ்திரிகள் ஆவர். இவரது வரவு பலவிதங்களில் விசேஷம் வாய்ந்தது. கணபதி முனிவர் மகா பண்டிதர் என்று புகழ் படைத்தவர் பெரிய கவி மஹா தபஸ்வி. இவர் பல்லாண்டுகள் கடுந்தவம் இயற்றியும் கருதிய பலன் கைகூடாது மனம் வருந்தி நின்றார். 1907 ஆம் ஆண்டு ஒருநாள் திருவண்ணாமலைச் சுற்று வழியில் ஒரு மண்டபத்தில் தியானித்திருந்த போது ஏதோவோர் தூண்டுதலால் இருக்கையை விட்டு எழுந்து கோவிலை நோக்கி நடந்தார். வழியிலே அருணாசலேசுவரர் ஊர்வலம் வருமிடத்தே ஸாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார். மறுநாள் மத்தியானம் மலை மீதுள்ள பிராஹ்மண சுவாமிகளைச் சரணடையும் நோக்கத்துடன் உக்கிரமான வெய்யிலையும் பொருட்படுத்தாது உடனே மலை மீதேறினார். அதிஷ்டவசமாக அன்று விருபாக்ஷகுகையின் முன் தாழ்வாரத்தில் சுவாமிகள் தனியே அமர்ந்திருந்தார். கணபதி முனிவர் சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து தம் இருகரங்களாலும் சுவாமிகளின் அடிகளைப் பற்றிக் கொண்டு கற்க வேண்டிய யாவையும் கற்றேன். வேதாந்த சாஸ்திரங்களையும் பயின்றேன். மனங் கொண்ட மட்டும் மந்திரங்களையும் ஜபித்தேன். ஆனாலும் தபஸஸ் என்பது யாதெனத் தெரியவில்லை. ஐயனே உனது அடியினைச் சரணடைந்தேன் என்று இறைஞ்சினார்.

சுவாமிகள் கணபதி முனிவரை வெகுநேரம் கருணையுடன் நிச்சலமாகக் கடாட்ஷித்து இங்ஙனம் திருவாய் மலர்ந்தருளினார். நான் நான் என்பது எங்கேயிருந்து புறப்படுகின்றதோ அதைக் கவனித்தால் மனம் அங்கே லீனமாகும். அதுவே தபஸ். ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணுங்கால் மந்திரத்துவனி எங்கிருந்து புறப்படுகின்றது என்று கவனித்தால் மனம் அங்கே லீனமாகிறது. அதுவே தபஸ்

இவ்வருள் வாக்கும் இத்திவ்விய உபதேச மொழிகளும் கணபதி முனிவரின் ஐயங்கள் யாவையும் தீர்த்து விட்டன. குகையிலே அன்று இரவு அவர் தங்கினார். பக்கத்தில் உள்ளவரிடமிருந்து சுவாமிகளின் பெயரைத் தெரிந்து கொண்டதும் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் என்பதே சுவாமிக்குப் பொருத்தமான பெயர் என்று வெளியிட்டார். மருவிலாக்காட்சிப் பெரியோனை இனிமேல் மகரிஷி என்றே வணங்கிப்பணிக என்று பாடி இனிமேல் பகவான் என்றே பக்தர்கள் யாவரும் மகரிஷிகளை அழைக்க வேண்டும் என்று கூறினார். அன்று முதல் இப்பெயரே நிலைத்துவிட்டது.

மகரிஷிகளைச் சேர்வதற்கு முன்னமேயே காவ்யகண்டர் மிகப் பிரசித்தியடைந்தவர். அவரைப் பின்பற்றும் பக்தர்கள் பலர் இருந்தனர், ஆகவே காவ்ய கண்டரின் வருகைக்குப் பின் மகரிஷிகளின் தரிசனத்துக்கு வருபவர்களின் தொகை அதிகரித்தது. இப்போது பக்தர்கள் வினாக்களும் அதிகரித்தன. மஹரிஷிகள் அருளிய முக்கியமான பாகங்களைத் தொகுத்துச் சுலோகங்களாக அமைத்து ஸ்ரீ ரமண கீதை என்னும் நூலாக இயற்றினார் காவ்ய கண்டர். கணபதி முனிவர் மகரிஷிகளிடம் நெருங்கிய அன்பு பூண்டவர். மகாரிஷிகளிடம் அவர் கண்ட அற்புத சக்திகள் பல.

1908 ஆம் வருஷம் காவ்யகண்டர் திருவொற்றியூரில் ஒரு பிள்ளையார் கோவிலில் தவம் செய்து வந்தார். அப்போது அவருக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. மகரிஷிகள் அருகில் இருந்தால் இந்தச் சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமே! என்று மனத்தில் நினைத்தார். அக்கணமே மகரிஷிகள் உள்ளே நுழைவதுபோல் தோன்றியது. சாஷ்டாங்கமாக வீழ்ந்து அடிபணிந்தார். மகரிஷிகள் தமது திருக்கரத்தால் அவர் தலையைத் தொட்டு அழுத்தினார். மின்சாரம் போன்ற புதியதோர் சக்தி தம்முள் புகுந்ததாக முனிவர் உணர்ந்தார். மகரிஷிகளின் திருக்கரத்தால் ஹஸ்ததீக்ஷை பெற்றுவிட்டதாக உணர்ந்து முனிவர் மகிழ்ந்தார்.

இதைப்பற்றி பின்னால் மகரிஷிகள் கூறிய விவரமும் இதை ஒத்திருக்கிறது. பகவான் அருளியதாவது ஒரு நாள் படுத்துக்கொண்டிருந்த போது திடீரென்று சரீரம் ஆகாயத்தில் உயரச் சென்றது சுற்றும் உள்ள பொருள்கள் யாவும் மறைந்தன. எங்கும் ஒரே ஒளிமயம் பிறகு சரீரம் ஓரிடத்தில் இறங்கியதும் பொருள்கள் யாவும் புலப்பட்டன. திருவொற்றியூரில் இருப்பதாக ஓர் எண்ணம் உதித்தது. ஒரு பெரிய வீதியைப் பின் பற்றிச் செல்லுகையில் வழி மீது ஒரு கணபதி கோயில் காணப்பட்டதும் உள்ளே சென்றது. அங்கே பேசியது உண்டு. ஆனால் என்ன பேசி யது செய்தது என்பது நினைப்பில் இல்லை. திடீரென்று விழித்தபோது விருபாக்ஷ குகையில் படுத்திருந்தது. இப்படித்தான் சித்தர்களும் உலாவுவார்களோ என்று நினைத்தேன்.

(தொடர்ந்து வரும்.....)



P.S. Ragu

# WELCOM CENTRE

# STAR MUSIC

## தரமான ஒலி ஒளிகள்

**FOREVER AND EVER GOOD QUALITY**

**OPEN 7 DAYS A WEEK 11.00AM-11.00PM**





திரை, இசை நட்சத்திரங்களின் புதிய-பழைய திரைப்படப் பிரதிகளையும், சீடி, சீடி வீடியோ, ஓடியோக்களையும், வார மாத தமிழ், ஆங்கில பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**TEL: 0181 552 2727 / FAX: 0181 692 7759**

**209 HIGH STREET NORTH, EAST HAM, LONDON E6 1GH**

**TEL: 0181 472 6084**

**247, HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6SJ**

# இலண்டன் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில்
# சிவயோகம்
# திருமணமண்டபம்

இரு வருடங்களில் 200 திருமணங்களைக் கண்ட ராசியான திருமண மண்டபம்.

**500 இருக்கைகள்**
**அழகிய மணவறைகள்**
**அலங்கார ஜோடனைகள்**
**இசைக் கருவிகள்**
**உணவு வசதிகள்**

சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்

தொடர்புகட்கு:
நிர்வாகி
ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
சிவயோகம்

**தொலைபேசி: 0181 767 9881**

**தொலைநகல்: 0181 767 9881**

# இலண்டன் கண்ட முத்தமிழ்விழா

தேன் மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்
என்ற கோட்பாட்டுக்கு அமைய சிவயோகம் வருடாந்தம் நடாத்தும் முத்தமிழ்விழா சித்திரை ஆங்கில் முதலாம் நாள் ரூட்டிங் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய சிவயோக மண்டபத்தில் நடைபெற்றது. காலை முதல் மாலை வரை முழுநாள் விழாவாக நிகழ்ந்தது. இது சிவயோகத்தின் நான்காம் முத்தமிழ் வழாவாகும்.
தமிழ் வாழ்த்து தாயக வணக்கம் என்பனவற்றோடு ஆரம்பித்த காலை நிகழ்வுகள் அம்பாள் ஆலய பிரதம குரக்கள் சங்கர ஐயாவின் ஆசியுரையுடனும் அறங்காவலர் சபைத் தலைவர் திரு நா. சீவரத்தினம் அவர்களின் ஆரம்ப உரையோடும் நகர ஆரம்பித்தது. ஆலயத்தின் பிதாமகனார் சீவரத்தினம் அவர்கள் தன்னையும் தன்னூடாக ஆலயத்தையும் வளர்க்க துணை நின்றவர்களை வரிசைப்படுத்தி வளர்ச்சி சரித்திரத்தை வர்ணித்தவகை அனைவர் கவனத்தையும் கவர்ந்தது. காலை நிகழ்வுகளின் தலைவர் சட்டத்தரணி செ. சிறீஸ்கந்தராசா தமிழின் பெருமைகளை தன்னுரையில் நிலை நிறுத்தி சிறப்பித்தார்.
விழாவை ஒட்டி அன்னிய சூழலில் வளரும் மழலைகள் சிறுவர்களிடையே தொடர்ந்து தமிழ் தவழ ஊக்குவிக்கும் பொருட்டு போட்டி நிகழ்ச்சிகள் 19 வயதான தமிழ் சிறுவர்கள் இடையே நடைபெற்றிருந்தன. பேச்சு, வாசிப்பு, பண்ணிசை, வாசிப்பு, கிராமிய நடனம் , சம்பாசணை என்ற இவற்றின் பரிசு பெற்ற சிறுவர்களின் திறமை சபையின் கரகோஷத்தை பெற்றுக் கொண்டது.
விழாவின் சிறப்பு நிகழ்வாக துறைசார் தமிழ்த்தகைமையாளர்கள் மூவர் கௌரவிக்கப்பட்டனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப்பிரிவு லண்டன் பிபிசி லண்டன் தமிழோசையின் பொறுப்பாளரும் அறிவிப்பாளருமான திரு சோ. சிவபாதசுந்தரம் ஈழத்தில் சற்றடே றிவியூ , லண்டனில் கொற்ஸ்பிறிங் ஆகிய ஆங்கில ஏடுகள் மூலம் விடுதலைப் போராட்ட நியாயங்களை உலகுக்கு உணர்த்தி வரும் பத்திரிகையா-ளர் எஸ். சிவநாயகம் இலங்கையிலும் இலண்டனிலும் சைவ முன்னேற்றச் சங்கங்களூடாக 25 ஆண்டுகளுக்கு மேல் உழைத்துவரும் சமய சமூக சேவையாளர் திரு வ. இ. இராமநாதன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். தங்கப்பதக்கம் பொன்னாடை என்பன அறிவிக்கபட்டு தக்க பட்டங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இவர்களின் சாதனைகள் பத்திரிகையாளர்கள் அஞ்சல் சு. மகாலிங்கசிவம் , புதினம் ஈ. கே. இராஜகோபால் , அதிபர் வை. பொன்னையா ஆகியோர் பொருத்தமான சிறப்பான விரிவான முறையில் விதந்துரைக்கப்பட்டனர். பாராட்டு பாமாலைகள் கவிதைகளாக பவை. ஜெயபாலன் அவர்கள் வழங்கினார்.
மாலை நிகழ்ச்சிகளாக இசை நிகழ்ச்சிகளாக பாட்டு , வீணை , தாள வாத்தியக் கச்சேரி என்பன இடம்பெற்றன. சங்கீத ஆசிரியை கமலினி மனோரஞ்சன் சங்கீதவித்துவான் கலைவாணி இந்திரகுமார் மிருதங்க வித்துவான் நாதமணி முத்து சிவராசா ஆகியோரின் மாணவர்களால் இவை வழங்கப்பட்டன.
திரு. கா. ஜெகதீஸ்வரம்பிள்ளை அவர்கள் தலைமையிலான பட்டிமன்றம் கவிஞர் பவை. ஜெயபாலன் தலைமையிலான கவியரங்கம் செல்விகள் யாமினி வேலுப்பிள்ளை , கனி தெய்வேந்திரன் ஆகியோரின் நடனங்கள் திக. இராஜமனோகரன் புதல்வர்கள் சிவகாமி, அபிராமி, செந்தூரான் ஆகியோரின் மகுராடாசுரன் நாட்டிய நாடகம் என்பன சிறப்பிடம் பிடித்தன.
தமிழ்மொழியும் கலைகளும் எல்லாவகையிலும் சிறப்பிக்கப்பட்ட இந்த முத்தமிழ்விழா தமிழ் ஆர்வலர்கள் ரசிகர்கள் அனைவரின் ஏகோபித்த பாராட்டையும் பெற்றுக் கொண்டது.

**-பவை. ஜெயபாலன்-**

## கருத்தரங்கு

சைவ சமய சமூக நிறுவனங்கள் ஆற்றவேண்டிய பணிகள்

கருத்துரை வழங்குபவர்:

செஞ்சொற்செல்வர்

திரு ஆறு திருமுருகன்

( தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினர்)

காலம்: **16-04-2000 மாலை 4.00 தொடக்கம் 6,00 மணி வரை**


**இடம்: இலண்டன் முத்துமாரியம்மன் ஆலயம்**

அனைவரும் கலந்து அறிவுரை வழங்கிப் புத்துலகம் சமையுங்கள்

# சமயம் ஒரு பார்வை

அ. கிருட்டினன்

தமிழ் இலக்கிய வரலாற்றின் இடைக்காலத் தொடக்கத்தில் தமிழரின் சமய வாழ்வும் கலை வாழ்வும் நாகரிகமும் பல துறைகளில் வளர்ந் தன. அதற்கு முன் இல்லாத ஆாவத்தையும் ஆற்றலையும் ஒளியையும் சமய வாழ்வு பெற்றது. மக்களுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டியது. வாழ்வின் அனைத்துத் துறைகளையும் செம்மை செய்யக் கூடிய ஆற்றலாக உருப்பெற்றது.



***சமய வாழ்வு***

மக்கள்தம் உள்ளங்களைக் கடவுள்பால் காந்தம் இரும்பை இழுப்பது போல் பிடித்திழுக்கச் செய்தன. மக்களும் சமய வாழ்வில் புதியதொரு மகிழ்வை எய்தினர். அதன் வாயிலாக ஆன்ம வாழ்வு என்று ஒன்றிருப்பதைக் கண்டனர். அவ்வாழ்வுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது பரம் பொருளே என்று உணர்ந்தனர். அதன் ஒவ்வொரு அணுவும் மாறிக் கொண்டிருக்கும் இயல்பினதெனக் கண்டனர். உலகை ஆட்டிப்படைக்கும் ஆற்றல் ஆன்ம நெறிக்கு இருப்பதாக உணர்ந்தனர். முயன்றால் மனித அறிவின் அணுகு முறையால் நிலைத்த உண்மையை உணர இயலும் எனத் தேர்ந்தனர். அதனால் மக்கள் தங்கள் கலைகளையும் செல்வ வளங்களையும் சமயப் பணிக்கே உரிமையாக்கினர். சமய வாழ்வுக்குப் பயன்படுத்தப் பெற்ற கலைகள் அனைத்தும் சிறந்த மேம்பாடடைந்தன.

***சமய இலக்கிய வளர்ச்சி***

அக் காலத்தெழுந்த சமய இலக்கியங்களின் வளர்ச்சி மக்களின் சமுதாய வாழ்வை சமயத்தின் அடிப்படையில் பயன்படுத்தின. அவற்றின் பயனாகவே சைவ வைணவ மதங்களுக்கு அடிப்படையாக அமைந்த திருமுறைகள் திவ்வியப் பிரபந்தங்களின் தொகுப்புக்கள் தோன்றின. இந் நிகழ்வு கிபி பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்றது. சிவபெருமானின் முழுமுதற் கடவுள் தன்மையையும் திருவுருவப் பொலிவையும் ஆற்றலையும் அடியார்களைத் தடுத்தாட் கொள்ளும் பேரன்பையும் போற்றும் பக்திச்சுவை நனிசொட்டும் தேவாரம் திருவாசகம் முதலிய பதி கங்கள் தோன்றின. திருமாலின் பரத்து வத்தை எளிதாம் தன்மையாகிய பண்புகளையும் களிப்பும் விளையாட்டும் எங்கும் உள தாம் தன்மை யையும் தோற்றத்தின்



மாண்புகளையும் பக்தர்கள் மீது கொண்ட அளவற்ற அன்பையும் பற்றிக் கனிந்த உள்ளக்களிப்போடு ஆழ்வார்கள் பாடிய அழகிய பாசுரங்களை ஒழுங்கு படுத்தி திவ்வியப் பிரபந்தங்களாகத் தொகுக்கப்பெற்றன.

***சமய பாடல் தொகுப்பு***

அவ்விரு தொகுப்புக்களும் மறைகளின் பொருளையும் உட்கருவையும் அடிப்படையாகக் கொண்டவை. அப்பாடல்களைத் தொகுத்ததின் வாயிலாகத் தமிழர்களுக்கு மறைகள் தமிழிலேயே கிடைத்தன. தமிழ்நாட்டில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஊட்டிய சமய உணர்ச்சிக்கனல் வளர்ந்து பெருந்தீப்பிழம்பாக மாறியது. அதன் ஒளி நாடெங்கும் பரவியது. இவற்றுள் எது முதலாவதாகத் தொகுக்கப்பட்டதற்குத் தெளிவான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை.

தமிழ் நாட்டில் இவ் விரு மறை நெறி வியாசர்களும்

ஏறத்தாழ ஒரே தலைமுறையில் தோன்றித் திருமுறைகளையும் திவ்விய பிரபந்தங்களையும் முறையாகத் தொகுத்தளித்த செயல் தமிழர் பண்பாட்டு வரலாற்றில் நிகழ்ந்ததொரு வியப்பு நிகழ்வென்றே விளம்பலாம். இத்தகைய சமயப் பாடல்கள் தொகுப்புப் பணிக்கு அதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஒழுங்கு படுத்தப் பெற்ற சங்க காலத் தொகை நூல் பணியே வழிகாட்டியாக அமைந்திருக்கலாம்.

***சமய உறழாட்டு***

அதற்கும் முன்னாளில் தமிழ் நாடடில் சமணமும் பௌத்தமும் மிகுதியாகப் பரவி வேரூன்றியிருந்தன. பின்னாளில் சைவமும் வைணவமும் பேராக்கம் பெற்றுத் தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தன. உணர்வுகளில் ஒன்றின. சமணத்துடனும் பௌத்தத்துடனும் உறழாட்டுப்புரிந்து அவற்றின் மேலாண்மையைத் தாழ்த்தினர். சமணமும் பௌத்தமும் வலியிழந்த நிலையெய்திய போதும் அதன் இலக்கியச் சுவடுகள் தொடர்ந்து நிலைத்தன. எனவே சமயப் போராட்டத்தின் விளைவாகவே திருமுறைகளும் திவ்வியப் பிரபந்தங்களும் தொகுக்கப் பெற்றிருக்கவேண்டும்.

***சமய உணர்ச்சி***

உலகிலுள்ள சமயங்களின் பிறப்பையும் வளர்ச்சியையும் நோக்கினால் அனைத்து சமயங்களுக்குமே தொடக்கத்தில் இசையும் கவிதையும் ஆடல்களும் இன்றியமையாக் கருவிகளாக இருந்துள்ளன. பிற்காலத்திலே சமயக் கணக்கர் விரிந்த வழிபாட்டு நெறிகளை வகுத்தனர். கோவில்களில் மனிதனின் ஆன்மீக அறிவையும் பக்திப் பண்பையும் கிளரும் நோக்குடன் நிகழ்வுற்ற ஆகம வழிபாட்டு முறைகளுக்கும் அவற்றுக்கென்று பயன் படுத்தப்பெற்ற நுண்ணிய தமிழ்ப் பண்களாகச் சமைக்கப் பெற்ற இசைத்தமிழ்ப் பெருக்குக்கும் ஏனைய நுண்கலை வளர்வுக்கும் வறுமை, கவலை, பிணி முதலியவற்றை மறந்த மக்களின் களிப்புக்கும் சமயப்பாடல்களே சான்று பகர்கின்றன. அவை கடவுளரையே கவர்ந்தன அப் பாடல்களின் செஞ்சொற் கவியின்பத்திலும் இசை வெள்ளத்திலும் அக்காலத்து மக்கள் மூழ்கித்திளைத்தனர். தம்மையே மறந்து அடிமையாக்கிக் கொண்டனர்.

தமிழர் தம் பண்பாட்டில் சமய உணர்ச்சியின் உரத்தால் பக்தி செழித்து வளர்ந்தது. அது தீஞ்சுவைக் கவியாக மக்களுக்கு இனித்தது. அடியார்களும் தொண்டர்களும் ஆயிரக்கணக்கில் நாடு முழுவதும் சென்று பக்திச்சுவைப் பாடல்களை மக்களிடையே பாடிப் பரப்பாரம் செய்து அவர்களை ஈர்த்தனர். சமய நெறியில் ஈடுபாடு கொள்ளச் செய்தனர். சமயப்பற்று மிகுந்தது. அதன் விளைவாகப் பக்திப் பண்பாடு வேரூன்றியது.

***சமணம்***

சமணர் என்றால் துறவியர் என்று பொருள் . அது துறவை வலியுறுத்தித் துறவு பூண்டோரே வீடுபேறு பெறுவர் என்கிறது. சமணர் கடவுட் பற்றற்றவர் ஆதலால் அவர்கள் நிர்க்கந்தர் அல்லது நிகண்டர் எனப் பெற்றனர். அவர் தம் சமயக் கொள்கைகளை உலகில் பரவச் செய்தனர். அதன் பொருட்டு தீர்த்தங்கரர்கள் என்னும் பெரியோர்கள் அவ்வப்போது தோன்றினர் என்பது அச்சமயக் கொள்கையாகும். சமண சமய மெய்மதத்தில் ஒன்பது உறுதிப் பொருட்கள் கூறப்பெற்றுள்ளன. அவற்றை நவப்பதார்த்தம் என்பர். அவை உயிர், உயிரற்றது, புண்ணியம், பாவம், ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு, சுட்டு, வீடு என்பனவாகும். அப்பொருட்களின் உண்மையை அறிந்து கொள்வது அறிவு எனப்பெறும். அதன் தன்மையை உணர்ந்து கொள்வது காட்சி எனப்பெறும். இவ் விரண்டையும் ஒரு தன்மைத்தாகக் கருதி உள்ளத்தில் கொண்டு ஒழுகுவது ஒழுக்கம் எனப்பெறும்.

***பத்திர பாகு***

பத்திர பாகு முனிவர் என்பவர் சந்திர குப்தர் (கி மு 322–298) என்னும் மௌரிய அரசில் சமயத் தலைவராக இருந்தார். அவர் கி மு 317 முதல் 297 வரை சமண சமய தலைவராக விளங்கினார். அம்முனிவர் காலத்தில் தான் சமண சமயம் தமிழ் நாட்டில் புகுந்தது என்பர். அவர் தம் சீடர்களில் ஒருவராகிய விசாக முனிவர் என்பவரைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி சோழ பாண்டிய நாடுகளில் சமண சமயக் கொள்கைகளை பரவச்செய்தார். தமிழ் நாட்டின் தென் பகுதியில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் சமணர் காலத்தில் பொறிக்கப்பெற்றவை. அவை கி மு மூன்றாம் நூற்றாண்டு முதல் எழுதப் பெற்றவை என்று ஆய்வர். கருதுவர். மகாவமிசம் என்னும் பௌத்த சமய நூல் இலங்கையில் கி மு மூன்றாம் நூற்றாண்டுக்கும் முன்னரே சமண சமயம் இடம் பெற்று இருந்ததாகக் குறிப்பிடுகிறது. எனவே தமிழ்நாட்டின் வழியாகவே சமணம் இலங்கை சென்றிருக்க வேண்டும். அக்காலத்திலேயே தமிழ் நாட்டின் வடமேற்கிலுள்ள சிரவண பெலகொலா என்னும் பகுதியில் சமணர்கள் வாழ்ந்ததாக கூறப்பெறுகிறது.

***சமண மெய்மதங்கள்***

கி.மு நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சமணர் தமிழ் நாட்டிற்கு வந்தனர். சில காலம் சென்ற பின்னர் இலக்கிய வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டனர். சமணர் கொண்டு வந்த வாழ்வியல் மையங்கள் மக்களை மிகுதியும் கவர்ந்து நிலைபெறச் செய்தன. எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்னும் சங்கஇலக்கியங்களைக் கொண்டு பார்த்தால் சங்க காலத்தில் சமணர் தமிழ் மக்கள் வாழ்வியலில் மிகுந்த

ஏற்பு வளம் பெறவில்லை என்பதை அறியலாம். அக்காலத்து தமிழ் , மக்களின் முறை சமணரின் வெறுப்பையே பெற்றிருந்தது. சமணர் கொலை, பொய் களவு, குரு பழிப்பு ஆகிய ஐங்கொடு வினைகளை ஒதுக்கினர். உலகம் இளமை, யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையைப் போற்றினர். தூய வாழ்வியல் நெறியை மேற்கொண்டனர். அத்தகையோர் போர், வேட்டை, காதல், காமம், கொள்ளை, கள், ஊன் என்று வாழ்ந்த தமிழ் மக்களை அறவழியில் அழைத்துச் செல்ல இயன்ற அளவுக்கு முயன்று தோல்வியையே தழுவியுள்ளனர். சங்க மருவிய காலமே சமணர்க்கு ஏற்புடையதாக அமைந்தது. அக்காலத்தில் எழுந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை அறநூல்களேயாகும். அவை சமணரால் எழுதப் பெற்றவை யாகும்.

***உலோக விபாகம்***

விக்கிரமன் என்னும் வேந்தன் கி பி 524 அளவில் இறந்தான். அந்நாளில் பூச்யபாதரின் மாணவர் வச்சிரநந்தி என்பவர் சமண சங்கத்தை தோற்றுவித்தார். தேவசேனர் என்பவர் எழுதிய திகம்பர தரிசன சாரம் என்னும் நூல் அச்சங்கம் தென் மதுரையில் நிறுவப் பெற்றதெனக் கூறுகிறது. அச் சங்கத்தின் வாயிலாகத் தென்னாட்டில் சமண சமயம் பரவிற்றென்ற கருத்தும் உண்டு உலோக விபாகம் என்னும் சமண நூல் மைசூர் கல்வெட்டியல் துறையினரால் கண்டெடுக்கப் பெற்றுள்ளது. அதனைப் படியெடுத்து எழுதியவர் தான் பாமலி நாட்டில் பாடலிகையிலிருந்து எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார். சங்க நாளில் சித்தூர் மாவட்டத்தின் கீழ்ப்பகுதி பாண நாடாக இருந்தது. அதனை ***வடா அது நல்லோற் பாணன் நன்னாடு*** என மாமூலரென்ற சங்கப் புலவர் குறித்துள்ளார் இடைக் கல்வெட்டுக்களும் அப்பகுதியை ஆண்டவர் வாணாதிராயர் என்றும் குறிப்பிட்டுள்ளன. பிற்காலத்தில் அப் பாணர்கள் சோழநாட்டிலும் பாண்டிய நாட்டிலும் வாணாதிராயர் என்றும் வாண கோவரையரென்றும் நிலை பெற்றிருந்தனர். அதனால் சோழ நாட்டுத் திருப்பாதிரிப்புலியூர் ஒரு காலத்தில் பாணரசரின் கீழ் இருந்திருக்கலாம். எனவே பாடலி பாணாட்டதென உலோக விபாகத்தைப் படியெடுத்தவரின் கூற்றை ஏற்றுக்கொள்ளலாம்.

இந்த உலோக விபாகம் படியெடுத்து எழுதிய காலம் கி பி 458 என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. அந் நூல் தோன்றிய காலம் அதற்கும் முன்னதாக இருக்க வேண்டும். எனவே பாடலிச் சமய சங்கம் மதுரைச் சமண சங்கத்தை விட காலத்தால் முற்பட்டதாகக் கொள்ளலாம். இப்பாடலிச் சமண சங்கம் தோன்றிய பின்னரே தென்னாட்டில் சமண சமயம் காலூன்றிய தெனலாம். பல்லவன் மகேந்திரவர்மனையும் பாண்டியன் நெடுமாறனையும் திருநாவுக்கரசரையும் தொடக்கத்தில் தன் கண் தழுவிக் கொள்ளும் சால்பும் பெருமையும் சமண சமயம் பெற்றிருந்ததென்பதை அறியலாம்.

***மத்த விசாலப் பிரகடனம்***

தென்னாட்டில் அந்நாளில் பரப்பப் பட்ட சமயம் திகம்பர சமணமாகும். இந்நாட்டில் ஐந்தாம் நூற்றாண்டில் சிம்ம சூரி என்பவரும் சருவநந்தி என்பவரும் வடமொழியிலும் முற்கருமிய மொழியிலும் (பிராகிருதம்)மொழியிலும் பெரும் புலமை பெற்றுவிளங்கினர். ஏழாம் நூற்றாண்டில் பாடலிச் சமண சங்கத்தில் நாவுக்கரசர் தலைமையிடம் பெற்றிருந்தார். பல்லவ வேந்தருள் முதலாம் மகேந்திரவர்மன் சமண சங்கத்தாரின் வடமொழிப் புலமையில் மதிப்பும் பற்றும் கொண்டிருந்தான். அவனும் சிறந்த வடமொழிப் புலமையாளனாக விளங்கினன். அதனால் சமண சமயத்தினர் அவன் மீது பேரன்பு கொண்டிருந்ததில் வியப்பில்லை. அவர்கள் மகிழ்வு ஏய்தும் பொருட்டு மகேந்திர வன்மன் மத்தவிலாச பிரகடனம் என்னும் நாடக நூலை எழுதியிருத்தல் வேண்டும்.

***சங்கங்கள்***

பண்டைக்காலத்தில் சமண சமயம் தமிழ்நாடு முழுவதும் ஏற்புவளம் பெற்றிருந்தமைக்கு இலக்கியச் சான்றுகளும் கல்வெட்டு சான்றுகளும் அழிந்தும் அழியாமல் ஆங்காங்கே காணப்பெறும் சமணக்கோவில்களும் சமணத்தீர்த்தங்கரர்களின் திருவுருவங்களும் சான்று பகர்கின்றன. அந்நாளில் தமிழ் நாட்டில் சாதி வேறுபாடுகள் பாராட்டப் பெறவில்லை. சாதி வேறுபாட்டைப் பாராட்டாத சமணசமயம் விரைந்து பரவியதில் வியப்பில்லை. சமணர் உணவு, உறைவிடம், மருந்து, கல்வி என்னும் நான்கு அறங்கள் செய்வதைத் தமது பேரறமாகக் கொண்டு ஒழுகினர். அவர்கள் எந்த நாட்டிற்குச் சென்றாரோ அந்த நாட்டில் வழங்கிய தாய் மொழியிலேயே தங்கள் சமயக் கருத்துக்களை வெளியிட்டனர். அதனால் மக்கள் எளிதில் சமயக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டனர்.

***அறநூல்கள்***

பார்பனியர் தம் மறை நெறிச்சமய நூல்களை மக்களுக்கு விளங்காத கலப்பு மொழியில் எழுதிக் கொண்டனர். அந்நூல்களை மற்றவர்கள் படிக்கக்கூடாது. ஓதுவதைக் காதால் கேட்கக்கூடாது என்று மறைத்தனர். அவ்வாறு படிப்பவர்களின் நாக்கை அறுக்க வேண்டும் என்றனர். கேட்பவர்களின் காதில ஈயத்தைக் காய்ச்சி உருக்கி ஊற்ற வேண்டும் என்றனர். ஆனால் சமண சமயம் அதற்கு மாறாகப் பரந்த பண்புடன் தமது சமய நூல்களை அந்தந்த நாட்டின் தாய்மொழியில் எழுதினர். மக்கள்

அறியாத வேற்று மொழியில் மதக் கொள்கைகளை மறைத்துவைப்பதை பெருங் குற்றமாகக் கருதினர். பல்வேறு அறநூல்களையும் நிகண்டுகளையும் காப்பியங்களையும் ஒழுக்க நூல்களையும் தமிழில் எழுதி நாடு முழுவதும் பரவச் செய்தனர். அதன் பொருட்டு சமணத் துறவியர் ஊர் ஊராகச் சென்றனர். தம் சமயக் கொள்கையை சங்கம் வைத்துப் பரப்பினர். சமணர் சங்கம் ஒரே கூட்டமாக இருந்தது. பின்னர் அது நந்திக் கணம் சேனகணம், சிம்மகணம், தேவகணம் என நான்காகப் பிரிக்கப் பெற்றது.

***சமணர் அறிவுரை***

கி பி ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகள் சமய வாரலாற்றில் ஓர் இன்றியமையாக் காலப்பகுதியாகும். அப்பொழுது அன்றைய வட இந்தியாவில் உயிர்ப் பலியிட்டனர் யாகங்களைச் செய்தனர் அவற்றின் வலிமையால் கடவுளிடமிருந்து வேண்டிய அருட்பேற்றினைப் பெறலாம் என்ற கருத்துடைய மறைநெறியே முதன்மைப் பெற்றுவிளங்கியது. இப் பூவுலகில் தேவர்களாகப் பார்ப்பனர்கள் கருதப்பெற்றனர். அவர்கள் மக்கள் அறியாத கலப்பு மொழியையே சமய வழிபாட்டு நெறிகளுக்குப் பயன் படுத்தி வந்தனர். இத்தகைய மறை(வைதீக) நெறிச் சமயத்துக்கு எதிராக சமணத்தை நிறுவிய மாகாவீரரும் பௌத்தத்தை நிறுவிய புத்தரும் கொல்லாமை நெறியைப் போற்றி அன்பு வாழ்க்கை நடத்தினாலே மனிதன் உய்வு பெறலாம் என்ற அறிவுரையை வழங்கினர். கலப்பு மொழியை கடவுள் மொழி என்று பார்ப்பனர் கூறிய கருத்தைப் புறக்கணித்தனர். மக்கள் பேச்சு வழக்கிலிருந்து முற்கருமியம் (பிராகிருதம்) பாலி மொழிகளையே இருவரும் முறையே பயன் படுத்தினர். ஒழுக்கத்தை பேணிக்காத்தலும் மக்களின் பேச்சு மொழிகளை வளர்த்தலும் சமண சமயத்தின் குறிக்கோளாக அமைந்தன. பார்ப்பனரின் மறை நெறிச் சமயம் பொது மக்களை ஒதுக்கியது. சமண சமய நெறிகள் பொது மக்களிடம் அவர்களின் பேச்சு மொழி வாயிலாகச் சென்று அவர்கள் உய்யும் நெறியைக் காட்டியதால் வெகு விரைவில் செல்வாக்குப் பெறலாயிற்று.

***போராட்டங்கள்***

அந்நாளில் வட நாட்டில் மறை நெறி எனப்படும் பார்ப்பனிய சமயமும் தேராவாதம் எனப்பெறும் பௌத்த சமயமும் மற்கலி உண்டாக்கிய ஆசிவக சமயமும் சமண சமயம் போன்று தோன்றி வளர்ந்தன. பின்னர் தென்னாட்டிற்குள் புகுந்தனர். அவை தொடக்க முதலே ஒன்றோடொன்று பகை உணர்வு கொண்டிருந்தன. அவை போரிட்டு ஒன்றையோன்று அழிக்க முயன்றன. அந்தச் சமயப் போர் தமிழ் நாட்டில காலந் தொட்டுத் தொடர்ந்தது. தென்னாட்டில் நிகழ்வுற்ற சமயப் போரில் ஆசீவக சமயம் முதன் முதலில் ஆற்றல் குன்றி அழிந்து விட்டது. மறை நெறிப் பார்ப்பனருக்கும் பௌத்தருக்கும் இடையே யிருந்த சமயக் காழ்ப்பிற்கும் மறைநெறிப் பார்ப்பனருக்கும் ஆருகதருக்கும் இடையிருந்த சமயப் பகையுணர்வுக்கும் மணி மேகலை சான்று பகர்கின்றது. சமண சமயத்தைக் கண்டிக்க குண்டலகேசி எனனும் நூலை பௌத்தர் இயற்றினர். பௌத்த சமயத்தைக் கண்டிக்க நீலகேசி என்னும் நூலைச் சமணர் இயற்றினர்.

தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளாக மறைநெறி பௌத்தம் சமணம் என்னும் மும்மதங்களுக்குள் போராட்டங்கள் தொடர்ந்தன. அப்போராட்டத்தில் மறைநெறிச்சமயம் பின்னடைந்து அழிந்து போகும் நிலையெய்தியது. மறை நெறிப் பார்ப்பனர் உயிர்க்கொலை வேள்விகளைச் செய்து வந்தனர். பிறப்பினால் ஏற்றத் தாழ்வுகளைப் பாராட்டினர். தங்கள் தங்கள் மறையைத் தாங்கள் மட்டுமின்றிப் பிறர் படிக்கக்கூடாது என் மறைத்து வைத்தனர். இவையே மறை நெறி பின்னடைவிற்கு காரணங்களாக அமைந்தன. பார்ப்பனர் பொன் கொடை நிலக்கொடை பசுக்கொடை மகட் கொடை முதலியவற்றைப் பெறுவதில் மிகுந்த ஆர்வக் குறியுடையவராகவும் இருந்தனர். பௌத்தரும் சமணரும் பொதுமக்களிடம் எதனையும் எதிர்கொள்ளாமல் கல்வி மருந்து முதலிய கொடைகளை வழங்கினர். மேலும் வட நாட்டுப் பார்ப்பனர் ஊனுணவை உண்டு வந்தனர் அதுபோல தென்னாட்டுப் பார்ப்பனரும் ஊனுணவு உண்டு வந்தனர். எனவே மறை செநறிச் சமயம் தனது ஏற்பு வளத்தை இழக்கத் தொடங்கியது. பின்னர் பௌத்தமும் சைவமும் வன்மையாகப் போரிட்டு வந்தன. சிறிது காலத்திற்குள் பௌத்தச் சமயத்தின் ஏற்பு வளமும் குன்றி விட்டது. பௌத்த சமயத்தில் ஏற்பட்ட சில பிளவுகளால் அதன் வலிமை குன்றியது.

கி பி எட்டாம் நூற்றாண்டில் சமண சமயத் தலைவரான ஆசாரிய அகளங்கர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தார். அவர் பௌத்த கோவிலாக இருந்த காமாடசியம்மன் ஆலயத்தில் பௌத்த பிக்குகளுடன் சமய உறழாட்டுச் செய்தார். இவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் மறைநெறி பௌத்தம் என்னும் சமயங்கள் பின்னடைந்து சமண சமயம் சிறப்புற்று விளங்கியது.

***சமணம் வீழ்ச்சி***

அந்நளில் நாவுக்கரசர் தருமசேனரெனப் பெறும் நிலையினின்றும் நீங்கி சைவராக மாறினார். அவரைப் பின்பற்றியே மகேந்திரவர்மனும் சைவனாக மாறி னான். அந்நிகழ்வே சமண சமய வீழ்ச்சிக்கு அடிகோலிய தெனலாம். காலச் சூழலில் சமணம் தாழ்வு நிலை எய்தியது.

சைவம் உயர் நிலை அடைந்தது. சமணத்தை அழித்துச் சைவத்தை நிலைபெறச் செய்ய சமணர் குறைகளை நாடெங்கிலும் பரப்ப சைவத்தினர் முற்பட்டனர். நாவுக்கரசரோடு ஞானசம்பந்தரும் சேர்ந்து நாட்டில் சமண சமயத்தை எதிர்த்துப் பாட்டாலும் உரையாலும் சமயப்பணி புரிந்தனர். அவர்களுடைய பாடல்கள் தமிழகத்தில் நிலையான இடத்தைப் பிடித்தன. சம்பந்தரால் சமணர் களுவேற்றப்பட்டனர். சைவனாக மாறிய மகேந்திரவர்மன் பாடலியிலிருந்த சமணப் பாழிகளை அழித்தான். அதனால் கிடைத்த பொருள் கொண்டு திருவதிகையில் குணபதேச்சுவரம் எனத் தன் பெயரில் கோயிலொன்றைக் கட்டினான்.

***குகை வாழ்வு***

சமணருடைய சங்கத்தின் நலிவுக்குக் காரணமாக இருந்த சம்பந்தரைச் சைவ சமயக் குரவர் நால்வரில் முதல்வராக வைத்து சைவ நூல்கள் பராட்டின. சைவத்திரு முறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியும் சம்பந்தர் பாடல்களையே முதல் மூன்று திருமுறைகளாக தொகுத்தார். அவரைப் பற்றி பல பிரபந்தங்களையும் பாடினார். பக்தி இயக்கத்தை நடாத்திய நாயன்மார்களின் வரலாற்றை புனைந்துரைத்த பெரியபுராணத்திலும் சம்பந்தர் வரலாறு மிக விரிவான விளக்கத்தைப் பெறுகிறது. தமிழ் மக்களில் பெரும்பாலோர் சைவராக மாறினார்கள். அதன் தாக்கம் சமணரை தமிழ் நாட்டில் இல்லையென்னும் நிலையை ஏற்படுத்தியது. சமணர்கள் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் குகைகளை அமைத்து வாழ்ந்தனர். அதற்குரிய சான்றுகள் பல இன்றும் உள்ளன.

மகேந்திர வர்மனுடைய கல்வெட்டுக்களும் பல இடங்களில் காணப்பெறுகின்றன. அவன் சைவனாகி சமண சமயத்தோடு மாறுபட்ட கருத்துடையவனாக வாழ்ந்தான். எனவே அவனது அன்பும் அரவணைப்பும் சமணர்களுக்கு கிட்டாத நிலை தோன்றியது. அதனால் அச்சமணச் சான்றோர் ஊர்ப்பகுதிகளை ஒதுக்கி குகைகளில் வாழத் தொடங்கியிருக்க வேண்டும். நடுநிலையுடன் ஆராயும் தமிழர் எவரும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சமணர் செய்த தொண்டைப் போல வேறு எந்தச் சமயத்தவரும் செய்யவில்லை என்ற முடிவை ஏற்பர்.

***பௌத்தம்***

அன்பு மானிடத்துவம் சமத்துவம் முதலியகொள்கைகளை அறிவுறுத்த வந்த மதம் பௌத்தமாகும். அது மறைகால வழிபாட்டு முறையான யாகங்களில் நிகழ்வுற்ற உயிர்ப்பலியை மிகவும் கண்டிக்கிறது. உயிர்ப்பலியீட்டுச் சடங்கின் நுட்பங்கள் மிகுந்த நிலையில் பார்ப்பனரின் சொல் வலிமை பெற்று வந்தது. பௌத்தம் பார்ப்பனருக்கு உயர்வு வழங்குவதை முற்றிலும் புறக்கணித்து ஒதுக்கியது. பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லையென அறிவுறுத்தியது. மனிதருடைய செயல்களே உயர்வு தாழ்வுகளை நிலை நிறுத்துகின்றன எனவும் பௌத்தம் கற்பித்தது. பார்ப்பன சமயக் கருத்துக்களை கலப்பு மொழியில் மறைபொருளாக வைத்துப் பேணி வந்தனர். பௌத்தர் மக்கள் வழங்கும் பேச்சு வழக்கிலே தம்முடைய அறிவுரைகளை வலியுறுத்தினர்.

பௌத்தத்தில் தனி மனித நோக்கு சமுதாய நோக்கு என்னும் இரு பிரிவுகள் தோன்றின. இலங்கை பர்மா தாய்லாந்து முதலிய நாடுகளில் காணப்பெறும் தேராவாத பௌத்தம் தனிமனித நோக்குடையது. ஈண்டுப் புத்தர் தவம் புரியும் முனிவராகவே காட்சியளிக்கிறார். பௌத்தத்தில் இப்பிரிவு புத்தரை தனி மனிதராகவும் தலைவராகவும் மட்டுமே கண்டது. கடவுளாகவே உலகை உய்விக்க வந்தவராகவோ காணவில்லை. வட இந்தியாவில் உருவாகி நடுவண் ஆசியாவிலும் தூரகிழக்கு நாடுகளிலும் பரவிய மகாயன பௌத்தம் சமுதாய நோக்குடையது. அது மானிடத்துயர்களை கண்டு அமைவு பெறாமல் அவர் வாழ்வில் புகுந்து துன்பங்களைத் துடைத்து வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. எல்லோரும் உயர்வடைய வேண்டும் என்ற குறிக்கோளும் எல்லோரும் பயன் பெறும் வகையில் பணிசெய்ய வேண்டும் என்ற பரந்த மனவியல்பும் பௌத்தத்தின் இப்பிரிவில் வலியுறுத்தப் பெறுகின்றன.

***சிந்தனை உரிமை***

பௌத்தமும் சமணமும் முழுமையாக வளர்ச்சி பெற்ற மெய் மறைகளாக உருவாக்கம் பெற்றன அத்துடன் பல சமய நிறுவனங்களையும் ஏற்படுத்திக் கொண்டன. வட இந்திய மண்ணில் பௌத்தம் சமணத்தைக் காட்டிலும் மிகுந்த துணைத் தரவையும் பெருமையையும் பெற்று விளங்கியது. பார்ப்பனர்கள் பலர் சமயம் மாறினர். அவருள் பெரும்பாலோர் பௌத்தத்தையே மேற்கொண்டு ஒழுகினர். தம்முடைய பழைய சமயம் மெய்மம் என்பவற்றின் வலிவின்மையை உணர்த்த உதவினர். சமணத்தைக் காட்டிலும் இயன்றளவு சிந்தனை உரிமை பௌத்தத்திலும் இருந்தது. அதனால் அது பல்வேறு சிந்தனைகளைத் தோற்று விக்கக்கூடியவகையில் அமைந்தது. எனவே பௌத்தத்திற்கும் பார்ப்பனியத்திற்கும் இடையே நீண்டதாகவும் நுணுக்கமாகவும் உறழாட்டுக்கள் நிகழ்ந்தன. கி பி ஆறாம் நூற்றாண்டில் ஓத்துக்கள் (உபநிடதங்கள்) ஒருபுறம் மறை நெறிச் சமயத்தை வளர்த்து வந்தன. பௌத்தமும் சமணமும் அதனை எதிர்த்து மெய்க் கொள்கைகளை உருவாக்கத் தொடங்கின. எனவே முந்திய மெய்ம வளர்ச்சியில் பௌத்தத்திற்கு தனிச்சிறப்பு

ஏற்பட்டது. அச்சமயங்களின் உட்பிரிவுகளிலும் உறமாட்டுக்கள் நிகழ்ந்தன. அவை சமய மெய்மங்கள் வளர்ச்சி பெற உதவின. புத்தருடைய அறிவுரைகள் அனைத்தும் பாலி மொழியில் திரிபீடமாகத் தொகுக்கப்பெற்றன. அபிதருமம் என்னும் புத்த மெய்மம் கி பி நான்காம் நூற்றாண்டில் வசுபந்து கோசம் என்னும் பெயரில் கலப்பு மொழியில் வரையப்பட்டது கி மு இரண்டாம் நூற்றாண்டில் ஓத்துக்களைக் கற்றறிந்த பார்ப்பனர் கலர் பௌத்த சமயத்தை தழுவினர். ஓத்துக்களுக்கு ஏற்ற முறையிலேயே பௌத்தத்தை விளக்கிய அவர்கள் கலப்பு மொழிகளிலேயே தம் நூல்களை எழுதினர். பௌத்தசமய மெய்மப் பிரிவுகள் பதினெட்டுக்கும் குறையாமல் இருந்தன. எனினும் அவற்றில் இந்து சமயத்தோடு தொடர்ந்து போராடி வந்தவை நான்காகும். அவை வைபாடிகம் சௌத்திராந்தகம் யோகாசாரம் மாத்யாமிகம் என்பனவாகும். இந்திய மெய்மத்தின் அடிப்படையாக இரண்டு அல்லது மூன்று மரபுகளை கூறலாம். ஓத்துக்களில் உருப்பெறும் ஆன்மீக உறழாடலைக் கொண்ட (நைராத்மியம்) பௌத்தமுமே அடிப்படைகளில் மிக இன்றியமையாதனவாகும். சமணம் ஒருவகையில் இவையிரண்டுக்கும் நடுநின்று அநேகாந்தாத்ம உறழாடலை அறிவுறுத்தியது.

**துறவு இயக்கம்**

தேவர்களை வணங்குவதைக் கண்டித்த புத்தர்தேவாதி தேவராக மாற்றப்பெற்றார். பௌத்த அறிவன் கோயில்கள் எழுந்தன. மறை நெறிக்கால் இலக்கியங்களில் படிம வழிபாடு இருந்தமைக்குசான்றுகள் இல்லை. கி பி முதலாம் நூற்றாண்டிலிருந்து இந்து சமயக் கோவில்களும் உருவ வழிபாட்டு முறைகளும் பரவின. இந்தியாவில் தோன்றிய மதங்களுள் பௌத்தம் மட்டுமே உலக மதம் என்று போற்றக்கூடிய தகுதியைப்பெற்றது.

அது ஆசியாக்கண்டத்தின் பல பகுதிகளிலும் பரவி இன்றும் உயிர்த் துடிப்புடன் மிளிர்கின்றது.

இந்தியாவின் மிக அண்மைக்காலம் வரை பல நூற்றாண்டுகளாக பௌத்தம் தனிச்சமயமாக விளங்கவில்லை

புத்தர் அறிவுறுத்தியதாகப் பாலி மொழியில் காணப்பெறும் பௌத்தம் தனிமனித தேவைகளை உள்ளடக்கிய சமயமாக அமையவில்லை. குடும்ப பாசத்தை கடந்து விடுதலை பெறுவதற்குரிய துறவு இயக்கமாகவே அது அமைந்தது. ஆனால் மறை நெறிச் சமயமோ இன்மை மறுமை என இரண்டு காலத் தேவைகளைக் கொண்டிருந்தது. மேலும் தனிப்பட்ட வாழ்வியல் தேவைகளை மட்டுமின்றி அரசியல் சமுதாயத் தேவைகளையும் உள்ளடக்கிய நிலையில் அமைவு பெற்றிருந்தது. பௌத்தத்தில் அறநெறிக் கொள்கையும் உறழாடல் வன்மையும் கவர்ச்சியுடையவனவாக இருந்தன. எனினும் அதன் சமுதாய நோக்கு வளர்ச்சி அடைந்த பின்னரே கோடிக்கணக்கான மக்களின் துணைத்தரவைத் தன்பால் ஈர்க்க முடிந்தது. அரசர்கள் வள்ளல்களின் துணைத்தரவுகள் பௌத்தத்திற்குக் குறைந்த போது பௌத்தம் அழியத் தொடங்கியது. இது பொதுமையான வரலாற்றுண்மையாகும்.

பௌத்தத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் அந்நெறியாளர்களின் வியத்தகு அறிவிலும் தூய வாழ்விலும் தங்கியிருந்ததென்பதும் வரலாற்றுண்மையாகும். பேரரசர் அர்சவர்த்தனன் சைவனாக இருந்தார். எனினும் தன் காலத்தில் வாழ்ந்த திவாகரமித்திரர் என்னும் பௌத்த பெரியாரின் ஏற்பு வளத்தால் கவரப் பெற்றார். சைவர்கள் தங்கள் சமய நூல்களின் மரபு நெறிகளைக் காப்பதற்குத் திவாகர மித்திரரை அணுகி பாடம் கேட்கத்தக்க புலமை பெற்றிருந்தனர். பௌத்த பிட்சுக்கள் அரசியல் சூழ்ச்சிகளில் ஈடுபட்டதால் அதன் நன்மை தீமைகளை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பௌத்தர்கள் பொதுவாக பிற சமயங்களைப் போற்றினர். எனினும் அவர்களில் தீவிரைவாளிகள் மறைநெறி சமயத்தவர் மீது பகைமை பாராட்டியதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன.

இந்து சமயக் கடவுளரைப் பௌத்த சமயக் கடவுளர் இழிவு படுத்துவதாகக் காட்டும் சிற்பங்கள் கிடைத்துள்ளன. உலோகேசுவரர் சிவபெருமானையும் பார்வதியையும் உதைக்கும் சிற்பமும் திரைலோக்கிய விசயர் கதறும் பிள்ளையாரை நசுக்கும் சிலையும் நாளந்த பல்கலைக் கழகத்தில் காணக்கிடைக்கின்றன. இத்தகைய சிற்பங்கள் பௌத்தர்கள் மீது சைவர்களுக்குப் பகை உணர்ச்சி ஏற்படவே வழிவகுத்தன.

**கல்வெட்டுக்கள்**

பௌத்தம் சமணம் முதலிய புறச் சமயங்களை எதிர்த்து நின்ற இந்து சமயப்பிரிவுகள் தம்மிடையே ஒருவகை ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டன. அசோகப் பேரரசன் காலத்தில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பௌத்தம் பரவத் தொடங்கி கி பி மூன்றாம் நூற்றாண்டு வரை வளர்ந்தது. குப்தர் ஆட்சிக் காலத்திலிருந்து பௌத்தம் முதலியன வீழ்ச்சி அடையத் தொடங்கியது. இந்து சமயம் எழுச்சி நிலை எய்தத் தொடங்கியது கி மு 300க்கும் கி பி 300க்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியனவாக இன்று 1500 கல்வெட்டுக்கள் இந்தியாவில் கிடைத்துள்ளன. அவற்றுள் பௌத்தம் சமணம் தொடர்பற்றவை ஐம்பதுக்கு குறைவேயாகும். கி பி 300 முதல் கி பி 800க்கு இடைப்பட்ட காலத்தில் கிடைத்த இந்தியக் கல்வெட்டுக்களின் நிலைமை முழுவதுமாக மாறிவிட்டது. பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் சைவ வைணவம்

தொடர்புடையனவாக உள்ளன. எனவே இந்து சமயப் பிரிவுகள் வெற்றி பெற்றமைக்கு காரணம் அவை ஒன்று பட்டு நின்ற நிலையேயாகும்.

தென்னாட்டில் பல்லவ வேந்தருள் பலர் சைவராகவும் பௌத்தராகவும் வைணவராகவும் இருந்துள்ளனர். அவர்களுள் தமிழக வரலாற்றோடு முதன் முதலாக இயைபு பெற்றவர் சிம்ம விட்ணு என்னும் அரசராவர். அவர் முன்னோருள் புத்தவன்மன் என்பவன் தமிழகத்துள் புகுந்து சோழர்களை வென்றதாகச் சில செப்பேடுகள் கூறுகின்றன எனினும் அரசு அமைத்து நிலை பெற்ற தற்குரிய சான்றுகள் இல்லை.

பல்லவர் காலத்தில் தமிழகத்தில் பௌத்தமும் சைவமும் பரவி இருந்தன. இவ்விரண்டினுள் பௌத்த சமயம் சமண சமயத்திற்கு முன்பே தென்னாட்டில் பரவியதென்பது வரலாற்று முடிவாகும். கி பி நான்காம் நூற்றாண்டில் (கி பி 399-414) பாகியன் என்னும் சீனர் தென்னாட்டிற்கு வருகை தந்தார். அவர் தான் கேட்ட சில வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். அக்குறிப்பு அந்நாளில் தென்னாட்டில் வீறு கொண்டிருந்த அரசு பல்லவ அரசரெனக் குறிப்பிடுகின்றது. அது கிருட்டினா குண்டூர் மாவட்டத்தின் நாகார்ச்சுனக் கொண்டாவில் ஒரு பௌத்தப் படிமம் இருந்தது என்பது அவருடைய குறிப்பால் அறியலாம் பல்லவர் மறை நெறிச் சமயத்தவராகக் காணப்பெற்றனர். எனினும் அவர்கள் வேற்றுச் சமயங்கள் மீது காழ்ப்புணர்வு கொள்ளாமல் தம்மால் இயன்ற அரசியல் துணைத் தரவையளித்து வந்தனர். கி பி ஏழாம் நூற்றாண்டில் தென்னாட்டிற்கு வந்த சீனர் யுவான்சாங்கு என்பவர் பல குறிப்புக்களை எழுதிவைத்தார். அவர் ஆந்திரா நாட்டிற்கு வந்த நாளில் அந்நாட்டில் இருபதுக்கும் குறையாத அறவன் கோயில்கள் இருந்தன. அவற்றுள் மூவாயிரத்துக்கும் குறையாத புத்தத் துறவிகள் வாழ்ந்தன். வேங்கி நாட்டில் வெங்கி நகர்க்கு அண்மையில் ஒரு புத்தசங்காராமம் சிறப்புற்றுத் திகழ்ந்தது. அமராவதிக்கு அருகிலுள்ள தரணிக் கோட்டையில் புத்தச் சங்கங்கள் பல இருந்தன. அவை பாழ்பட்டுக் கிடந்தன. மிகச்சில சங்கங்களில் மட்டுமே பௌத்தர்கள் இருந்தனர்.

***நியாய பாடியம்***

தமிழ் நாட்டின் நுழைவாயிலில் வடக்குக் காஞ்சி மாநகர் இனிய காட்சியகமாக விளங்கியது. அந்நகர் கி பி ஆறு ஏழாம் நூற்றாண்டுகளிலேயே கல்வியில் புகழ் பெற்று விளங்கியது. பௌத்தச் சமய நூலாகிய நியாய பாடியம் எழுதிய வற்சாயனர் காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட திராவிட நாட்டவர் எனப் பெற்றார். திக்கநாகர் தருமபாலர் போதிதருமர் முதலியோர் காஞ்சியைச் சூழ்ந்த தமிழ்நாட்டுப் பெருமக்கள் ஆவார். வட நாட்டில் புத்தபெருமான் தோன்றிப் பௌத்த சமயம் தோற்றுவித்து மக்களுக்கு அறிவுறுத்திய அந்நாளில் காஞ்சியிலும் அக்கருத்து பரப்பப் பெற்றதென அறிகிறோம். பௌத்த பெருமானே காஞ்சிக்கு வருகை தந்து பௌத்த அறத்தை அறிவுறுத்தினார் எனவும் உரைப்பர். சிங்கள நாட்டு மகாவமிசமும் பாகியன் எழுதிய குறிப்புக்களும் பல்லவர் ஆட்சி தோன்றும் முன்னரே பாண்டிய நாட்டில் பரவியிருந்ததெனக் குறிப்பிடுகின்றன.

பல்லவர் காலத்தில் தமிழ் நாட்டிற்கு வந்த யுவான் சாங்கு என்பவர் எழுதிய குறிப்புக்களுள் சில காஞ்சி மாநகரைப்பற்றியுள்ளன. காஞ்சியைச் சுற்றியுள்ள நாடு திராவிடநாடு எனப்பெற்றது. நிலம் மிகுந்த வளமுடன் திகழ்ந்தது. பெரும் பொருள்கள் விளைந்தன. அந்நாடு மிகுந்த வெப்பம் உடையது அங்கு வாழ்ந்தவர் மன வலிமை மிக்கவர். உண்மை ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தனர். கல்வி வேள்விகளில் சிறந்தனர். புகழ் பல உடையவராக இருந்தனர். அந்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட சங்கராமங்கள் இருந்தன. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட துறவிகள் தேராவாத நூல்களைப் பயின்றனர். சமணர் உள்ளிட்ட ஏனையோர் கோவில்கள் எண்பதுக்கும் குறையாமல் இருந்தன. சில பகுதிகளில் திகம்பரச் சமயத்தைப் பின்பற்றினோர் இருந்தனர். புத்தர்தாம் வாழ்ந்த நாளில் அடிக்கடி அங்கு வந்து சென்றார். அவர் உரைத்த அறிவுரைகளால் பலர் பௌத்தராயினர் என்று எழுதியுள்ளார். பௌத்தமன்னரான அசோகனும் காஞ்சி மாநகரைச் சூழ்ந்த பகுதியில் தன்னுடைய அறங்கூறும் தூண்களை நாட்டியதாகச் சொல்கின்றனர். அற்றுள் பல இப்பொழுதும் இடம் பெற்றுள்ளன. நாளாந்தாப் பல்கலைக்கழகத்தில் தலைமைப்புலம் நடத்திய சீலபத்திரருக்கு முன்னோராகிய தருமபாலர் பிறந்த ஊர் இக்காஞ்சியே. பாண்டிய நாட்டில் பலர் புத்தரின் அறங்களை மேற் கொண்டொழுகினர். ஆயினும் பலர் வணிகத் துறையில் பேரார்வம் கொண்டிருந்தனர். அவர்கள் பெருவிருப்புடன் உழைத்து பொருளீட்டுதலில் முனைந்துள்ளனர். பாண்டிய நாடு முழுவதும் அறிவன் கோவில்கள் உள்ளன எனினும் புத்த சமயம் அருகி வருகின்றது என்று கூறுகின்றன. மேலும் காஞ்சிக்கு அருகில் நூறு அடிக்கும் மேற்பட்ட அசோக மரங்கள் சூழ்ந்த கிராமம் ஒன்றுள்ளது. அங்கே புத்தர் தீர்த்தங்காரர்களைச் சொற்போரில் வென்றார். பலரைத் தமது சங்கத்தில் சேர்த்தார். அவருக்கு முன்னைய நான்கு புத்தர்களும் இருந்த இடங்களும் நடந்த சங்கங்களும் சிதைந்து கிடக்கின்றன. என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மத்தவிலாசம் என்பது மகேந்திரவன்மன் எழுதிய பிர-

கடன நாடகமாகும். அதன் கண் பௌத்தவிகாரம் ஒன்று குறிக்கப் பெற்றுள்ளது. அந்த விகாரம் யுவான்சாங்கு குறித்துள்ள குறிப்புக்களில் காணப்பெறும் பௌத்த விகாரமாக இருக்கலாம் என்பர். அந்நாடகத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள தேவசோமன் என்ற புத்தனால் இந்த விகாரம் இராச விகாரம் எனப்பெற்றது. எனவே பழைய வேந்தன் ஒருவனால் ஏற்படுத்தப் பெற்றிருக்கலாம் என்பது தெளிவு. கி பி இரண்டாம் நூற்றாண்டில் சோழவேந்தருள் ஒருவரான இளங்கிள்ளி என்பவன் அமைத்தான். பைம்பூம் போதிப் பகவற்கு ஓர் அறப்பள்ளி என்று மணிமேகலை விளக்குகிறது. இந்த ராசாவிகாரம் சங்கங்கள் பலவற்றின் தலைமைச்சங்கமாக இடம்பெற்றிருந்தது

### மகாயானம்

தென்னாட்டில் பரவிய பௌத்த சமயம் மகாயானம் எனப்பெற்றது. அதனை கி பி மூன்றாம் நூற்றாண்டில் நாகார்ச்சுனர் கொண்டு வந்தாரென்பர். அந்நாளில் தென் னாட்டு வேந்தனொருவனும் பார்ப்பனர் பத்தாயிரவரும் பௌத்தர் ஆயினர் என்றும் நாகார்ச்சுனர் வரலாற்றால் அறியலாம். யுவான் சுவாங்கு வந்திருந்த போது ஈழநாட்டினின்றும் பௌத்தத் துறவிகள் முந்நூற்றுவர் வந்தனர் என்றும் யுவான் சுவாங்கு அவர்களோடு அளவளாவினார் என்றும் கூறுவர்.

தென்னாட்டில் இருந்து வடநாட்டுக்குச் சென்ற சிறப்பு மிகுந்த திராவிட புத்தருள் திக்கநாகனார் சிறந்தவராவர். பல்லவர் ஆட்சியில் உயர்நிலைப் பணியிலிருந்த ஓர் அலுவலரின் தலை மகன் திக்கநாகன் ஆவார். அவர் வடமொழியில் வல்லவராக விளங்கினார். நாளந்தாப் பல்கலைக்கழகம் சென்றார். தம் சொல் வன்மையால் பெருஞ்சிறப்புப் பெற்றார் அவருக்குப் பின்னர் அவர் மாணவரான தருமபாலர் அப்பல்கலைக்கழக மாணவராயிருந்து பின்னர் தலைவராக விளங்கினார் தரும பாலருடைய மாணவர் சீலப்பத்திரர் என்பவர் சிறப்புற்றிருந்த நாளில் உறழாட்டுக்கள் பல நிகழ்த்தினார் என்றும் யுவான்சுவாங்கு கூறியுள்ளார்.

இத் துணைச்சிறப்பு பெற்றுவிளங்கிய பௌத்தசமயம் எவ்வகையில் மன்னரின் துணைத்தரவைப் பெற்று விளங்கியதென்பதை அறிய இயலவில்லை. தொல்லோரான பல்லவ வேந்தருள் சிலரும் களப்பிரரும் தமிழ் வேந்தரும் ஆகிய பண்டைய வேந்தர்களின் அரசியல் துணைத்தரவு இருந்திருக்க வேண்டும். புத்தவன்மன் என்பது முதலாவதாக வரும் வேந்தர் பெயர்கள், இவ்வாறு நினைப்பதற்கு இடமளிக்கின்றது. அரசியல் துணைத்தரவு இல்லாத நிலையில் சமயமொன்று நிலைபேறு கொள்வதென்பது எளிதன்று. ஒரு காலத்தில் அரசியல் துணைத்தரவு பெற்று விளங்கிய பௌத்தசமயம் கி பி ஆறு ஏழாம் நூற்றாண் டுகளுக்குள் தம் வளர்ச்சி நிலையில் குன்றி அழியத் தொடங்கியது.

### சைவம்

சைவசமயம் இந்து மதத்தின் ஒரு கிளையெனலாம். தொல்லியல் அறிஞர் சர் சான் மார்சல் சைவ சமயத்தின் தொடக்க நிலை சிந்துவெளி நாகரிகத்தில் காணப் பெறுவதாகக் கூறியுள்ளார். பெருந்தொகையில் பெண் உருவங்களும் அம்மண நிலையில் காணப்படும் ஆண் உருவங்களும் முறையே சக்தி என்னும் தாய் தெய்வ வழிபாட்டையும் நக்கன் என்று பிற்காலத்தில் போற்றப் பெறுகின்ற சிவபெருமானுடைய வழிபாட்டையும் குறிப் பனவாக வேண்டும் என்று கருதினார். இலிங்கங்களும் விண்டைகளும் மிகுதியாகக் கண்டெடுக்கப் பெற்றுள் ளமையால் இவ்வடிவிலும் சிவசக்தி வழிபாட்டு முறை அக்காலத்திலேயே நிலவியமைக்குச் சான்று என்பது அவர் கூற்றாகும்.

வரலாற்றாசிரியர் நீலகண்ட சாத்திரி உள்ளிட்ட சிலர் சைவ சமயத்தின் தோற்றுவாய் மறைநெறிக் காலத்திற்கு மட்டுமே எட்டுகிறது என்று கூறுவர். ஆனால் மறை நெறிக்காலத்துச் சமயமான வைதீகம் என்பது வேறு சைவம் என்பது வேறு. சைவம் உள்ளிட்ட பார்பனிய சமயம் என்பது வேறு என மானிடவியல் பேராசிரியர் சுனித்குமார் சட்டர்சி தெளிவாக விளக்கியுள்ளார். சிவனையும் உமையையும் வணங்குதல் ஒழுக்கம் பக்தி நெறி முதலியன திராவிடரிடமிருந்து பெறப்பட்டவை என்பது அவர் கருத்தாகும்.

### ஓத்துக்களில் (உபநிடதங்கள்)

சுவேதா உபநிடதத்தில் அவ் உப நிடதகாலத்தின் பொதுவான கருத்துக்கள் விளக்கம் பெறுகின்றன. அதில் நான்முகனும் உருத்திரசிவனும் ஒன்றே என்ற கருத்து இடையிடையே காணப்பெறுகின்றது. அது பகவத் கீதைக்கு முந்தைய நூலாகும் நிலக்கோள மாவடை மரவடைகளை இயக்குபவன் சிவன். சிவனை நம்பிக்கை பக்தி தூயஉள்ளம் என்பவற்றால் அடையலாம். சிவனை உணர்ந்தால் உய்வு பெறலாம் என்னும் இக்கருத்துக்கள் இந்த உபநிட தங்களில் காணப் பெறுகின்றன. சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள் அனைத்தும் இந்த உபநிடதங்களில் காணப்படுகின்றன. சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள் அனைத்தும் இந்த உபநிடதங்களில் இடம் பெற்றுள்ளதாகப் பேராசிரியர் நீலகண்ட சாத்திரி கூறுவார்.

அதர்வ சிரசு உபநிடதங்களில் சைவம் பற்றிய கருத்துக்கள் மேலும் வளர்ச்சியடைந்த நிலையில் காணப்பெறுகின்றன.

கி பி இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த பதஞ்சலி சிவ-பாகவதம் என்னும் சமயப் பிரிவினரை முதன் முதல் குறிப்பிட்டுள்ளார். நாராயணிய பாகவதத்தில் பாசுபதர் என்னும் சமயப்பிரிவினர் அதன் முதலாகக் குறிப்பிடப் பெறுகின்றனர். மறை நெறி இலக்கியங்களில் உருத்திர சிவன் இன்றியமையா இடம் பெறாத போதிலும் பிற்கால வரலாறுகளில் சிவனைப்பற்றி இடம்பெறும் கதைகளில் அடிப்படைத் தோற்றுவாய்கள் மறை நெறியிலே காணக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

***உறழாட்டு***

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பௌத்த இலக்கியமான மணிமேகலை தமிழ்நாட்டில் பௌத்தம் பரவியிருந் தமைக்கும் பௌத்தத்திற்கும் சைவம் முதலிய பிறசம யங்களுக்கும் உறழாட்டுக்கள் பல நிகழ்ந்தமைக்குச் சான்றாக அமைகிறது. இன்று கிடைக்கும் தமிழ் இலக்கியங்களில் சைவசமயத்தின் மெய்மத்தை எடுத்துக் காட்டும் மிகப் பழமையான நூல் மணிமேகலையாக இருப்பது வியப்பிற்கும் சிந்தனைக்கும் உரியது. சைவ சமயக் குரவருள் முதன்மையானவராகக் கருதப்பெற்ற திருஞானசம்பந்தர் பௌத்தரோடு உறழாட்டு செய்து வென்றமை பெரியபுராணத்தில் கூறப்பெற்றுள்ளது.

திரு ஞானசம்பந்தர் பௌத்தர்கள் வாழ்ந்த போதி மங்கைக்கு வந்த போது பரசமயக் கோளரி வந்தான் என்று சிவனடியார் ஆர்ப்பரித்ததைப் பொறுத்துக் கொள்ளவியலாத பௌத்தர்கள் தங்களுடைய சமயக் கல்வியில் திறம் பெற்றிருந்த புத்த நந்தியையும் தேரர் கூட்டத்தினரையும் அழைத்து வந்தனர். சம்பந்த சரணாலயர் என்ற அடியார் புத்தர் சமண ஒழுக்கையார் என்ற பிள்ளையார் திருவாக்கினை ஓதினார் இடியிடித்து விழுதலாலே பௌத்தர் தலைகள் உருண்டு வீழ்க என வெகுண்டுரைத்தார். அவ்வாறே தலைகள் அறுபட்டு வீழ்ந்தன. ஞர்னசம்பந்தர் தம்முடைய ஒவ்வொரு பதிகத்தின் பத்தாம் பாடலில் பௌத்தர்களைக் கண்டிப்பதைக் காணலாம். பௌத்தர்க ளுடைய போலி வேடம் ஒழுக்கக்கேடு முதலியன கண்டிக்கப்பட்டுள்ளதே தவிர பௌத்த சமய மெய்மமும் அறமும் அங்கே கண்டிக்கப் பெறவில்லை என்பது கருதத்தக்கது.

மாணிக்கவாசகரின் வரலாற்றைக் கூறும் திருவாதவூரடிகள் புராணத்தில் சைவர்களுக்கும் பௌத்தர்க ளுக்கும் இடையே நடந்த சமய உறழாட்டு வளர்ச்சி அடைந்த நிலையில் காணப்பெறுகிறது. தமிழ் நாட்டில் பௌத்தம் வலிமை குன்றியதால் மாணிக்கவாசகருடன் உறழாட்டுச் செய்து வென்றிட பௌத்த குரு இலங்கையில் இருந்து வந்தாரெனப்படுகிறது. புத்ததேவனைத் தவிர வேறு கடவுள் இல்லை என்ற கொள்கையினை நிலைநிறுத்த இந்தப் பொன்னம்பலத்தில் எங்கள் புத்ததேவனை நிலைநிறுத்தும் பொருட்டுவந்தேன். என்று பௌத்தகுரு வெல்விளி கூறினார். அந்த வெல்விளியை ஏற்று அவனை வென்றிடத் தக்கவரை அறிகிலோம் என்று தில்லை வாழ் அந்தணர் வருந்தினர். அந்தக் காலச்சூழல் வரை சைவத்தை மெய்ம அடிப்படையில் உறழாட்டின் வாயிலாக விளக்குவோர் இல்லாமல் இருந்த நிலையையே அது காட்டுகிறது எனலாம். முதலில் பௌத்தருக்கும் மாணிக்கவாசகருக்கும் பல்வேறு நிலைகளில் சமய உறழாட்டுக்கள் நிகழ்வுற்றன. பௌத்தரின் கண்டனக் குரலுக்கு ஈடுகொடுக்க இயலாமல் நாமகளின் உதவி யைக்கொண்டு பௌத்தரை ஊமையாக்கினர் எனப் பெறுகிறது. எனவே பௌத்தர்களின் உறழாட்டுத்திறனே சைவர்களுக்குச் சைவசித்தாந்தம் தோற்றுவிக்க வேண்டிய தேவையை உணர்த்தியது எனலாம்.

***சைவசித்தாந்தம்***

மெய்ம நூல்கள் தம் சமயத்தை நிலைபெறச் செய்ததோடு பிற சமய வீழ்ச்சியிலும் தம் சிந்தையைச் செலுத்தின. பிற சமயக் கண்டனம் பரபக்கம் என்னும் பகுதியில் அடக்கப்பெற்றுள்ளது. சந்தானக் குரவர்களுள் அருணந்தி சிவாச்சாரியார் சகலாகம பண்டிதர் எனப்பெற்றார். அவர் பலசமயங்களையும் மொழிகளையும் அறிந்தவராக இருந்திருக்க வேண்டும். அவருடைய பரந்த அறிவு சிவஞான சித்தியார் என்ற தம்முடைய நூலில் பரபக்கம் எழுத உதவியிருக்க வேண்டும். பரபக்கத்தில் பதினான்கு மதங்கள் கண்டிக்கப்பெற்றுள்ளன. முதலாவதாக உலகாயுத மதம் கண்டிக்கப்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து பௌத்தசமயப்பிரிவுகள் கண்டிக்கப் பெற்றுள்ளன. பௌத்த சமயத்தின் சமய மெய்ம உறழாட்டுவன்மை கருதி அது விரிவாக மறுக்கப்பட்டுள்ளது.

பௌத்தசமயத்தை அறிவு பூர்வமாக உறழாட்டுப் போர்களில் தோல்வியுறச் செய்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் பிரபாகர், சங்கரர் முதலியோர் ஆவர். அவர்கள் பௌத்தத்தை நன்கு கற்று பௌத்தர்கள் கையாண்ட உறழாட்டு முறைகளையே பின்பற்றினர். சிவஞான சித்தியாரில் தொடக்கத்திலேயே பதின்னான்கு செய்யுள்கள் அளவையியல் பற்றிக் கூறியுள்ளன. சைவ சித்தாந்த மெய்மத்தை விளங்கிக் கொள்வதற்கு இந்தப் பகுதி இன்றியமையாததாகும். சிவஞான சித்தியார்க்கு இன்று கிடைக்கும் உரைகள் அனைத்தும் கி பி பதின்னாறாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னும் எழுந்தனவாகும். இக்காலப்பகுதியிலேயே தென்னிந்தியாவில் பௌத்தமதம் அழிவுப்பாதையை அடைந்ததெனலாம்.

*சமய உறவு*

பௌத்தத்திற்கும் சைவத்திற்கும் இடையே நெருங்கிய உறவுகள் இருந்தமைக்கும் சான்றுகள் உளளன. இந்திய அளவில் இந்து மதத்தில் பௌத்தம் அமிழ்ந்து விட்டதென்று கொண்டால் இந்தியாவுக்கு வெளியிலுள்ள நாடுகளில் பௌத்தமதத்தில் சைவம் அமிழ்ந்து விட்டதென்றே கூறலாம். இனித் தமிழ்நாட்டில் சைவ அரசர் பௌத்தசமயத்தைப் பேணிக்காத்தமைக்கும் சான்றுகள் உள்ளன. முதலாம் இராசராசன் தான் கட்டி எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோவில் கோபுரத்தில் பௌத்த சமயத் தொடர்பான சிற்பங்கள் இடம் பெறச் செய்தான். ஸ்ரீ சைலேந்திர பேரரசின் வேண்டுகோளை ஏற்று இராசராசன் நாகபட்டினத்திலுள்ள சூடாமணி பௌத்த அறிவன் கோவிலுக்கு நிலத்தைக் கொடையாகக் கொடுத்தான்.

இலங்கையை வென்று அடிமைப்படுத்திய இராச ராசன் திருகோணமலையிருந்த வெல்கம் அறிவக்கோவிலைத் திராவிடச் சிற்பவியல் முறையில் கட்டுவித்து இராசராசப் பெரும்பள்ளி என்று பெயரிட்டான். முதலாம் குலோத்துங்க சோழனும் நாகப்பட்டினம் சூடாமணி அறிவன் கோவிலுக்கு நிலத்தைக் கொடையாக அளித்துள்ளான். இலங்கையில் சிங்கள பௌத்த அரசர் சைவத்தையும் பேணிக்காத் துள்ளனர். சிங்கள அரசர் தமிழ்நாட்டு அரச மகளிரை இடையிடையே மணம் செய்து கொண்டனர். தமிழ்ச் சைவ அரசரும் இடையிடையே இலங்கையை ஆண்டு வந்தனர். எனவே சைவமும் இலங்கையில் நிலைபெற்றது. சிறப்பு பொருந்திய பௌத்த அறிவன் கோவில் சுற்றுச்சுவரில் இந்துசமயக் கடவுளரை வைத்து வழிபடும் முறை தோன்றியது பௌத்தர்கள் முருகனைத் தங்கள் காவல் தெய்வங்களில் ஒன்று என்று கருதிக் கதிர்காமக் கடவுளாக வழிபட்டு வருகின்றனர்.

சைவசமயத்திற்கும் மறை நெறிச் சமயத்திற்கும் மிகுந்த வேறுபாடுகள் இருந்தன. சைவம் மறைகளை முதல் நூலாக ஏற்றுக் கொண்டது. பார்ப்பனர் மறை நெறிச் சமயத்தில் பெற்ற இன்றியமையாவிடத்தைச் சைவ சமயத்திலும் பெற்றனர். ஆனால் குப்தர்கள் ஆட்சிக்கால வட இந்தியாவில் மறைநெறிச் சமயம் சமண பௌத்த மதங்களை வெற்றி கொள்ளத் தக்கதாக தன்னை மாற்றியமைத்துக் கொண்டது. குப்தர் ஆட்சிக்காலத்தில் மறுமலர்ச்சி அடைந்த மறைநெறி பௌராணிக இந்துசமயம் எனப் பெற்றது. அச்சமயத்தார் தம் அறிவு ஆற்றல் ஒழுக்கங்களுக்கேற்ப கடவுளரைப் படைத்தனர். அவர்களைப்பற்றிய கற்பனைக்கதைகள் விரித்துரைத்து வரலாற்று நூல்களைத் தோற்றுவித்தனர். அவற்றின் அடிப்படையில் பௌராணிக சமயம் தோன்றியது. அச்சமயத்தின் துணை கொண்டே பார்ப்பனர் சமண பௌத்தரை வென்று கொண்டிருந்தனர்.

***தொன்னூல் கதைகள்***

தென்னாட்டுப் பார்ப்பனர்களால் பல்லவர் காலத் தொடக்கத்தில் இந்தப் புதிய சமயத்தின் தாக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். தமிழ் நாட்டில் பல்லவர் காலத்தில் நிலவிய சைவ சமயம் தங்களுடைய வாழ்க்கையில் பின்னிப் பிரிக்க இயலாத நிலை ஏற்பட்டது. எனினும் பல்லவர் காலத்தில் மறு மலர்ச்சியடைந்த சைவத்திற்கும் வடஇந்திய பௌராணிக சமயத்திற்கும் வேற்றுமை இருந்தது. சமண பௌத்தர் தமிழ் நாட்டில் பழைய சமயக் கொள்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் ஒதுக்கி வைத்திருந்தனர். சங்கமருவிய கால மறை நெறிச்சமயத்தார் தமிழ் நாட்டில் பழைய தெய்வ வழிபாட்டு முறையைத் தங்களுக்குரிய தெய்வங்களோடும் வழிபாட்டு முறைகளோடும் இயன்றவரை இணைத்து ஒருமைப்பாட்டைக்கண்டனர்.

பழைய மறைநெறி வடஇந்தியாவினால் பௌராணிக மதமாக மாறியது. பௌராணிக மதம் தமிழகத்தின் பழைய சமய நெறிகளோடு ஒன்று சேர்ந்து பல்லவர் காலச் சைவமாக மாறியது. அச்சைவ சமயம் இந்த முறையில் தோன்றியதால் தமிழ்நாட்டுப் பழங்குடி மக்களுக்கும் பார்ப்பனியருக்கும் இடையே வேறு வேறு காரணங்களால் கருத்து மாற்றங்கள் தோன்றின. கடவுளைப் பற்றிய தொன்னூல் கதைகள் பொதுமக்களை கவர்ந்திழுத்தன. பல்லவர் காலத்து தமிழ் வளர்ச்சி பக்தி இயக்கமாக வளர்ச்சியடைந்தது. அது பக்தி இயக்கமாக வளர்ச்சியடைந்தது. பக்தி இயக்கம் தொன்னூல் கதைகளை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தியது. சமணரின் உறழாட்டு அறிவும் ஒழுக்க நெறியும் பக்தி உணர்ச்சிக்கடலில் முழுகி அழிந்துவிட்டன. சைவம் வென்றது ஆனால் சமணம் அழியவில்லை. அதன் அறநெறிகள் தமிழ்ச் சமுதாயத்தில் வேரூன்றி நிலைத்துவிட்டன.

***சமய எதிர்ப்பு***

அப்பர் சமணத்தைவிட்டு சைவத்தைத் தழுவிய செய்தி சைவசமய மறுமலர்ச்சி தோன்றக் காரணமாக அமைந்த தெனலாம். பல்லவர் காலத்தில் ஏற்புவளம் பெற்றிருந்த சமணர் அவரைப் பழிவாங்கத் துடித்தனர். பல்லவபேரரசின் ஆட்சியும் அரசு இயந்திரமும் சமண விருப்பத்திற்கேற்ப அப்பருக்கு எதிராக இயங்கியது. பாண்டியப் பேரரசு இருந்த தமிழ்நாட்டின் பெரும் பகுதியும் சமணர் ஏற்பு வளத்திற்கு உட்பட்டே இருந்தது. சைவநெறியை உய்விக்க அப்பர் ஒரு பேரரசையே எதிர்த்துப் போராடவேண்டி இருந்தது. அப்பரிடமிருந்த மன உறுதியும் மலைபோலத் துணிந்து நின்ற நிலையுமே

இடுக்கண்களை எதிர்த்து வெற்றி பெறச் செய்தது. பல்லவ மன்னனை அப்பர் தம் கொள்கைக்கு பணிய வைத்து சைவத்திற்கு உயிரூட்டினார். வரலாறு அறிந்த வகையில் தமிழ் மண்ணில் நிகழ்ந்த வெற்றி நிலையெய்திய முதல் சமய எதிர்ப்பு போராட்டம் இதுவேயாகும்.

***சைவ மறுமலர்ச்சி***

தமிழ்நாட்டின் தென்பகுதியாகிய பாண்டிய நாட்டில் சமணம் தொடர்ந்தது. ஏற்புவளம் பெற்று விளங்கியது. பாண்டிய நாடு முழுவதும் சமண இருள் கவ்வியிருந்தது. பாண்டிய அரசி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையும் சைவத்தின் நிலைகண்டு வருந்தினர் என்று பெரிய புராணம் கூறுகிறது. சோழநாட்டு இளவரசியான மங்கையர்க்கரசி பாண்டிமாதேவியாகிய வரலாற்று நிகழ்வு அறிந்ததொன்று. அந்நிகழ்வைச் சார்புப் பயனாகப் பயன் படுத்தி சோழநாட்டைச் சார்ந்த ஞானசம்பந்தர் பாண்டிய நாட்டில் சமயப் பரப்புப் பணிக்குப் புகுந்திருக்க வேண்டும் சம்பந்தர் சமயப் பரப்பின் நோக்கமாகவே தம்முடைய பதிகங்களை அமைத்திருப்பதைக் காணலாம். அவருடைய பாடல்கள் ஒவ்வொன்றிலும் பெரும்பாலும் இரண்டுவரிகள் இயற்கையைப் பற்றியதாகவும் இரண்டு வரிகள் இறைவனைப் பற்றியதாகவும் அமைந்துள்ளன. அந்த இயற்கை ஏத்துகை நிகழ்வில் தாம் இயற்றிய திருப்பதிகத்தின் சிறப்பைப் பிறர் புகழத்தாம் கேட்டு மகிழ்தல் என்னும் உத்தியைப் புகுத்திப் பாடியுள்ளார். ஊர் உணர்வைப் பயன் படுத்திச் சைவ சமய மறுமலர்ச்சியில் மக்களை முன்னின்றுழைக்கச் செய்ய சம்பந்தர் இத்தகைய முறையைக் கையாண்டார் எனலாம்.

சம்பந்தர் பதிகம் ஒவ்வொன்றிலும் எட்டாம் பாடலில் இராவணனைப்பற்றிய குறிப்பு காணப்பெறுகிறது. தீயவர் எவரும் இறைவனை நினைத்து வழிபட்டால் அவன் அருளைப் பெறலாமென்பதே சம்பந்தர் எண்ணமாகும். சம்பந்தருடன் இணைக்காலத்தில வாழ்ந்த அப்பரும் இராவணணைப்பற்றிய கதைப்பகுதியைக் குறித்துள்ளார். அவர்கள் இருவரும் ஒரே செய்தியைப் பயன் படுத்தியமைக்கு அக்காலச் சூழ்நிலை காரணமாக இருந்திருக்கலாம். இராவணன் சிவன் வாழ்விடத்தையே அப்புறப்படுத்த நினைத்தவன். அதன் காரணமாகவே சிவன் வெள்ளியங் குன்றினை எடுத்து அதன் கீழ்வைத்து நசுங்கச்செய்தான். பின்னர் சிவனருள் பெற்று உய்வ டைந்தான். அப்பரும் சம்பந்தரும் இக்கதைப் பகுதியைத் தங்கள் காலத்தில் ஆட்சி புரிந்த அரசர்களுக்கு முன்னறிவிப்பாகவும் எடுத்துக் காட்டாகவும் பயன் படுத்தினர் என்று கருதுவதற்கு இடமளிக்கிறது. அப்பரும் சம்பந்தரும் வாழ்ந்த காலத்தில் பல்லவ பாண்டிய இரு பேரரசுகள் நிலவின. அவை சமணர் சார்புடையனவாக விளங்கின. அப்பர் சம்பந்தர் ஆகியோர் தொடக்கிய சைவ மறுமலர்ச்சி அவ்வரசர் எதிர்ப்பை ஆரம்பத்திலேயே பெற்றிருக்க வேண்டும். அப்பேரரசர் எதிர்த்தால் இராவணனைப் போலத் துன்பமடைய நேரிடும் என்பதை உணர்த்தவே ஞானசம்பந்தர் ஒவ்வொரு பதிகத்திலும் இராவணனைச் சுட்டிக்காட்டியுள்ளார் எனக்கொள்ளலாம்.

ஞானசம்பந்தர் ஒவ்வொரு பதிகத்தின் ஒன்பதாம் பாடலில் திருமாலும் நான்முகனும் சிவனின் அடிமுடியைத் தேடியும் காண இயலாமல் வருந்தியதாக வரும் தொன்னூல் குறிப்புகளைக் குறித்துள்ளார். சிவபெருமான் மும்மூர்த்திகள் மூவரில் ஏனைய இருவரிலும் உயர்ந்தவர் என்பதைக் காட்டவே இந்தக் குறிப்பைக் காட்டியிருத்தல் வேண்டும். இந்த மும்மூர்த்தி வழிபாட்டு முறையும் பௌராணிக சமயத்தின் அடிப்படையில் வந்த வழக்கமாகும். இந்திரன் வருணன் சூரியன் முதலிய மறைநெறிக் காலத்தெய்வங்கள் தம் சிறப்பை இழந்தன. அவற்றுக்கு மாற்றாக மும்மூர்த்திகளாக அமைத்து வழிபடும் முறை தோன்றியது. பௌராணிக சமயத்தின்படி நான்முகன் படைத்தலையும் திருமால் காத்தலையும் சிவன் அழித்தலையும் செய்ததாக கூறுகிறது. எனவே இம்மூன்று கடவுளரையும் இணையாகக் கருதும் மனப்பாங்கு அந்நாளில் மக்களிடையே காணப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் பல்லவர் காலத்தில் வைணவ எழுச்சியும் வளர்ந்த நிலையில் இருந்தது.

மக்கள் வைணவத்தை நாடாமல் இருக்கவும் அது சைவ சமயத்தைவிட உயர்ந்ததல்ல என எடுத்துக்காட்டவேண்டிய தேவையும் சைவப்பெரியார்க்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அக்காலச் சூழலில் பல்லவராசன் முதலாம் மகேந்தி ரவன்மன் மண்டகப்பட்டு எனும் ஊரில் குகைக்கோவிலை அமைத்து அதில் மும்மூர்த்திகளுக்கு இணையான தகுதியை அளித்து வழிபடச் செய்த நிககழ்வை நினை வில் கொள்ளலாம். அத்தகைய எண்ணத்தை எதிர்த்து சைவ சமயத்திற்கு ஏற்றம் அளிக்கவேண்டும் என்ற நோக்கில் சம்பந்தர் மும்மூர்த்திகளில் ஏனைய இருவரையும் தாழ்த்தியுள்ளதாகக் கொள்ளலாம்.

ஞானசம்பந்தர் பதிகத்தின் பத்தாம் பாடல்களில் சமண பௌத்த சமயத்தை இழித்தும் பழித்தும் கூறியுள்ளார். அப்பர் பாடல்களிலும் சமணர் இழித்துரைக்கப் பெற்றுள்ளனர். இருவரும் சமண பௌத்தம் மீது கொண்டிருந்த காழ்ப்புணர்வைக் காட்டுவதாகவே அப்பாடல்கள் அமைந்துள்ளன. நாட்டில் பார்ப்பனிய ஏற்பு

( 29 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் கலசம்

## வணக்கம்!

பெற்றார்களே! சிறுவர்களே!

இந்த இதழ் எமது 30 ஆவது இதழ். இம் முறை உங்களுடைய சிந்தனைகளைத் தூண்டக்கூடிய பல கட்டுரைகளை உமக்குத் தருகின்றோம். இவை தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளன. இம் முறை எசெக்ஸ் தமிழ் நிலையத்திலிருந்து தனுசிந்தியா சரவணபவானந்தன், குமரேஸ் ஸ்கந்தபாலன், சஞ்ஜிவ் யோகநாதன் ஆகிய சிறுவர்கள் தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். இவர்களை ஊக்கப்படுத்தி பங்களிக்கச் செய்த அப்பாடசாலையின் அதிபர் திருமதி உமா ஜெயக்குமார் அவர்களுக்கு எங்கள் பாராட்டுக்களும் நன்றிகளும். இவ் வகையில் ஏனைய பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் முன்வந்து அவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள இப் பக்கங்களை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று அன்போடு வேண்டுகின்றோம்.

– கலசம் மாமா –

## DEAR CHILDREN,

**This page is for you to ask questions about your religion and social life. KALASAM MAMA is prepared to answer your questions as much as he can. In this issue I am introducing some questions and answers for you all.Please read these questions carefully and write your own opinion on your own words.**

**Don't be scared of religion. Religion is a path of your life. It tells the way you have to live with meaning in this material world.**

**-Kalasam Mama-**

---

***Q1: What is Sutra?***

**A: A sutra is a statement which must satisfy the following conditions: must be brief, unambiguous, pregnant with meaning, covering various aspects, logical and free from grammatical imperfections.**

***Q2: What is Saiva Siddhanta?***

**A: The philosophy based on Saiva Aagamas(ancient traditional literature on Lord Siva) is called Saiva Siddhanta. According to this philosophy, Saiva called Pasupathi is the Ultimate reality. He is endowed with noble attributes.**

***Q3: How can I pray the God in the morning and evening?***

**A1: There are so many ways to do prayer. Normally people may ask you to sing Thevaram every morning and afternoon. You may be bored with this or you may not like this way. You may have stopped worshipping god because of this . Please wake up. I am going to introduce a new prayer technique. Try this. You may enjoy by doing this.**

**When you get up from bed in the morning, pray:**

***" Oh Lord, I am born now from the womb of sleep. I am determined to carry out all tasks of this day as offerings to Thee, with thee ever present before my minds eye. Make my words, thoughts and deeds sacred and pure. Let me not inflict pain on any one, let no one inflict pain on me, direct me , guide me this day"***

# எசெக்ஸ் தமிழ் நிலைய மாணவர்களது படைப்புக்கள்




## சிவராத்திரி

சிவராத்திரி விரதம் மாசி மாதத்தில் வரும். இது சிவனுக்கு உரியது. சக்திக்கு உரியது நவராத்திரி. இந்து சமயத்தவர்களால் அனுட்டிக்கப்படும் விரதம் சிவராத்திரி. இந்த விரதத்தின்போது உபவாசம் இருந்து நித்திரை செய்யாது கண்விழித்து இறைவனைத் தியானிக்கிறார்கள். சிவாலயங்களில் நான்கு சாமப் பூசை நிகழும். சிவனை லிங்கத்தில் இருத்தி அபிஷேகம் செய்வார்கள். இந்த உலகில் ஆதி அந்தம் இல்லாதவன் இறைவன். அவனே பெரியவன் என்ற தத்துவத்தை இந்த சிவராத்திரி உணர்த்தி நிற்கின்றது. பிரம்மா விஸ்ணு அடிமுடி தேடி இறுதியில் சிவபெருமானிடம் உண்மை உணர்ந்தார்கள். இந்த நாளில் நாமும் நாட்டுக்கும் நமக்கும் அருள் வேண்டி வணங்குவோம்.

செல்வி தனுசிந்தியா சரவயபவானந்தன்
வயது: 10




பிள்ளையார்

நாம் எந்தச் செயலைச் செய்ய முன் பிள்ளையாரை வணங்கியே செய்வோம், ஏன் தெரியுமா? பிள்ளையார் தடைகள் வராது தடுப்பார். அவருக்கு பல நாமங்கள் உண்டு. அவை

1. விநாயகன்,
2. ஆனைமுகன்,
3. விக்னேஸ்வரன்,
4. ஒற்றைக் கொம்பன்,
5. கணபதி
6. கணேசன்

இப்படிப் பல பல உண்டு. ஐங்கரன் அருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டி வணங்கி நிற்பேன்.

ஆக்கம் —
சஞ்ஜீவ் யோகநாதன்
எசெக்ஸ் தமிழ் நிலையம்

# Thirunavukarasu Nayanar

O f all the religions, SAIVAISM is the greatest and oldest . It is still prospering today because of the Thevarams and Thiruvasagams, which are described as the Tamil Vedas. They are Thirugnanasambandar Nayanar and Manikavasaga Swamigal.

Thirunavukarasu Nayanar was the oldest of the Kuruvas. He was born in Thiruvarur in Thirumunaipadi inTamil Nadu. His father was called Pugalanaar. His mother was called Maathiniyaar. When he was born , his parents gave him the name Maathiniyaar, unlike the other Kuruvars , he was part of another religion called Samanam for some time.During this period , he was called Tharumasenar. His parents had already reached Lord Shiva when he was young , so, it was his sister, THilagavithiyaar, who brought him up. Importantly, she was the tне one who obtain Gods help in making him return to saivism from Samanam.

Until he reached Lord Shiva at the age of eighty-one, ,Navukarasu sang three hundred and thirteen pathigams- sets of ten songs. All these pathigans make up the fourth, fifth an sixth Thirumurais.

Navukarasan, who was called 'Appar', by Sambandar out of respect - a name by which he is still called today, performed many miracles. When he was imprisoned in a hot line kiln for seven days by the samanars, he escaped hithout dying. he did not die after eating some rice that the samanars had imprisoned. The elephant that the Samanars had sent to trample him to death worshiped him instead. when the Samanars tied him to a boulder and threw him into the sea, the boulder became a boot and carried him to shore. In times of famine he obtained gold coins from Lord Shivas in order to feed the devotees of Shiva. At Thirunavukarasu, he opened the door that had been sealed by the vedas by singing Thevarams. He brought a small boy

called Mootha Thirunavukarasu, who died after being bitten by a snake , back to life. The list if miracles go on and on.
believing that by serving people he served Shivas, Manikavasakar performed many miracles. By serving devotees of Shiva he attained the Saloga Muthi.
Let us follow the path of Thirunavukarasu and help the poor and needy.


Kumaresh Skanthabalan
Age 9

## ஔவையார்



# RAMAYANA

## CHILDHOOD EPISODE -1



## CHILDHOOD EPISODE—1

Long, long ago, there was a king named Dashrath in India. He had his capital at Ayodhya. He was a brave but God-fearing ruler who loved his subjects as his children. He had three queens named Kaushalya, Kaikeyee and Sumitra. The queens were very beautiful, pious and virtuous ladies.

Dashrath belonged to the dynasty started from the Sun-god himself. So, he worshipped the Sun daily as guided by the royal priest who was named Vasishtha.

In spite of the comforts of stately life, the king and his three queens were not happy. The reason was that none of the queens had given birth to any child so far. So, the kingdom was without a crown-prince.




The king and the queens were well past middle age. So, the king had lost all hope to be blessed with a son. "Who will succeed to my throne after me ?" he often asked himself.

One day after the usual worship, King Dashrath prayed to Sage Vasishtha,"Do something, please, so that I may not die without leaving a heir to my throne."

Sage Vasishtha consoled the king saying,"Don't worry at all, O king ; you shall be blessed with sons. But you will have to perform the *putreshti yajna* (son-granting worship)."

The king folded his hands and said, "I am ready to do anything." He, then, requested the royal priest to make arrangements for the son-granting worship.



"This worship is to be performed by Saint Shringi. Go to his hermitage bare-foot and request him for it," remarked Vasishtha.

Next day, king Dashrath approached Saint Shringi. Touching his feet respectfully, he said, "Sage Vasishtha has directed me to you, sir. Be kind to perform the son-granting worship for me."

The saint agreed and accompanied the king to Ayodhya. He performed the worship. As soon as it was over, the Fire-god appeared out of the fire with a pot in his hands. It contained the holy *prasad* for the queens.

"Your wish is granted, O king! Take this pot to your palace and ask your queens to share its contents," said the god. Saying so, he disappeared. The king was very happy indeed.



After the Yajna, Saint Shringi left for his hermitage. Seeking Sage Vasishtha s permission,king Dashrath went into the palace. Seeing a pot in his hand, all the three queens came running to him. They were very excited indeed.

"What is there in this pot ?" asked the queens. The king told them all about the *yajna* and handed over the pot to Kaushalya, the eldest queen. Then all the three queens shared the *prasad* as directed by Saint Shringi.

Before long, the king got the news that all the three queens were in the family way. He was beside himself with joy. In his heart of hearts, he thanked the Almighty and both the saints as well. His wish was going to be fulfilled.



Days rolled by followed by weeks and months. In time, approached the day of the births of four princes of Ayodhya. This auspicious day was the ninth day of the waxing moon in the month of *Chaitra.* The three queens bore four lovely sons in the evening. King Dashrath had become the father of four sons.

Kaushalya, the eldest queen, gave birth to one son and Kaikeyee too. But Sumitra bore two male twins. The town of Ayodhya put on a new look and celebrations went on for a number of days.

As for the royal palace, it resounded with shouts of joy. Everyone was happy at the births of the princes. The maids and attendants were given awards and gifts by the king and the queens. There was joy and bliss everywhere around.

அடுத்த இதழில் தொடரும்...

(20 பக்கத் தொடர்ச்சி)

வளம் குறைந்தமைக்குச் சமண பௌத்தம் காரணமாக அமைந்தமையால் சம்பந்தர் அக்காழ்ப்புணர்வை வெளிப் படுத்தவே பாடியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. சமண பௌத்தரை இழித்துக்கூறி அவர்களுடைய போலிவேடம் ஒழுக்கக்கேடு என்பவற்றைப் பொது மக்க ளுக்கு எடுத்துக்காட்டி அவர்களை அச்சமயங்களினின்றும் விடுவித்து சைவ சமயப்பற்றுக் கொள்ளச் செய்யவே அவ்வாறு பாடியிருத்தல் வேண்டும். அவ்வாறு இழித்தும் பழித்தும் கூறிய செயல் ஒருவகையில் மகிழ்வும் மனநிலைவும் ஏற்படுத்தி சைவ சமய மறுமலர்ச்சிக்கு ஊக்கத்தை அளித்திருக்க வேண்டும். எனவே சைவ சமய மறுமலர்ச்சிக்குத் திருஞானசம்பந்தர் செய்த தொண்டு சிறந்த ஊன்றுகோலாக அமைந்ததெனலாம்.

சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக அரியரன் உருவம் தோற்றுவிக்கப்பெற்றது. அது சிவனையும் திருமாலையும் ஒரே உருவச் சிலையில் வைத்து வணங்கும் உமையொருபாக வடிவம் அதற்கு வழிகாட்டியாக அமைந்திருக்கலாம். திருமாலை உமையம்மையின் உடன் பிறந்தவர்கள் ஏற்றுக்கொள்ளச்செய்தனர். அதன் வாயிலாக இரு கடவுளாருக்கும் நெருங்கிய உறவு முறை கற்பிக்கப்பெற்றது. உபநிடதங்களில் முழுமுதற் பொருளாகக் கருதப்பெறும் பிரம்மன் என்ற நான்முகன் இவ்விரு மூர்த்திகளோடும் இணைக்கப் பெற்று திரிமூர்த்தி வடிவம் தோற்றுவிக்கப்பட்டது. மறை நெறி சமய தரிசனங்கள் அவற்றுக்கிடையிலிருந்த வேற்று மைகளை மறந்து அவையாவும் ஒரே உண்மைப் பொருளை உணர்த்தவல்லன என்று வலியுறுத்தும் கருத்தை கி பி பதின்னான்காம் நூற்றாண்டில் தோன்றிய-தாகக் கொள்ளப்படும் பிரபோத சந்திரோதயத்தில் காணலாம். சங்கராச்சாரியாரின் அறிவுரைகளைப் பின்பற்றிய ஸ்மார்த்தர் சிவபூசை செய்வதாகக் கூறிக்கொண்டு சிவன் திருமால் சூரியன் கணேசர் துருக்கை என்னும் ஐந்து தெய்வங்களுக்கும் ஒருங்கே வழிபாடு செய்துவந்தார். சைவ சமயத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையேயும் இத்தகைய பொதுவான தொடர்பு இருந்தமை முன்னமே குறிப்பிடப்பெற்றுள்ளது. அவற்றைச் சில சிற்ப சான்றுகளைக் கொண்டு அறியலாம்.

### *வைணவம்*

வேதத்தை அடியொற்றி இந்திய ஒழுக்க நெறிச் சமயங்கள் வளர்ந்தன. அவற்றுள் திருமாலை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வளர்ந்த சமயம் வைணவமாகும். அச்சமயத்தைப் பற்றிய குறிப்புக்கள் மறைநெறி (வேதம் ) ஓத்துக்கள் (உபநிடதங்கள்) ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. மறைநெறிகளில் திருமால் முதன்மைக் கடவுளாகக் குறிப்பிடப்பெறவில்லை. சிவன் நான்முகன் ஆகிய கடவுளுக்கு இணையாக வைத்து மதிக்கப் பெற்றான். ஆனால் ஓத்துக்களில் அவன் முதன்மை உடையவனாகக் கருதப்பெற்றான். திருமால் இவ்வுலகைப் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய தொழில்களுக்கு அடிப்படையானவனாகக் கருதப்பட்டான். அதனையடுத்து வரலாற்றுத் தொன்னூல் (புராண இதிகாசம்) காலங்களில் திருமாலைப் பற்றிய கருத்துக்கள் மெய்மங்களின் அடிப்படையிலும் சமய நம்பிக்கைகளின் அடிப் படையிலும் செம்மையான வளர்ச்சியைப் பெற்றன. அதன்வழி வைணவ சமயம் வளர்ந்து நாட்டில் உயர்ந்த நிலையை அடைந்தது.

வைணவ சமயத்தின் வளர்ச்சிக்குத் தென்னகம் சிறப்பான பங்கினை அளித்துள்ளது. தொல்காப்பியத்தில் வைணவ சமயம் தழைத்தோங்கிய நிலையில் இருந்ததைப் பற்றிய குறிப்புக்கள் மிகுந்துள்ளன. அடுத்து தோன்றிய சங்க நூல் தொகைகளான பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களில் வைணவ சமயம் பற்றியும் திருமாலின் சிறப்புப் பற்றியும் பல குறிப்புக்கள் உள்ளன. சங்க காலத்திற்குப் பின் வைணவம் தமிழகத்தில் சிறப்புற்று இருந்தமை பற்றிச் சிலப்பதிகாரம் சிறக்க விளக்குகிறது.

சிலப்பதிகாரக் காலத்திற்குப்பின் வைணவ சமயத்தை வளர்த்த பெருமை ஆழ்வார்களையே சாரும். அவர்கள் கி பி ஆறாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு முடிய வாழ்ந்தவர்கள். ஆழ்வார்களுக்குப் பின்னர் தமிழகத்தில் வைணவத்தை வேரூன்றச் செய்த பெருமை ஆசாரியப் பெருமக்களையே சாரும். அவர்கள் வைணவத்தின் அனைத்துப் பாடல்களையும் ஒன்று திரட்டினார். அவற்றுக்கு மெய்மப் பின்னணியை அமைத்துக் கொடுத்தனர். ஆசாரியார்களுள் இராமானுசர் முதன்மையிடத்தில் வைக்கத்தக்கவராவர். அவர் ஆழ் வார்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும் மறைநெறி பிரம்மசூத்திரம் பகவத்கீதை ஆகிய வடமொழி நூல்களின் மெய்மக் கருத்துக்களை இணைத்தும் வைணவ சமயத்திற்குத் தனித் தன்னமையை அமைத்துக் கொடுத்தார். அக்கொள்கையினை இராமானுசருக்குப் பின்வந்த ஆச்சாரியப் பெருமக்கள் வளர்த்துச் சிறப்பித்தனர்.

வைணவ சமயத்துக்கு அடிப்படையாக அமைந்த மெய்மத்தை விசிட்டாத்து வைதம் என்று அறிஞர் சுட்டுவர். அதனை மெய்மம் இன்பம் (இதம்) நாளுறுதிப் பொருள் (புருடார்த்தம்) என்ற நிலையில் உணரலாம் விசிட்டாத்துவைதம் சேதனம் அசேதனம் ஈசுவரன் என்ற மூன்று உறுதிப் பொருள்களை ஏற்கும். அவற்றுள்

சேதனம் என்பது உயிர்களுடைய அறிவின் தொகுதியாகும். அசேதனம் என்பது உயிரற்ற பொருள்களின் தொகுப்பாகும். ஈசுவரன் என்பது திருமாலைக்குறிக்கும். இம்முப் பொருள்களும் பிரிக்கமுடியாத நிலையில்(அபர்த்தச் சித்த விசேடனம்) ஒன்று சேர்ந்திருக்கும் , இவை குண குணி பாவத்துடன் ஒன்றுபட்டுள்ளதாகக் கருதுவர். காட்டாக கதிரவன் என்பது குணி. கதிரவனின் ஒளிக்கதிர்கள் குணம். இந்த இரண்டும் ஒன்றுபட்டிருக்கும் நிலையே பாவம் எனப்பெறும். இந்நிலையில் சேதனம் அசேதனம் என்ற பண்பினை இறைவன் குணி என்னும் மூலப் பொருள்களிலிருந்து பெற்று நிலையாக நின்றுள்ளான் என்பர்.

வைணவ சமயத்தார் திருமாலை எண்வகைப் பண்புடையவராகப் போற்றுவர். அவை பாவம் (வாத்சல்யம்) தலைமை(சர்வஜஞுத்வம்)செயல்முடிக்கும் திறன் (சர்வசக் தித்துவம்) அனைத்து விருப்பமும் அனைவரையும் ஆட்கொள்ளும் நிலை (சர்வவாமித்துவம்) இரக்கம் முதலியனவாகும்.

***திராவிட சமயம்***

பண்டைய நாளில் வடநாட்டினின்று சமணம் பௌத்தம் மறைநெறி (வெதீகம்) முதலிய சமயங்கள் தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்னரே தமிழர் தமக்கெனத் தனிச் சிறப்புடைய திராவிட சமயத்தை மேற்கொண்டொழுகினர். அவர்கள் முருகன் கொற்றவை சிவன் திருமால் முதலிய கடவுளரை வணங்கி வழிபாடு செய்தும் வந்தனர். அந்நாளில் மறைநெறிப் பார்ப்பனர் தம் வேள்விகளில் ஆடு பசு மான் முதலியவற்றைக் கொன்று வந்தது போலவே தமிழரும் முருகன் கொற்றவை முதலிய கடவுளர்க்கு ஆடு கோழி முதலியவற்றைப் பலியிட்டு வணங்கி வந்தனர். உயிர்ப் பலியிடுவதில் மறைநெறிச் சமயத்தோடு ஒத்திருந்தனர். எனினும் பண்டைத்தமிழர் சேயோன் மாயோன் என்னும் சிவன் திருமால் கடவுளர்க்கு உயிர்ப்பலி செய்ததாகத் தெரியவில்லை. மேலும் அந்நாளில் சைவம் என்றும் வைணவம் என்றும் தனித்தனியே இருசமயங்களும் பிளவுபடாமல் இருந்தன.

குறுகிய நோக்கமும் கொள்கையும் கொண்டு ஒதுக்கப் பட்டுகிடந்த மறைநெறிச் சமயம் பௌத்த சமண சமயங்களைப் போன்று உயரிடத்தைப் பெற முயன்றது. சமண பௌத்த சமயங்களை அடக்கவும் ஒடுக்கவும் முற்பட்டனர். மறைநெறிச் சமயத்தினர் தமிழர் வழிபாட்டு நெறியுடன் சேர்ந்து பொது மக்களின் துணைத்தரவைப் பெற முற்பட்டனர். அழியும் நிலையிலிருந்த மறை நெறிச்சமயம் திராவிட சமயத்தைத் தழுவிப் பற்றிக் கொண்டது. மறைநெறிச்சமயம் திராவிட நாட்டுத் தெய்வங்களாகிய முருகன் கொற்றவை சிவன் திருமால் முதலிய கடவுளரை ஏற்றுக்கொண்டது. அத்தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு மறைநெறிக் கடவுளார்க்கும் திராவிடக்கடவுளார்க்கும் புதிய உறவு முறைகளைக் கற்பித்துக் கொண்டனர்.

தமிழ் முருகனுக்குச் சப்பிரமணியன் கந்தன் முதலிய பெயர்களைச் சூட்டினர். வள்ளியென்னும் ஒருதமிழ் மனைவியோடிருந்த அக்கடவுளுக்குத் தெய்வயானை என்னும் ஆரிய மறைநெறிப் பெண்ணொருத்தியை இரண்டாம் மனைவியாகக் கற்பித்தனர். சிவனென்னும் திராவிடக்கடவுள் உருத்திரன் என்னும் மறைநெறிக் கடவுளோடு இயைபு படுத்தப்பெற்று இரண்டும் ஒன்றெனவே கருதப்பெற்றது. சிசனதேவர் என்று மறைநெறிப் பார்ப்பனரால் தொடக்க காலத்தில் இழித்துரைக்கப்பெற்ற சிவலிங்க உருவம் திராவிட மறைநெறி உறவுக்குப்பின்னர் உயர்ந்த கடவுளாக மறைநெறிச் சமயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கொற்றவையைச் சிவபெருமானின் மனைவியாக்கினர். கொற்றவை காளி துர்க்கை முதலியோர் பார்வதியின் வெவ்வேறு வடிவங்கள் என்று கற்பிக்கப்பட்டன.

பார்வதிக்கும் சிவனுக்கும் ஆறுமுகன் மகனாகப் பிறந்தான் என்றனர். பல்வேறு கட்டுக்கதைகளை உருவாக்கினர். திருமால் என்னும் திராவிடக்கடவுளிடம் மறை நெறிக் கடவுளரான விட்ணு சூரியன் முதலியோர் இயைபு படுத்தப் பெற்றனர். புதிய உறவு முறைகளையும் கதைகளையும் திரித்து விட்டனர். இந்திரன் சந்திரன் வளியரசன் சூரியன் முதலிய இயற்கைக் கடவுள் மறைக்கப் பெற்று மறக்கப்படும் சூழலை உருவாக்கினர். இவற்றிற்கு ஏற்ப புதிய புதிய வரலாற்றுப் புனைவுரைகளைக் கற்பித்து எழுதினர். அந்த வகையில் ஆரியத் திராவிடத் தொடர்பை உருவாக்கிக் கொண்டனர். அந்தத் தொடர்புகளால் புதிதாகத் தோன்றிய சமயமே இந்து சமயம் எனப்பெற்றது. பக்தி இயக்கத்தை துணைத்தரவாகக் கொண்டு பின்னாளில் வந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் இந்துசமயத்தை நிலைநாட்ட முயன்றனர்.

எனவே ***முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய் வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண். செந்தமிழோடாரியனை சீரியனை ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் அந்தமிழின் இன்பப் பாவினை அவ்வடமொழியைப் பற்றற்றார்கள் பயிலரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும் கோவினன்*** என்று இவர்கள் கூறியமை புதிய ஆரிய திராவிட மறைநெறிக்குச் சமயக்கலப்பினை வற்புறுத்துவதற்கேயாகும். வேதநெறி

தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க என்றும்
தரணிமேற் சைவமுடன் அருமறையின் துறைவிளங்க
என்றும் சைவ முதல் வைதீகமும் தழைத்தோங்க என்றும்
சைவநெறி வைதிகத்தின் தருமநெறியோடும் தழைப்ப

என்ற ஆரிய திராவிடச் சமயங்கள் இரண்டையும் இணைத்துப் பாடிப் பக்தியுணர்வை மக்களிடையே ஊட்டினர்.

## கலசம்சந்தாப் படிவம்

பெயர்: ..............................................................................

..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

தொலைபேசி இலக்கம்: ..............................................................................

விபரம்:

2 வருடங்கள் (பிரித்தானியா) = 10 பவுண்

2 வருடங்கள் (ஐரோப்பா) = 14 பவுண்

2 வருடங்கள் (ஏனைய நாடுகள்) = 24 பவுண்

**அலுவலக உபயோகத்திற்கு:**

சந்தா இல: ..............................................................................

சந்தா பெற்றுக் கொண்ட திகதி: ..............................................................................

சந்தா முடிவடையும் திகதி: ..............................................................................


# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC**

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR AIRLANKA**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

# GLEN CARRIERS LIMITED

**14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**

**Tel: 0181 740 8379/ 0181 749 0595**

**Fax: 0181 - 740 4229 Telex: 929657 Glenca G**

**BONDED WAREHOUSE**

**LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14, TEL: 575576**

# இலக்கியத்தில் கூந்தல்

கூந்தல் மகளிரின் மங்களப் பொருள்களான தாலி வளையல் மஞ்சல் குங்குமம் பூ தாலி மெட்டி முதலியவற்றைப் போன்று புனிதமானது. பெண்கள் அணியும் புறப்பொருட்கள் கற்புடைய பெண்கள் இவற்றை அணிவதால் சிறப்பு உண்டாகின்றது. ஆனால் கூந்தலோ அவள் பிறக்கும் போதே அவளுடன் சேர்ந்தே பிறந்து அவள் வளரும் போது தழைத்து நீண்டுஅவளுடனே சேர்ந்து வளர்ந்து அவள் முதுமை அடையும் காலத்து தானும் நரைத்து அவளுடனே சேர்ந்து மறையும் தனிச் சிறப்புடையது பொதுவாக இருபாலருக்கும் உரிய தலை மயிருள் குதிரைவாற்சாமை போன்றும் கமுகோலை போன்றும் மயில்தோகை போன்றும் அடர்ந்தும் தழைத்தும் நீண்டும் இருப்பதால் பெண்கள் தலை மயிரை ஓதி குழல் கூந்தல் கூழை என்றும் கூறினர். ஐம்பாற் கூந்தல் என்றும் அலங்கரித்தனர் மயிலின் உச்சி போன்று சிறியதாகவும் சிறுமையானதாகவும இருந்ததினால் ஆண்களின் தலை மயிர் குடுமி என்றும் குஞ்சி என்றும் கூறப்பெற்றது. கோவலன் தலைமயிரைக் குஞ்சி என்றும் கண்ணகியின் தலைமயிரை வார்குழல் என்றும்குறிப்பிடும்வரிகளை! சிலப்பதிகாரம் மதுரைக்காண்டம்! காணலாம் கதுப்பு என்னும் சொல் ஆண்பெண் இருபாலரின்தலைமுடியைக்குறிக்கின்றது.

கூந்தலையும் மகளிரையும் நம்முன்னோர் ஒன்றாகக் கருதினார்கள் அதனால்தான் மகளிரைத்தழுவு தலைக் கூந்தல்கொள்ளுதல் என்றனர் பிறஆடவர் கை தம்கூந்தல் மீது படுவதைக்கூட கற்புள்ள மகளிர் ஒப்புவதில்லை. மாந்தர் கூந்தலைக் கோதி கிளர்ச்சி கொள்ளுதல் போல புறா கோழி போன்ற பறவை இனங்களும் அலகால் துணைகளின் சிறகை கோதி உணர்வு கொள்கின்றன கணவனுடன் இருக்கும் போதுமட்டும் கூந்தலுக்கு நறுமணம் தடவி வகிர்ந்து வாரி மலர் சூடி அழகுபடுத்திக் கொள்கின்றார்கள் தலைவன் பிரிவின் போதும் மறைந்த பின்னும் உள்ளக்கிளர்ச்சியை உண்டாக்கும் மலர் சூடுதலைத் தவிர்க்கிறார்கள்.

பெண்களை முதன்மைப்படுத்திக் கொள்ளும் காவ-ியங்களே அதிகம் காரணம் காவியங்களுக்கு அழகு சேர்ப்பவர்கள் பெண்கள் அவர்களுக்கு அழகு தருவதோ அவர்தம் கூந்தல் எல்லாக் காவியங்களிலும் காரிருங் கூந்தலைப் பற்றி அதிகம் பேசப்படுகின்றது. குறிப்பாக மகாபாரதத்தில் பாஞ்சால-ியின் சபதம் காவியத்தின் மிக முக்கிய பகுதி பாஞ்சாலியின் சபதமாக கூந்தலே முதன்மை வகித்தது. கூந்தல் பெண்களின் மகிழ்ச்சி அயர்ச்சி இன்பம் துன்பம் சினம் வேட்கை முதலான மன உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவியாக கையாளப்படுகின்றது.

பெண்களின் கூந்தலுக்கு மணம் உண்டா? இல்லையா என்ற சந்தேகத்திற்கு சிவபெருமானிற்கும் நக்கீரனிற்கும் சங்ககாலத்தில் மாபெரும் பட்டி மன்றம் அந்நாளில் நடந்தது கொங்குதேர் வாழ்க்கை

எனத் தெடங்கும் பாடல் மூலம்

காரிருங்கூந்தல்........

குழல்போற் கமழும் மதுமலரே...... .........

கருங்குழல் போலுளவே விரை நாறுங்கடிமலரே.......

மங்கை வார்குழல்போல நாற்றமுடய

வுளவோவறிவுநறுமலரே..........

என்றெல்லாம் மழைக்கண் மாதராரின் நறுங் கூந்தலைப் புகழும் பாண்டிக்கோவை மலரைவிட கருங்கூந்தல் மணம் மேம்பட்டது என்று கூறுகிறது. கோவலன் கண்ணகியை மறந்து மாதவி இல்லம் சென்றமையால் கண்ணகிதன் கூந்தலுக்கு நெய் இடுவதில்லை அதனால் கூந்தல மணத்தை இழந்தது இதனை இளங்கோவடிகள் மையிருங் கூந்தல நெய்யணி மறப்ப என்று கூறுகின்றார். அதே சிலம்பில் கண்ணகியின் கூந்தல் ஒப்பனையை புரிகுழல் அளகத்து என்றும் பல்லிருங் கூந்தல் சில்மலர் அன்றியும் என்றும் தாழிருங் கூந்தல் தையால் என்று நீண்டு தாழ்ந்தகரிய அவளுடைய கூந்தலைப் புகழிகின்றார். கம்பரின் காவியத்தில் கூட மண்டோதரி புலம்பல்மூலம ஒரு பா பாடுகின்றார். இராவணன் மரணத்தின் போது

வெள்ளெருக் கஞ்சடைமுடியான் வெற்பெடுத்த

திருமேனி மேலும் கீழும்

எள் இருக்கும் இடன் இன்றி உயிர் இருக்கும்
இடன்நாடி இழைத்தவாறே!
கள் இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சி
றையில் கரந்தகாதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி
சிவனுடைய சடைமுடியில் வெள்ளெருக்கம்பூ
இருந்ததுஅது மயக்கத்தக்க பூவோ மயங்கத்தக்க
சடைமுடியோ அல்ல ஆதலால் இராவணன்
மயங்காது அங்கேவீரம் காட்டினான் சானகியின்
கூந்தலோ மலர்க்கூந்தல் அதிலே கள் இருந்தது
அதனால இராவணன் மயங்கினான் மடிந்தான்.
சங்ககால இளங்கீரனார் என்னும் புலவர் குறுந்தொ
கையில் கூந்தலைப் பற்றிய ஒருபாடல்
ஊழின் வலிமையால் தலைவியைக் காதல்
கொண்டான் தலைவன் அவள் அருகில் நின்று
பேசும்போது அவளுடைய கூந்தலின் தன்மையை
உணர்ந்து கூறுகின்றான்.

யான நயந்துறைவோன் தேம்பாய்கூந்தல் வளங்கெழு
சோழர் உறந்தைப் பெருந்துறை
நுண்மணல அறல் வார்ந்தன்ன நன்னெறியவ்வே
நறுந் தண்ணியவேயான் விரும்பும் தலைவியுடைய
கூந்தல் நாள்மலரில் தேன்பாயும் கூந்தல்
வளமிக்கசோழனுடைய பெரியதுறையில்
நுண்மையான கருமணல் நீண்டு
படிந்துள்ளதைப்போல் அடர்ந்த நெறிப்பையுடையது
நறுமணமுள்ளது மிக்க குளிர்ச்சியுமுடையது
மென்சீர்க் கலி மயிற்கலாவத்தன்ன
இவள் ஒலிமென்கூந்தல உரியவா நினக்கு
நல்ல நீண்டகூந்தல் மயிலின் தோகையைப்
போலிருக்கும் என்கிறார் கபிலர்
நற்றிணைப்பாடல்
அணிகிளார்கலாவமைதுவிரித்தியலும்
மணிபுரையெருத்தின்மஞ்ஞைபோல்நின்
வீபெய்கூந்தல்வீசுவளியுளர
என்றுவிரிகின்றது
சாத்தனார் நரைத்த பின்னுங்கூடப் பெண்டிர்கூந்தல
நீளம் குறைவதில்லை அது நீண்டு
விளங்குவதாகவே இருக்கும் என்பதை
நன்னெடுங்கூந்தல்நரைமூதாட்டி
என்றுவிளக்குகின்றார்.


அறுபதுவயது ஆகிறது அவள்தலை முழுவதும்
நரையாகியது இளமையும் காமமும் இருந்த இடம்
தெரியாமல் மறைந்தது அதனை
ஆறைந்திரட்டியாண் டுனக்காயதென் நாறையுங்
கூந்தலு நரைவுராவுற்றன
இளமையும் காமமும்யாங் கொளித்தனவோ
என்கிறது மணிமேகலை
இன்னொரு மூதாட்டியின் தலை
தண்ணறல் வண்ணந் திரிந்து வேறாகி
வெண்மணலாகிய கூந்தல்

-மணிமேகலை-

மேற்கூறிய பாடல் வரிகளிருந்து கரியஅடர்ந்த
கூந்தலிருக்கும் இளம்பருவத்தும் அரிவை தெரி
வையாகிய நடு நிலை பருவத்தும் மட்டுமே மகளிர்
காதல்வயப்படுகிறார்கள் என்பதையும் இளமைம
றைந்து முதுமையுற்றபோது காமமும் மறைந்து
நரைமுடியினர் ஆகின்றனர் என்பதையும் உணரலாம்
பரட்டைத்தலையா என்று கவுண்டமணி

செந்திலைப் பார்த்து கூறுவது சங்ககாலத்திலும
உண்டு வாராத தலைமுடியை இப்போது போன்று
வாராததலைகளும் அந்நாளில் இருந்தது போலும்
படியவாராமல் சிதறிக்கிடக்கும் தலை முடியைப்
பாறுமயிர் என்று புறநானுற்றுப் பாடல்374 கூறுகின்றது
மயிர் என்ற சொல்லை இன்றும கீழான இழிவான-
சொல்லாக பயன்படுத்துகிறார்கள் தலையிலிருந்து
பிறர்எடுக்காமல் தானாக விழும் தன்மை படைத்தது.
மயிர் உயர்ந்த இடத்தில்லிருந்து விழும் மேலே
போவதில்லை கீழே வீழ்ந்து கீழ்மை அடைகின்றது.
அதனால் இழிந்த தன்மை பெறுகின்றது.
எண்சாண் உடம்பிற்கு தலையே பிரதானம் மனித
உறுப்புகளுள் தலையானது. தலை
அவ்வளவு உயர்ந்த இடதிலிருந்து மீண்டும்
பொருத்த இயலாது
நற்குடியில் பிறந்தோர் பெருமை உயர்மைக்குரிய
தங்கள் நிலையிலிருந்து தங்கள் நிலையிலிருந்து
எக்காரணம் கொண்டு தாழ்ந்தாலும் உயிர்
வாழாமையே மானம் எனப்படும் அத்தகைய
சிறப்புக்குரியவர்கள் மானம் ஒரு முறை
இழக்கப்பட்டால் எக்காரணம் கொண்டும்
அக்குடிமீண்டும் சிறப்பு ஏற்படாது இழந்தது
இழிந்தது மாந்தர் மட்டுமல்ல மிருகங்களில்

கவரிமான் தன்மயிர் இழப்பின் உயிர்நீக்கும் தன்மையைப்பெற்றது.
எனவேதான் மானத்தையும் மயிரையும் ஒப்பிட்டார்கள் தெய்வப்புலகர்கள் கூந்தல் மாந்தர் உடலுடன் மட்டுமல்லா மல் பல்வேறு வகையில் மனித வாழ்க்கையுடன் இணைந்து இன்ப துன்பங்களில் இரண்டறக் கலந்து அழகியகாட்சிப் பொருளாக அமைந்துள்ளது. கள்ளிருக்கும மடவார் மலர் கூந்தல்.






# MARKANDAN & CO

## SOLICITORS

*Empowered to Administer Oaths*

THAMIL HOUSE
720 ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

**M. MARKANDAN LLB**

* All aspects of immigration matters from appeals to European court of human rights * All types of conveyancing* Litigation * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

**LEGAL AID**

**TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303**

# விவிலிய வேததத்துவங்களும் வேதாந்தசித்தாந்தங்களும்

***விவிலிய வேதம் (பைபிள்) என்ற புத்தகத்தை தமிழாக்கம் செய்தோர் பரிசுத்த வேதாகமம் எனத் தமிழாக்கம் செய்து கொண்டமை மிகப் பொருத்தமானதொன்றாகும் ஏனெனில் சைவர்கள் வேதங்களை எல்லாத்தர மக்களின் வாழ்வு முறைகளைக்குறித்து அருளப்பட்ட தெனவும் ஆகமங்களை ஞானம் கைவரப்பட்டோர்க்கென அருளப்பட்டதெனவும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இவ்வகையில் ஒப்பு நோக்கின் விவிலிய வேதத்தின் பழைய ஏற்பாட்டை வேதங்களுக்கும் புதிய ஏற்பாட்டினை ஞானக்கருத்துக்களை மட்டும் கருத்திற் கொண்டு ஓரளவிற்கு ஆகமங்களுக்கும் நிகரானவை எனக்கருதலாம்***

காலத்தாலும் பழைய ஏற்பாடும் வேதங்களும் சமகாலத்தன. அதே போல் புதிய ஏற்பாடும் ஆகமங்களும் சமகாலத்தனவாம். இனி இவற்றின் தத்துவங்களின் ஒருமைப்பாட்டினை மேலே ஆராய்வோம்

***ஒன்றே உண்மைப்பொருள்***

விவிலிய வேதத்தின் அடிப்படைக் கோட்பாடு உயிர்களுக்கெல்லாம் மூச்சு ஒன்றே என்பதாகும். இக்கருத்து பலவாறாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. தேவனாகிய கர்த்தர் மனுசனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி சீவவிசுவாசத்தை அவன் நாசியில் ஊதினார். மனுசன் ஜீவாத்மா ஆனான் (அத்தியாயம்2-7) சகலவித மிருகங்களையும் பறவைகளையும் மண்ணில் உருவாக்கி சீவசுவாசம் கொடுத்தார். (அத்தியாயம்2-!-19) இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? அவைகளில் ஒன்றாவது தேவனால் மறக்கப்படு வதில்லை. (லூாக்கா 12-6) நம்மை உண்டாக்கின கர்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் (சங்கீதம் 95-6) பூமியும் அதன் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. (சங்கீதம் 24-1) அவர்நம்முடைய தேவன் நாம் அவர் மேய்ச்சலின் சனங்களும் அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே சங்கீதம். 95-14) நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று நினைவு கூறுகின்றார் (சங்ககீதம்103-14) நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள அவைகள் மாண்டு தங்கள் மண்ணுக்குத் திரும்பும் சங்கீதம் 105-29)

எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவனே. கொரிந்தியர் 12-6) நாம் யூதராயினும் கிரேக்கராயினும் அடிமைகளாயினும் சுயாதீனராயினும் எல்லோரும் ஒரேஆவிக்குள்ளாக வேதாகந

தீர்க்கப்பட்டோம் (கொரிந்தியர்12-13) நீங்களே கிறித்துவின் சரீரமாயும் தனித் தனியே அவயவங்களாகவு மிருக்கிறீர்கள் (கொரிந்தியர்12-27) எல்லார்க்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும் எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். (எபேசியர் 4-6) நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாகவும் அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கின்றோம். (எபேசியர்5-30) மனுசனுக்கென்று ஊழியம் செய்யாமல் கர்த்தருகத்கென்றே நல்லமனதோடே ஊழியஞ் செய்யுங்கள்(எபேசியர்6-8). எசமானர்களே அப்படியே நீங்களும் வேலைக்காரருக்குச் செய்யவேண்டிய வைகளச் செய்து அவர்களுக்கும் உங்களுக்கும் எசமானனானவர் பரலோகத்தில் இருக்கிறா-ரென்றும் அவரிடத்தில் பட்சதா பமில்லையென்றும் அறிந்து கடுஞ் சொல்லை விட்டு விடுங்கள்(எபேசியர் 6-9) அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிகின்றோம்(யோவான் 4-13) கர்த்தரின் ஆவி அதன்மேல் ஊதும்போது புல் உலர்ந்து பூ உதிரும் சனமே புல்( ஏசாயா 40-13). இவ்வாறு பல்வேறு அருள் வாக்குகள் மூலம் விவிலிய வேதம்கர்த்தரின் படைப்பே இவையெல்லாம் என்ற தத்துவத்தை வலியுறுத்துகின்றது. அதனால் நாம் காணும் உயிரினங்களின் மூச்சும் அவரதுதான் என்பது எள் அளவும் பிசகில்லாமல் உறுதிப்படுத்தப்பட்டுள்து

இனி வேதாந்தத்தின் அடிப்படைக்கோட்பாடும் இதுவேயாம். இது சிருஷ்டிக்கு முன் ஒன்றாகவே இருந்தது. நான் பலவாக ஆவேன் வெகுவாக வளர்வேன் என்று இவ்வுலகிலுள்ள அத்தனையுமாயிற்று.(சாந்தோக்கியஉபநிடதம்6-2-3) இது ஆதியில் பிரம்மமாகவே இருந்தது நான் பிரம்மமாகவே இருக்கின்றேன். என்று தன்னைத்தானே உணர்ந்து அதினின்று இது அனைத்துமாக ஆயிற்று (பிருஹதாரணிய உபநிடதம்1-4-10) ஈசுவரனுடைய சரீரவடிவான இந்தக்காரிய காரணப் பிரபஞ்சம் எல்லாப் பிராணிகளுக்கும் பொது. இந்தப் பிரபஞ்சத்திற்கு எல்லாப்பிராணிகளும் பொது. இந்தப் பிரபஞ்சத்தில் ஒளி மயமாயும் அமிருதமாயும் உள்ள புருஷன் எவனோ அவனும் இந்த ஜீவாத்மாவிடம் ஒளி மயமாயும் அமிருதமயமாயும் உள்ள புருஷன் எவனோ அவனும் இங்ஙனம் நான்கு வகையாகப் பிரித்துக் கூறப்பட்ட அனைத்தும் ஆன்மாவே. இதுவே அமிர்தம் இதுவே பிரம்மம். இதுவே எல்லாம். (பிருஹதாருண்யம்2-5-14) அப் பரமாத்மாவே ஒவ்வொரு உருவத்திலும் அதே உருவமாக ஆயிற்று. அவ்விதம் தன்னை வெளிக் காட்டுவதற்காக உருக் கொண்டது. அதுவே மாயாசக்தியால் பல வடிவங்களை ஏற்றது. அப்பிரமம் ஆதியில்லாதது இவ் வாத்மாவாகிய பிரம்மமே எல்லாவற்றையும் அனுபவிப்பது. (பிருஹதாருண்யம் 2-5-19) எவர் பூமியில் இருந்து கொண்டு பூமியினுள் உறைகின்றாரோ எவரைப் பூமி அறிந்து கொள்ளவில்லையோ அதை ஆள்கின்றவர் எவரோ அவர் தான் உன்னுடைய ஆத்மா. உன்னில் உறைபவரும் அழிவற்றவரும் ஆகிய ஆத்மா எவர் எல்லா உயிர்களிடமும் இருந்துகொண்டு அவற்றுள் உறைகின்றாரோ எவரை எல்லாப்பிராணிகளும் அறிந்து கொள்ளவில்லையோ அவர் தான் உன்னுள் உறையும் ஆத்மா. எவர் அறிவிலிருந்து கொண்டு அதனை ஆள்கிறாரோ எவரை அறிவு அறிந்துகொள்ளவில்லையோ அவர்தான் உன்னுடைய ஆத்மா. அவர் காணப்படாமல் காண்பவர் கேட்கப்படாமல் கேட்பவர் நினைக்கப்படாமல் நினைப்பவர் அறியப்படாமல் அறிபவர் அவரைக்காட்டிலும் வேறாகக் கேட்பவர் இல்லை. அவரைக்காட்டிலும் வேறாக நினைப்பவர் இல்லை. அவரைக் காட்டிலும் வேறாக அறிபவர் இல்லை. அவர்தான் உன்னுள் உறையும் அழிவற்ற ஆத்மா. மற்றைய எல்லாம் அழிவுள்ளது (பிருஹதாருண்யம் 3-7-ல் 3-15-22-23) ஆத்மாவின் பொருட்டே கணவன் மனைவி மக்கள் பிறவனைத்தும் பிரியத்திற்குரியதாகின்றன ஆகையால் இவையனைத்திலும் ஆத்மாவே பார்க்கப்படவேண்டும் (பிருஹதாருண்யம் 2-4-5) வீணை வாசிக்கப்படும்போது வெளிவரும் ஸ்வரங்களை எங்ஙனம் பிரித்துக் கொள்ள இயலாதேயாயினும் ஸ்வரங்களை வீணையின் பொது நாதத்திலும் வீணை ஒலி அலைத் தொடர்பிலும் உள்ளடங்கியே உணரப்படுமோ அவ்வாறே சப்த ஜாலமாகின்ற உலகத்தை ஆத்மா வினின்றும் பிரித்துப்பார்க்க முடியாது. (பிருஹதாருண்யம் 2-4-9-) சிலந்திப் பூச்சி தன்னிடமிருந்துண்டான ,நூலின் வழியே எங்ஙனம் வெளிக் கிளம்புகின்றதோ நெருப்பிலிருந்து உண்டான சிறு பொறிகள் எங்ஙனம் கிளம்புகின்றனவோ அங்ஙனம் ஆத்மாவிடமிருந்து எல்லா இந்திரியங்களும் எல்லா உலகங்களும் எல்லாப் பொருட்களும் வெளிப்படுகின்றன. (பிருஹதாருண்யம்2-1-20) இவ்வாறான விளக்கங்களைக் கொண்டு வேதாந்தம் உயிர்களனைத்திலும் உறையும் ஆன்மாவாக இருப்பது அந்தப் பிரம்மமே என வலியுறுத்தும். சித்தாந்தம் பரம் பொருளையும் உயிர்களையும் வேறாகக்காட்டினும் அவரே இவ்வெல்லாவற்றுள்ளும் ஒன்றாய் பிறிதாய் நின்று இயக்குபவர் எனும் தத்துவத்தைக் கூறுகின்றது.

ஆயினும் சிவானு பூதிமான்கள் அவரே இதெல்லாம் என்று கண்டுணர்ந்துள்ளனர்

*படைப்புத்தத்துவம்*

விவிலிய வேதம் சிருஷ்டி பற்றி விபரிக்கையில் இயேசுநாதரைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிப்பதற்கு இந்தக் கிருபை பிதாவால் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (எபேசியர்3-11) அவர் காட்சிகளுக்கெட்டாத தேவனுடைய தற்சுரூபமும் சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்தில் உள்ளவைகளும் பூலோகத்தில் உள்ளவைகளும் பூலோகத்திலுள் ளவைகளும் காணப்படாதவையும் காணப்படுகின்ற சகலதும் அவற்றைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டவை (கொலோ செயர்1-15-16) இனி இயேசுநாதரே யூதருக்கு விடையளிக்கையில் தேவன் உங்கள் பிதாவாக இருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன் நான் சுயமாய் வரவில்லை. அவரே என்னை அனுப்பினார் (யோவான்8-42) என்பதன் மூலம் தானும் பிதாவும் ஒருவரே என்று வலியுறுத்தி கூறியிருக்கின்றார். இனித் தமது சீடனாகிய யோவானுக்குத்தாம் இருக்கின்றவரும் இருந்தவரும் வருகின்றவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர் நானே அல்பாவும் ஒமெகாவும் (ஆகியஎழுத்துக்களாகவும்) ஆதியும் அந்தமுமாயிருக்கின்றேன் என்று எடுத்துரைத்துள்ளார். (யோவானுக்கு வெளிப்படுத்தியது 1-8) பிதா தாமே படைத்த ஒரே குமாரன் இயேசுவை மனிதனாகப் பூமிக்கு அனுப்பு முன் வானத்திலும் பூமியில் உள்ள எல்லாவற்றையும் படைப்பதில் தமது கை ஆளாகப் பயன் படுத்தினார். இச்சிருஷ்டியின் போது தானும் பிதாவுடனே இருந்தார். என்பதனைத் தெளிவாகக் கூறியுள்ளார். (நீதி மொழிகள் 8-22-31) வானங்களைச் சிருஷ்டித்து அவைகளை விரித்து பூமியையும் அதிலே உற்பத்தியாகிறவைகளையும் பரப்பினவரும் அதில் இருக்கிற சனங்களுக்கு சுவாசத்தையும் அதில் நடமாடுகிறவர்களுக்கு ஆவியையும் கொடுக்கிறவருமான கர்த்தராகிய தேவன் சொல்வதாவது (ஏசயா 42-5) உன்னை உண்டாக்கினவரும் உனக்கு துணைசெய்கின்றவருமாகிய கர்த்தர் சொல்வதாவது (ஏசயா 44-2)

என்பன போன்ற அருளுரைகளால் சிருஷ்டியில் பிதாவின் முதற்படைப்பாகிய இயேசுநாதரே ஆவர் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

வோதாந்தமும் சிருஷ்டியை விபரிக்கையில் முதலில் பிரம்மமே நான் பலவாக ஆவேன் வெகுவாக வளர்வேன் என ஒளி நீர் முதலானவற்றையும் சிருஷ்டித்துள்ளது. (சாந்தோக்கியம் 6-2-3) இந்த அழிவற்ற பிரம்மத்தாலே சூரியனும் சந்திரனும் வானமும் பூமியும் தத்தம் இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன(பிருஹதாருண்யம்3-8-9-10) சிருஷ்டியின் மூலகர்த்தா பரப்பிரம்மமே என்று கூறினும் பிறிதோர் இடத்தில் சங்கடங்கள் நிறைந்ததும் ஞானத்தை மறைப துமான இச்சரீரத்தில் புகுந்துறையும் ஆத்மா எவனால் அறியப்பட்டதோ அனுப்பிவைக்கப்பட்டதோ அவன் தான் அனைத்துக்குங் கர்த்தா. அவன்தான் உலகத்தை சிருஷ்டித்தவன். உலகங்கள் எல்லாம் அவனுடையவையே. அவனே உலகெல்லாமும் (பிருஹதாருண்யம் 4-4-13) என்பதனால் பிரம்மத்தை அறிந்து அனுபவிக்கும் ஆற்றல் உடையவனுக்கு இந்தஆற்றலை பிரம்மம் வழங்குவதாக குறிப்பிடுகின்றது. பகவான் சத்திய சாயிபாபாவின் படைப்புக்களான அமெரிக்கநாணயம், (50 வருடங்களிற்குமுன் வெளியிடப்பட்டது ) பழங்கள், பகவத்கீதை, பொன் வெள்ளி முதலான லோகங்களாளான அணிகலன்கள் இறைமூர்த்தத்தின் பல்வேறு மூர்த்தங்கள் யாவும் இத்தன்மைத்தான ஆற்றல்களையே வெளிப்படுத்துவதாக கருதலாம். இதெல்லாம் அந்த இறைசக்தியின் வெளிப்பாடுகளேயாம்.

இறை அல்லது பிதாவின் பெருமைகள்

இறைக்கு நிகரான மற்றொன்று இல்லை. ஒருவரே உண்மைப்பொருள். பிறயாவும் தோன்றி அழியும் தன்மையுடையன என்ற கருத்தினை விவிலிய வேதம் சகல சாதியினரும் அவருக்குமுன்பாக ஒன்றுமில்லை. அவர்கள் சூனியத்தில் சூனியமாகவும் மாயையாகவும் எண்ணப்படுகிறார்கள். (ஏசயா 40-17) கர்த்தரே நம்முடைய நியாயாதிபதி கர்த்தர் நம்முடைய நியாயப் பிரமானிகர். கர்த்தர் நம்முடைய ராஜா. அவர் நம்மை ரட்சிப்பார் (ஏசயா 1-17) சிருஷ்டியும் நிலைப்பும் அழித்தலும் அவரது செயலே கர்த்தாவே! நீர் ஆதியிலே பூமியை அத்தி வாரப்படுத்தினீர் வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கின்றன. அவைகள் அழிந்துபோம் நீரோ நிலைத்திருப்பீர். அவைகளெல்லாம் ஆடையைப் போல் பழமையாய்ப்போம் ஒரு சால்வையைப்போல் அவற்றை சுருட்டுவீர் நீரோமாறதவர் உம்முடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை. (எபிரேயருக்கு எழுதிய நிரூபம் 1-10-12) என பிதாவின் அழியாத்தன்மையையும் பிறவற்றின் அழிவையும் குறிப்பிடும்.

இவ்வாறே வேதாந்த சித்தாந்தங்களும் இறைவனின் அளவற்ற ஆற்றல்களையும் கருணையையும் பலவாறாக போற்றியுள்ளன. அவனன்றி அணுவும் அசையாது. அவராலே அனைத்துப் பிரபஞ்சங்களும் சீவராசிகளும் இயங்குகின்றன. ஆதி அந்தமற்ற அவர் அணுவிற்கு அணுவாயும் பெரிதிற்கு பெரிதாயும் இருப்பர்

அணுமாத்திரமான நுண்பொருளான அதையே இதெல்லாம் ஆத்மாவாகக்கொண்டது. அதுவே சத்தியம் அதுவே நீயாக உள்ளாய். ( சாந்தோக்கியம் 6-9-4-) அதாவது அந்த அழிவற்ற பரம்பொருளின் நுண்பகுதியாக ஒவ்வொரு உயிர்களும் உள்ளன.

***இறையின் மாயசக்தியும் பிரபஞ்சமும்***

விவிலியவேதம் பிரபஞ்சம் மாயாசக்திகள் பற்றி விபரிக்கையில் காணப்படுகிறவைகள் அத்தனையும் அழிவுடையவை காணப்படாதது எதுவோ ( நித்தியசீவன் அல்லது பரமபிதா ) அது அழிவற்றது( கொரிந்தியர் 2-4-18) மாயை மாயை எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்கின்றான். (பிரசங்கி 1-2) அதாவது நாம் ஊனக்கண்களால் காண்கின்ற அத்தனையம் இறையின் மாயத்தோற்றங்களே. இத் தோற்றங்கள் அழியும் இயல்புடையவை. ஆனால் இறை மட்டும் அழிவற்றவர் என்ற கருத்திலே மாயை என்ற பதம் ஈண்டு கருதப்பட்டுள்ளது. மிருகத்தைப் பார்க்கிலும் மனுசன் மேன்மையானவன் அல்ல எல்லாம் மாயையே (பிரசங்கி3-19) ஏனெனில் மிருகங்களில் உறைபவரும் அந்த இறைவனே ஆகையினால் இறைவனின் மாயை வடிவங்களைக் கொண்டு நாம் ஏமாறுதல் ஆகாது. நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய். (ஆதியாகமம் 3-19) ஆத்மாவைக் கொல்லவல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்கின்றவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். (மத்தியூ6-18) இவ்வாறு பிரபஞ்சத் தோற்றம். இறைவனின் மாயைத்தோற்றம். அது அழிவுடையது அது அழிவுடையது இவற்றுள் உறைந்திருக்கும் ஆத்மா மட்டுமே அழிவற்றது எனத் தெளிவுபடுத்திக் கூறுகின்றது விவிலிய வேதம் .

வேதாந்தமும் பிரம்மம் தன்னை வெளிக்காட்டுவதற்காக மாயாசக்தியினால் இப் பிரபஞ்சமாயும் பல்வேறு உயிர்களாயும் வடிவங்களை எடுத்துள்ளது. ஆகையால் மாயா காரியமான அனைத்தும் அழிவுடையன ஆனால் பரமாத்மா ஒன்றே அழிவற்ற நித்தியபொருள் எனக்கூறும் இந்த உண்மையை பகவத்கீதை பலவாறாக எடுத்துக்கூறியுள்ளது.

***உயிர்களுக்கு அன்பு ஏன் அவசியமாகின்றது***

இறைவனே உயிர்களனைத்திலும் உறைவதனால் அவரால் படைக்கப்பட்ட சீவராசிகள் எல்லாம் அன்புடையவர்களாய் இருத்தல் வேண்டுமென்பது நியாயமானதாகும். தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. ஆனால் நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார் அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும் ( யோவான்4-12) தேவன் நம்மேல் வைத்திருக்கின்ற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கின்றோம். தேவன் அன்பாகவே இருக்கின்றார். அன்பில் நிலைத்திருக்கின்றவன் தேவனில் நிலைத்திருக்கின்றான். தேவனும் அவனில் நிலைத்திருக்கின்றார். (யோவான்4-16) தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்(யோவான் 4-20) உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை (யோவான் 2-15) ஏனெனில் மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் சீவனத்தின் பெருமையுமாகிய உலகத்தில் உள்ளவைகள் எல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல. அவைகள் (அழியும் தன்மையுடைய பஞ்சபூத சேர்க்கையால்) உலகத்தில் உண்டானவைகள்( யோவான் 2-16)

இந்தவகையில் பிதாவிடம் அன்புள்ளவனாக இருப்பின் அவர் படைப்பான சீவராசிகள் எல்லாவற்றின் மேலும் அன்புடையவனாக இருப்பான் என்ற உண்மை வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்விதமே வேதாந்தசித்தாந்தக் கோட்பாடுகளைப்பின் பற்றுகின்ற சைவர்கள் அன்பே சிவம் என அன்பினால் எல்லா உயிர்களும் பிணைக்கப் பட்டிருப்பதைக் காண்கின்றார். அதனாலே அன்பின்றி உயிர்களால் வாழமுடியாது என்றுணர்கின்றனர் அன்பு தத்துவமாகிய இறைவன் எல்லா உயிர்களின் உடலின் வலது பக்கத்தில் உறைந்திருக்கின்றார். என்பதனை பகவான் சத்தியசாயிபாபா எடுத்துக்கூறியுள்ளார். இதனையே விவிலிய வேதமும் கர்த்தர் எனது வலது பரிசத்தில் இருக்கின்றார் (அபோஸ்தலர் 2-25) எனக்கூறும்

***உயிர்களின் குறிக்கோள்***

இனி மனிதர்கள் உலகப்பற்று அற்றவர்களாகப் பிதாவிடம் சரணடைகையில் நித்திய ஜீவநிலையை அடைவார் எனும் விவிலிய வேதம் ஒரு மனுசனுக்குப் பகைவர்கள் அவன் வீட்டாரே (மத்தியு 10-37) தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவர்கள் எனக்கு பாத்திரன் அல்ல மகளையாவது மகனையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கின்றவன் எனக்கு பாத்திரன் அல்ல. (மத்தியு 10-37) தன் சீவனைக் காக்கின்றவன் அதை இழந்துபோவான் என்னிமித்தம் தன் சீவனை இழந்து போகின்றவன் அதைக் காப்பாற்றுவான் (மத்தியு 10-39) மனுசன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் சீவனை

நஷ்டப்படுத்தினால் அவனுக்கு ஆதாயலாபம் என்ன? மனுசன் சீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்(மத்தியு 16-26) என்னிமித்தம் உறவினரை செல்வங்களைத் துறந்தவர்களை் நூறத்தனையாய் அடைந்து நித்திய சீவனையும் சுதந்திரத்துக்கொள்வான் (மத்தியு19- 29) இதற்கு எடுத்துக்காட்டாக ஆபிரகாம் கர்த்தரின் கட்டளைப்படி தன்மகனை பலிபீடத்தில் கிடத்திவிட்டு வெட்டக்கத்தியை எடுத்தான் அப்பொழுது கர்த்தருடை தூதர் வானத்திலிருந்து ஆபிரகாமே உன்பிள்ளையைக் கொல்லாதே என்று தடுத்து நிறுத்தினார் நீ பிள்ளையை ஒப்புக் கொடுத்ததனால் தேவனுக்குப் பயப்படுகிறவன் என அறிந்துள்ளேன். (ஆதியாகமம் 22- 9 -12) இவ்வாறு பிதாவிடம் அன்புடையோரையும் சரணாகதியடைந்தோரையும் கர்த்தர் நித்திய சீவநிலைக்காளாக்குகிறார் என விவிலியவேதம் கூறுகின்றது

மனிதனுக்கு தெய்வீக அன்பு மிகவும் அவசியமானது என்பதனை தமிழ் நாட்டில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் வடநாட்டுப்பக்தர்களும் வாழ்ந்துகாட்டியுள்ளனர். இறைக்காக தனது கண்களை கண்ணப்பரும் தம்பிள்ளைகளை சிறுத்தொண்டநாயநாரும் அப்பூதிஅடிகளாரும் துச்சமாகக் கொண்டனர். இவ்வாறு தெய்வீக அன்பானது முழுமையான தியாக உணர்வுகளைக் கொண்டதாகும். இவ்விதம் உலகியல் பந்தபாசங்களைத் துறப்பது ஆன்மீக ஈடேற்றத்துக்கு அவசியமாகிறது.

### ஆன்ம ஈடேற்ற சாதனைகள்

இதுவரை நாம் ஆராய்ந்து காட்டியதிலிருந்து விவிலிய வேதத்துவங்குளும் சைவசித்தாந்த கோட்யாடுகளினின்றும் வேறுபட்டதல்ல என்பதனை நாம் அவதானிக்கமுடிகின்றது. இனி இறைவனை ( நித்திய சிவனை அல்லது பிதாவை) அடையக்கூடிய வழிபாட்டுச்சாதனைகளில் விவிலியவேதம் பக்தியுடன் கூடிய வழிபாட்டையே வலியுறுத்துகின்றமையை நாம் காணமுடிகின்றது. நீ ஜெபம் பண்ணும் போது உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து கதவைப் பூட்டிவிட்டு அந்தரங்கத்திலிருக்கின்ற பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கின்ற உன்பிதா வெளியரங்கமாய் உனக்கு பலனளிப்பார்(மத்தியு 6-6) உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால் கர்த்தராகிய நான் சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். (எண்ணாகமம் 12-6) தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படி விருப்பத்தையும் செய்கைகளையும் உங்களில் உண்டாக்குகிற வராயிருக்கின்றார் (பிலிபிபையர் 2-13) இத்தகைய பக்திவழிபாடு தவிர்ந்த கிரியை சரியை யோக ஞான வழிபாட்டு நிலைகளை கிறித்தவபக்தர்கள் மேற்கொள்ளுவதற்கான வழிமுறைகள் எதுவும் விவிலிய வேதத்தில் எடுத்துக் கூறப்படவில்லை. அதனால் சாதகர்கள் பிதாவிடம் உலகியல் வாழ்வு நிறைவுகளுக்காகவே மன்றாடி வருகின்றனர். மாறாக வேதாந்த சித்தாந்தங்கள் சாதகனின் தாரதம்மியப்படி நால்வகை வழிபாட்டு முறைகளை வகுத்திருப்பினும் தன்னுள் உறையும் பரம்பொருளை யோக ஞான நெறிகள்மூலம் கண்டு கொள்வதன் மூலம் காண்பதெல்லாம் அவனே என்று ஆண்டவனை எங்கும் தரிசிக்கலாம் என வலியுறுத்தியுள்ளன. இராமகிருஷ்ண பரமஹம்சர் தாந்ததிரகம் இஸ்லாமிய வழிகளில் மேற்கொண்ட தியானத்திலும் உள்மனம் வெவ்வேறு வடிவங்களைக் கவர்ந்திருந்தாலும் தெய்வீகம் ஒன்றே என்ற ஒருண்மையை கண்டு தெளிந்திருந்தார். விவேகானந்தரும் 1893ல் சிக்காக்கோவில் நடைபெற்ற உலகச்சமயப் பாராளுமன்றச் சபையோருக்கு இந்த உண்மையையே வலியுறுத்தியிருந்தார் இதன் விளைவாகவே மேலைத்தேய கிறிஸ்தவர்கள் இறைவனைத் தன்னுள்ளே தரிசிக்கலாம் என்ற உண்மையை உணர்ந்து ஆன்மீக சாதனைகளில் யோகநெறிகளையும் மேற்கொள்ளலாயினர். இச்சாதனை மூலம் உண்மையுணர்ந்த கிறிஸ்தோபர் ஈவூட் விவிலிய வேதம் கூறிய அதே உண்மையைத்தான் வேதாந்தப் பயிற்சி வாயிலாகக்கண்டு நீ ஆத்மம் உன்னுள்ளேயே அது உறைந்திருக்கின்றது அதனைக் காணக் கடுமையான முயற்சிசெய் என்று கூறலானார். இன்னும் தன்னைத்தான் அறியும் அறிவு கிரியாயோகப் பயிற்சி நிலையங்கள் பல அமெரிக்கா கனடா ஐரோப்பிய நாடுகளில் உருவாக்கிக் கிறித்தவர்களை நித்திய சீவனைத் தம்முள்ளே கண்டின்புற பணியாற்றி வருகின்றன. வேறு சிலர் ஆன்மீகச்செல்வம் நிறைந்து காணப்படும் இமயமலைச் சாரல்களுக்கும் (ஹிமாலயா) பகவான்சத்திய சாயிபாபாவின் தியானப்பயிற்சி நிலையங்களுக்கும் சென்றுகொண்டிருக்கிறார்கள். இவ்வான் மீகப்பயிற்சிகள் தத்தம் மதங்களிலிருந்து கொண்டே மேற்கொள்ளத்தக்கன. ஆகையினால் இறைவனைக் காண்பதற்கென்று எவருமே மதம் மாறவேண்டிய அவசியமில்லை என்ற உண்மையை பகவான் சாயிபாபா இவர்களுக்கு எடுத்துரைக்கின்றார்.

### இறை வளிபாட்டில் விக்கிரவழிபாடுகளின் நிலை

விவிலியவேதம் விக்கிரக வழிபாட்டின் தொடக்க நிலையை பின்வருமாறு விபரிக்கின்றது யாக்கோப்பு தந்தை கட்டளைப்படி ஆரனுக்கு பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் இரவுநேரம் வந்ததும் ஒரு இடத்தில் தங்கி அவ்விடத்திலிருந்த ஒரு கல்லைத் தலையின்

கீழ்வைத்து உறங்கியபொழுது கனவில் கர்த்தர் கூறியவார்த்தைகளைக் கேட்டு விழித்தெழுந்து நினைவு கூர்ந்து அந்த இடம் கர்த்தரின் வாசஸ்தலம் என்று கருதித் தலையில் வைத்திருந்த கல்லைத் தூணாக நிறுத்தி அந்த இடத்திற்கு பெத்தேல் எனப்பெயரிட்டு எண்ணெய் அபிசேகம் புரிந்து வழிபட்டான். (ஆதியாகமம் 28-17 - 28 22 35- 14 ) இது சின்ன(குறியீடு) வழிபாடு கனவில் காட்சிகொடுத்த இறைவனிடம் கொண்ட அன்பின் சின்னமாயிற்று. ஆனால் கர்த்தரால் மகிழ்ந்து இஸ்ரவேல் எனப் பெயரிடப்பட்ட இவன் வம்சத்தில் வந்த சொலமான்ராசா கர்த்தரின் வேண்டுகோளை மீறி அந்நிய தேவர்களுக்கு விக்கிரகங்களை உண்டு பண்ணினான். பின் இவன் மகனும் சிலைகளையும் தோப்பு விக்கிரகங்களையும் உண்டாக்கி தேவனாகிய கர்த்தருக்கு விசுவாசமாக இருக்கவில்லை. இத்தகைய பின்னணியில்தான் விவிலிய வேதம் விக்கிரக வழிபாட்டைக் கண்டிக்கின்றது. இது நியாயமானதே .

ஆனால் காலப்போக்கில் கிறிஸ்தவ மதத்தினைப் பல்சாதியினரும் விசுவாசிக்கையில் கண்களால் காணமுடியாத தேவனின் மகன் மானுடவடிவில் அவததரித்திருந்தார் என்பதனை விசுவாசிக்கும் மக்களுக்கு இயேசு நாதர் கன்னிமரியாள் சிலுவை அந்தேனியார் திருவுருவங்களைச் சான்றுகளாகக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. இது பின் கிறித்தவமதத்திலும் பாமரர்களின் உள்ளங்களை ஈர்க்கும் உருவ வழிபாடுகளாக உருவெடுக்கலாயின. யூதர்கள் பிதாவின் குமாரனாகிய இயேசுநாதர் செய்த மகிமைகளை நேரில் கண்டும் நம்பிக்கையற்று அவரைச்சிலுவையில் அறைந்தார்கள். அப்படியிருக்க காலத்தால் மறைந்துபோன இறையின் அவதார நிகழ்ச்சிகளைச் சிற்பவடிவங்களிலும் சித்திரங்களிலும் பேணி மக்களுக்குக் காட்டவேண்டிய தென்பது தவிர்க்கமுடியாதிருந்தது.

இவ்விதமல்லாது வேதாந்த சித்தாந்தக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டவர்கள் மக்களின் அறிவின் தாரதம்மியத்தின்படி வழிபாடுகளை உருவ வழிபாடு அருவுருவ வழிபாடு அருவ வழிபாடு என நெறிப்ப டுத்தியிருந்தனர் இந்த மூன்றிலும் உருவவழிபாட டினையே பாமர மக்கள் விரும்பி மேற்கொள்ளுகின்றனர். இன்னும் உருவ வழிபாட்டினை விரும்பும் மக்களின் உள்ள ஈர்ப்புக்களை இழுக்கும் வகையிலே செம்பு கருங்கல் முதலானவற்றில் தெய்வ விக்கிரகங்கள் வார்க்கப்படுகின்றன. செம்பு மின்னிழுப்பைக் கொள்ளும் தன்மையுடையதனால் மின் இழுப்புச்சக்தியுடைய மனித னின் உள்ளங்களையும் ஈர்த்து இறைமூர்த்தங்களில் ஆன்மாவை லயப்படுத்துகின்றது இவ்விதமே பஞ்சபூதங்களுள் ஐந்து குணங்களையும் (சுவை மணம் ஒளி ஓசை ஊறு) தன்னுள் கொண்ட கருங்கல்லில் வார்க்கப்படுகின்ற தெய்வமூர்த்தங்களுக்குச் செய்யப்படு கின்ற தீபாராதனைகள் அபிஸேகங்கள் மந்திரஒலிகள் என்பன விகிகிரகத்தில் பட்டு எதிரொலிக்கின்றன. இவ்விக்கிரகங்களின் கீழ்பொருத்தப்பட்டுள்ள இயந்திரத் தகடு சேமிப்புக்கலமாகவும் காற்று மண்டலம் அந்தச்சக்தியை பெற்றுக் கடத்துகையில் எதிரிலுள்ள பக்தர்களின்மேல் அவை விழும்பொழுது பக்தர்கள் தம்மை மறந்து இறை சிந்தையுடையவராகி இறையுடன் இணைந்து கொள்கின்றனர். அப்பொழுது விக்கிரகங்கள் விக்கிரகங்களாக அங்கு இருப்பதில்லை. அவை உயிர்ப்புள்ள தெய்வமாகவே எழுந்தருளி பக்தர்களின் உள்ளங்களில் நிறைந்து கொள்கின்றன. இவ்விதம் இராமகிருஷ்ணருக்குக் காளி காட்சி கொடுத்து மகிழ்வித்திருக்கிறாள். அருவுருவத் திருமேனியான லிங்கோத் பவரை வழிபட்ட கண்ணப்பநாயனாரும் சண்டேசுவரரும் இறைதரிசனத்தைப் பெற்றவர்களே. அருவவழிபாட்டினரான யோகியரும் ஞானியரும் மனிதருக்குள் உறங்கும் தெய்வீகத்தைக் கண்டு இன்புறுகின்றனர். எனவே விக்கிரக வழிபாடும் இறை தரிசனத்தைக் காண ஒரு சாதனம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்

எல்லா சீவராசிகளுள்ளும் ஒரே உயிர்தான் துடித்துக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையே எல்லாமதங்களும் கோட்பாடுகளும் உணர்த்தியுள்ளன என்பதனை உலகம் இன்று உணர்ந்து கொண்டுள்ளது. ஆகையால் அவரவர் தத்தம் மதங்களில் இருந்துகொண்டே தன்னுள் உறையும் இறைவனைத் தரிசிக்க முயல்வாராக.

**திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம்**

## ஒரு வேண்டுகோள்

அடுத்த கலசம் 15 ஆம் திகதி யூலை மாதம் வெளிவரவுள்ளது. இதற்கான கட்டுரைகளை யூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அன்போடு வேண்டுகின்றேன்.

# GNANAM
## T E L E C O M




தொலைபேசி இணைப்புக்கள்
மலிவு விலையில் வேண்டுமா?

**நிறைவான சேவை!**
**விரைவான சேவை!**
**தெளிவான சேவை!**

இவற்றுக்காக எங்கும் நீங்கள்
போகவேண்டாம்.
உடனே அணுகுங்கள் ஞானம்
தொலைபேசி நிறுவனத்தை.

**இத்தனைக்கும் நீங்கள்**
**அணுகவேண்டிய முகவரி**

*Gnanam*
**telecom centers**

**180 High Street North**
**East ham London**
**Tel: (+0044) 0181 47 08 84 4**
**Fax: (+0044) 0181 47 08 77 7**

| | |
|---|---|
| Australia | 5p |
| Canada | 5p |
| France | 5p |
| Germany | 5p |
| India | 25p |
| Italy | 7p |
| Malaysia | 14p |
| Pakistan | 29p |
| Singapore | 15p |
| Sri lanka | 27p |
| U.K | 3p |
| U.K mobile | 11p |

# வாணி நீ அருள்க வாழ்வு

தென்மேற்குத் திசையிலே
மண்பார்த்து அமர்ந்தவளே!
விண் மறைக்கும் முகில் தன்னை
வேய் குழலாய்க் கொண்டவளே!
கண்ணனவன் தன்னையும்
அண்ணலாய்க் கொண்டவளே!
புன்னகைக்கும் இதழோடு - அருள்
புரிகின்ற மகமாயி-தமிழ்
மண்ணிலே மாந்தரெல்லாம்
மகிழ்வோடு வாழ்வதற்கு
உன்னருள் வேண்டி நிற்க
அன்னை கலைவாணியும்
தன்னருள் பொழிய வேண்டும்
கல்விக்கரசியே ! கலையுலகம் போற்றி வாழும்
கலைவாணியே!
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும்
வேதவல்லியே!
ஊமையும் வாய்திறந்து பாட
உயிர் கொடுத்த உத்தமியே!
தூய்மையாய் உள்ளத்துடன்
துதிப்பவர் நாவினிலே! தூண்டாத
அகல்விளக்காய்!
சுடர்கின்ற தூயவளே!
உன்னருள் வேண்டி நின்றேன்.

பாவலர் நாவில் படர்பவள் நீயே!
பால்மனம் மாறாக் குழந்தையின் வாய் மொழி
நீயே!
கற்றவர் உள்ளத்துக் கனிமொழி நீயே!
பற்று அற்றவர் நெஞ்சத்து மந்திரம் நீயே!
நித்திலம் முழுவதும் நின்னருள் வேண்டி
கைத்தலம் கூப்பித் தொழுதேன் தாயே!
சித்தம் சிறக்க அருள் தருவாயம்மா!
ஊனின்றி உறக்கம் இன்றி
மானந்தனைக் காக்க மாற்றுத் துணியுமின்றி
வானூர்தி போட்ட குண்டால் வாழ்விடமுமின்றி
வாய்க்கால் வயல்களொடு வாழவைத்த
ஊருமின்றி
தேசத்தின் விடியலுக்காய் தேடி வைத்த
பொருளுமின்றி
தாய் நாட்டில் அகதிகளாய் தவிக்கின்ற
மக்களுக்கு
தாயே கலைவாணி தந்திடுவாய் நல் வாழ்வு.
தென்றலும் என் தேசத்தில் சுடுங்காற்றாய் வீச
பந்தலிலே படர்ந்த கொடியெல்லாம் பாதியிலே
கருக
மணம் வீசும் மலர்களை மாற்றான்
சிதைத்தொழிக்க
நாற்றுக்களைப் பிடுங்கி கொடியவர் நாசமாக்க
பார்த்திருக்க மனம் வருமா பார்வதி யம்மா
காத்திடுவாய் தாயே காலமெலாம் எமை நீயே!
பாசத்தைப் பகையாக்கி நேசத்தை நெருப்பாக்கி
அன்பினையும் அடிமையாக்கி பண்பினையும்
பாவமாக்கி
பாதகர்கள் செய்துன்பம் பாரினுக்கே
அடுக்காதம்மா
நெஞ்சம் படுந் துயரை நேரினிலே வந்து தாயே
கெஞ்சுகின்றேன் தீர்த்திடுவாய் அம்மா!
கொள்ளை அழகுடனே குவிந்திருக்கும்
பூவினமும்
அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம்
போல்
பல்வகை நூல்களையும் பாங்குடனே பெற்றிருந்த
நல்வழித் தென்றலுக்காய் நாயகியே நீயளித்த
யாழ்நிலைய நூல்நிலையம் பாவிகளின் தீயினிலே
பாழாகிப் போனதம்மா பாமாலைக்கதிபதியே!
பார்புகழும் வேதவல்லி காத்திடுவாய்
எம்மினத்தை.

வேலணையூர் சிவா

# நந்திக்கொடியின் தத்துவ உண்மை சிந்தனை விருந்து

நந்திக் கொடியின் தத்துவம் பின்வரும் பகுதிகளில் எம்மைச் சிந்திக்கவைத்து அதன் முக்கியத்துவத்தை எமக்கு உணர்த்துகின்றது.

1 பொது

2 சிவன்

3 சிவனே-நந்தி

4 நந்திஅருவ நிலையில் -மாற்ற நிலைஉருவஅமைப்பில் இடபம் எருது

5 அருவ நிலையில் அசைவு -உருவ நிலையில் வாகனம் அது எருது -இடபம்

6 ஆலயம் விளக்கும் நந்தி

## பொது

ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் ஏன் பாடசாலைகளும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் தங்கள் கொடிகளை ஏற்றி சமூகத்தில் தங்கள் விழாக்களை கொண்டாடி மகிழ்கின்றார்கள். இந்து ஆலயங்களில் இந்து சமய கொடியாக ஒரு உற்சவ நிகழ்ச்சியை குறித்து ஒரு கொடி உலகில் எந்தப் பகுதியிலும் ஏற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் அதன் தலைவரின் அசையா இறை சேவையும் அங்கத்தவரினது ஊக்கமும் நந்திக்கொடியை சகல ஆலயங்களிலும் உற்சவங்களில் ஏற்ற முயற்சிப்பது இறைசேவையே. இந்து மாமன்றமும் இதற்கு பெரு ஆதரவை கொடுத்து வருகிறது. ஆலய நிர்வாகிகளும் சபையினரும் நந்திக்கொடியை ஆலய நிகழ்ச்சிகளில் தவறாமல் ஏற்றி எமது சமயதத்துவங்களை நிகழ்ச்சி விளக்கங்களாக அறியச் செய்வார்கள் என்பது அடியேனின் தெளிவான இறைநோக்கம்.

## சிவன்

நாம் நினைப்பது எல்லாம் நடப்பதில்லை. வாழ்க்கையில் திருப்தி இன்மையே கூடுதலாகத் தெரிகின்றது. எல்லோருக்கும் ஒரு திருப்தி இன்மை இருந்தே வருகின்றது. பொருள் வசதியை மிகவும் திறமையாகக் கொடுக்கும் விஞ்ஞானம் வாழ்வில் நிரந்தர நிம்மதியைக் கொடுத்ததாகத் தெரியவில்லை. தன்னால் முடியாத நிலையை சகலருக்கும் மேலான சக்தி ஒன்றினை உணர்கிறார்கள். முயற்சிகள் வெற்றி ஈட்டும். சில வேளைகளில் அதுவும் சறுக்கிறதே அது ஏன்? எல்லோரும் இறுதியில் இறக்கிறார்களே தாங்கள் அடைந்ததை எல்லாம் விட்டு செல்கிறார்களே. அது ஏன்? சிந்தியுங்கள்.

இந்த சிந்தனையின் விருந்தாக எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாவற்றையும் தாங்கி ஊடுருவி எங்கும் பரிபூரண ஆனந்தமாக நிற்கும் அந்த சக்தியை நாம் உணர்வோம். இந்தப் புலனறிவுக்கு எட்டாத மெல்லிய நுண் அலைகளை இவ் உலகில் விளக்கவும் முடியாது-விளங்கவும் முடியாது. பெயரற்ற உருவமற்ற தன்னிகரற்ற விபரிக்க முடியாத அதனால் ஒன்றென்ற நிலையான அருவ தத்துவ பொருளுக்கு ஞானிகள் சிவன் என நாமம் சூட்டி மக்களை வழிபடச்செய்தார்கள். சில-சக்தி நிலையில் இவ்வுலக அமைப்பில் இந்த அஞ்ஞானம் தன்னை அறிவிக்கும் நல்லறிவை மெஞ்ஞானமாக மிளிர்கின்ற மெச்சுடராக சிந்தனையை வளர்த்து ஆத்மீக அறிவில் உணர்கின்றோம். இப்பிரபஞ்சம் முழுவதையும் ஊடுருவி எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் கடந்து நிற்பதால் கடவுள் ஆக சிவன் அழைக்கப்படுகிறார். இந்த சிவ பிரபஞ்ச அலைகள் நீக்கமற நிறைந்த பரிபூரண ஆனந்தமாக நிகரற்று சொரூப நிற்குண பிரம்மமாக அருவமாக மிளிர்ந்து தன்னை தடத்த நிலை சகுண பிரம்மம் ஆக்கி ஆக்கங்களை ஏற்படுத்தி அவற்றை மாற்றமுள்ளதாக்கி தான் மாற்றம் அற்று எல்லை அற்று சுற்றளவு அற்று எங்கும் மத்தியாக ஆளுகின்றார். அதனால் ஆண்டவன் ஆகின்றார்.

## சிவனே நந்தி.

இந்தச் சொரூப அருவ நிர்மல சிவ பிரம்ம பெயர் ஊர் அற்ற நிர்மல நிலைக்கு ஞானிகள் பல பெயர் கொடுத்து அதன் தடத்த சகுண பிரபஞ்ஞ ஆக்க நிலையை வாழ்த்தினார்கள். அர்ச்சித்தார்கள். மக்களை வாழ்த்தச்செய்து போற்றச் செய்து அவரவர் ஆத்மீக நிலையை வளர்த்தார்கள். இந்த தடத்த சகுண மாற்றமுள்ள நிலையே நந்தி. இவற்றிற்கு ஆதாரமாகி அந்த நிற்குண சொரூப சிவன் நிற்பதால் சிவனே நந்தி. இந்த மாற்றமுள்ள நந்தி நிலையில் சுழலும் எமக்கு எல்லாம் வல்லவராக எல்லாம் அறிபவராக எங்கும் நிறைந்தவராக எம்முள்ளே ஜோதியாக எம்மை வினைப்பயனில் அமிழ்த்தி காத்து மீட்டு எமது உண்மை நிலையை பல பிறவிகளில் முன்னேற்றி அடையச் செய்கின்றார். அசைவு நிலையில்(மாற்ற நிலை) புலன் அறிவை ஏற்படுத்தி அதை குறைத்து நீக்கி அருள் பாலிக்கிறார். இந்த சுழலும் அசைவு சிவனே அது நந்தி. இவ்வுலகில் சகலதும் மாறுகின்றது. நாமும் மாறுகிறோம். இந்த அசைவை மாற்றத்தை நீக்க உலகில் எந்த மருந்தும் இல்லை. விஞ்ஞான கண்டுபிடிப்புக்களும் இல்லை.

இப்படியான அசைவு நிலையை நந்தி என்று ஏன்? ஞானிகள் அழைத்தார்கள்?. சிந்திப்போம்! விளங்குவோம்!

உணர்வோம். இறைஇன்பத்தை பெறுவோம். நிம்மதி அசைவு நிலையில் இல்லை. இந்த நிலையை நந்தியை ஒரு நடவடிக்கையாக நோக்கி அதன் நிகழ்ச்சிகள் எல்லாம் நிர்க்குண நிர்மல அத்வைத உயிருக்கு உயிரான சிவனே என உணர்வோம். நந்தி சிவனின் வாகனம். வாகனம் அசையும் பொருள் ஆகவே பிரபஞ்ச அசைவை வாகனமாகிய நந்தி இவ் உலகில் குறிக்கின்றது.

நந்தி அருவ நிலையில் மாற்றமுள்ள நிலை உருவ அமைப்பில் இடம் எருது.
நந்தி என்பது ஒரு இடபமாக எருதாக ஞானிகள் உணர்ந்த மன நிலையை உலகிற்கு உணர்த்தினார்கள் , அது சிவனுக்கு வாகனம் அசைவை மாற்றத்தை சுழலும் நிலையை குறிக்கின்றது. ஞானிகளின் இடபரூபரான இந்த அமைப்பு சிவனின் அசைவு நிலையை மாயை நிரந்தரம் போல் தோன்றி நிரந்தரமற்று நிற்கும் நிலையை உருவத்தின் மூலம் உலகிற்கு எடுத்துக்காட்டுகிறது. பிரதோஷ விரதத்தின் போது இந்த நந்தியினை விளங்கி வழிபடவேண்டும். இந்த சிவ சக்தி இடபம்(நந்தி) அமைப்பும் மற்ற ஆலய விக்கிரகங்களும் மேலான ஞான நிலையின் திட்டங்களும் அமைப்புக்களுமே தவிர வேறு ஒன்றில்லை. இந்த முறை ஞான திட்ட அமைப்பு சிந்தனை தான் ரவிவர்மா ஓவியமும்- விஸ்வகர்மாவின் சிற்பங்களும். இந்த ஞானிகள் ஏன் எருதை உருவ அமைப்பிற்கு தேர்ந்தெடுத்தார்கள்? சிந்திப்போம்!உணர்வோம்! விளக்கமற்று எந்த ஆலயவிக்கிரக அமைப்பும் இல்லை என்பதை அறிவோம். தானியங்களை உற்பத்தி செய்ய எருது வயலில் உழுது பாடுபடுகின்றது.
தானியங்களை மனிதரும் ஜீவராசிகளும் உண்ண கழித்துவிட்ட வைக்கோலை எருது சாப்பிடுகிறது. எருதின் சாணம் வயலுக்கு பசளை ஆகின்றது. சகல தொழில்களிலும் பாடுபட்டு உதவி தான் கழிவுப் பொருளான புண்ணாக்கையும் கழனியையும் உண்டு சீவிக்கின்றது.

இந்த இடம் ஆசை அற்று எதையும் கழிவென ஒதுக்காமல் நல்லதை மற்றவர்கள் சாப்பிட அர்ப்பணித்து மற்றவர்கள் கழித்து விட்டதை உண்டு பாடுபடுவதால்
உலக உருவ நிலையில் வாகனமாக அந்த அருவ சிவ சக்தி அர்த்தநாரீஸ்வர நிர்மல நிலையை விளங்க முடியாத புலனறிவில் செயல்படும் மக்களுக்கு உலகில் அருவ அருஉருவ அசைவு நிலையை இடபாரூபராக ஞானிகள் உருவ அமைப்பில் அமைத்து சிந்திக்கச் செய்தார்கள். தொழ வைத்தார்கள். மனதில் பதியக்கூடியது உருவங்கள் மட்டுமே. உருவமற்ற அசைவு நந்தி உருவங்களினால் மட்டுமே விளங்கி அருவுருவ அருவ மாபெரும் நினவாத-யிானித்து ஒருமனதுடன் மற்ற நினைவுகள் எதுவுமே இல்லாமல் தியானத்தை அனுபவிக்க முடியுமென வாழ்ந்து நந்தி அசைவு அமைப்பை எடுத்து காட்டினார்கள். மனதில் ஒரு உருவத்தையே இலகுவில் கற்பனை செய்யமுடியும்.

## ஆலயம் விளக்கும் நந்தி

இது உடலில் காரண சரீரத்தையும் (causal body) பிரபஞ்ச அமைப்பு (Casual region)) காரணபகுதியையும் எடுத்துகாட்டுகிறது. காரணம் அற்று இவ் உலகில் எந்த விளைவும் அமைப்புக்களும் இல்லை. இந்த காரணம் அசைவு நந்தி நிலையை ஞானத்தால் அறிந்த ஞானிகள் விளைவுகளின் அகோரத்தை அபாயத்தை உலகிற்கு எடுத்துக் கூறி வாழ்ந்து காட்டினார்கள். அவர்கள் வாழ்வு அசைவு நிலையில் எப்படி பிறவிகளைத் தவிர்க்கலாம் அந்த நந்தியிடம் எப்படி அனுமதி பெறலாம் என்பதைக் காட்டுகின்றது. ஆலயத்தில் கொடிமரம் பலிபீடம் பின் நந்தி அமைப்புகள் இருக்கின்றன. கொடிமரத்தை படைப்பின் காரணத்தை விளக்கி பலிபீடத்தில் ஆசைகளை பலி-வைத்து மூலஸ்தானத்தை நோக்கி செல்கின்ற பக்தர்களின் ஆத்மீக முன்னேற்றத்தை நந்தி தடுத்துக் கணிக்கின்றார். எமது காரணசரீரம் ஒருமையுடன் சிவன் திருவடியை நீக்கமற பதித்தவர்களைத் தவிர ஞானிகளைத் தவிர மற்றவர்களை தடுக்கும் பிறவி அசைவு நந்தி சுழல வைக்கும். ஆலயம் மூலமூர்த்தியை ஆத்மீக முன்னேற்றம் உள்ளவர்களே தரிசிக்கமுடியும் என்பதை காட்டுகின்றது. கைலாயகிரியில் சிவனை உண்மைப்பொருளை தரிசிக்க நந்திதேவர் பிரம்புடன் கண்காணிக்கிறார் என்பதன் அர்த்தமும் இதுவே. பிரபஞ்ச அமைப்பில் பௌதீக பகுதி கற்பனைப்பகுதி காரணப்பகுதி என்ற அமைப்பில் ஆசையில் உழலும் எம்மை மேல் பகுதியான இறை அமைப்புக்கு சிவ சக்தி அமைப்பிற்கு விடாமல் நந்தி தேவர் ஆசையை அவரவர் வினைப்பயனை தீர்ப்பதற்காக சுழலவைத்து பிறவிகளில் அமிழ்த்திவிடுவார். ஆகவே நந்தி நிலையான பிரபஞ்சகாரண பகுதியை ஆசைகளை பலபிறவிகளில் தீர்த்தே நிர்விகற்ப சமாதி நிலையில் நாயன்மார்காட்டிய சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நாற்பாத நிலையில் அடைய முடியும் என்பதே முடிந்த முடிபாகும்.

## வாழ்த்து

ஆன்மாவின் ஈடேற்றத்திற்காக சிவன் அமைந்த நிலையே நந்தி என்பதையும் ஞானிகள் ஏன் இடபத்தை நந்தியை சிவனின் வாகனமாக அமைத்து மக்களுக்கு சிவனின் தடத்தநிலையை விளக்கினார்கள் என்பதையும் அறிந்தோம்.

இதைமக்கள் சிந்தித்து மனதில் பதித்து ஆன்மீக ஈடேற்றம் பெற ஆலயங்கள் இந்து விழாககள் தோறும் ஏற்றி உலகெங்கும் இந்து மதம் கூறும் உண்மைப்பொருளின் விளக்கத்தை எடுத்துக்காட்டுவோம். உலக ஆன்ம ஈடேற்றத்தின் முக்கியத்தை நந்திக்கொடியை ஏற்றி மதிப்போம். மாற்றமுள்ள நிலை மனதில் எமது முழிப்பு நிலையில் பதியக்கூடாது. உணர்ச்சி நிலையைத் தவிர்க்கவேண்டும் என்பதை உணர்த்துவோம். எம் நிலையை பிறவியற்ற நிலையான மாற்றமற்ற சொரூப உண்மை நிலைக்கு உயர்த்தும் அனுபவமூலம் எமது நந்திக்கொடியை ஏற்றி ஆலயங்களில் விழாக்களை கொண்டாடவும் கோபுர உச்சியில் இது நிலைபெற்று நிற்கவும் ஒவ்வொருவரின் ஆர்வமும் முக்கியமாக ஆலய நிர்வாகஸ்தர்களினதும் சபையினரதும் ஆர்வமும் இறை அன்பும் பெரிதும் உதவும் என்பது திண்ணம்.

இந்த விழிப்புணர்வை மக்கள் முழிப்பு நிலையில் ஏற்படுத்தும் என்பது சிவ நந்தியின் மகிமையே. இது உண்மை. நந்தி எம்பெருமானின் திருவருள் எல்லாவற்றையும் நிறைந்து நிற்கின்றது. வாழ்க நந்தி எம்பெருமான் வாழ்க அந்த அருளை உணர்த்தும் நந்திக்கொடி உலகெங்கும் இந்த இந்து தத்துவக்கொடி ஏற்றி இறை நினைவை வளர்ப்போம்.

வாழ்க --வாழ்க ----வாழ்க

**சி. இரட்ணராஜா**


வெளிவந்துவிட்டது

**THE CINEMA MELODIES**
**PANCH MUSIC**
**திரை மெட்டுக்கள்**

தமிழ்த்திரைப் பாடல்களை
கீபோட்டில்
சர்வதேச இசைக் குறியீடுகளில்
தெளிவாக அமைத்துள்ளார்.
வாங்கிப் பழகுங்கள்
இசைப்பிரியர்களே


**சிந்து 4**
**எழுதியவர்**
S. K. PANCH
TEL: 07 939 944 205



East Ham இல் தமிழர்களின் மாபெரும் புடைவைக் களஞ்சியம்

*Rani Fashions*

Specialist in Wedding Sarees, Suits, Children Wears



எங்களிடம் திருமணத்திற்கான
சிறந்த கூறைச் சேலைகள்
காஞ்சிபுரம், அபூர்வா, றங்கோலி, கோலம்
மற்றும் Cotton
Polyester சாறிகள், பிளவுஸ் துணிகள், சுடிதார், குழந்தைகளுக்கான ஆடைகள்
மற்றும் Imitation Jewelleries Ect.
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

**302 High Street - North, Manor Park, London E12 6SA**
**Tel/ Fax: 0181 472 9970 Mobile: 0958 504 118**

KUMARANS

# குமரன்ஸ்

## IMPORT AND EXPORT

உங்களுக்குஅன்றாடம்
தேவையான லீலா தயாரிப்புகளை
மொத்த விற்பனை விலைக்கு
தொகையாக வாங்கி உங்கள்
பணத்தைச் சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

# நான்கண்ட அருணகிரியார்

### வரதா சண்முகநாதன்

ஏறத்தாழ அறுநூற்றாண்டுகளுக்கு முன்பாகத் தமிழகத்தில் தோன்றி முருகனை முதன்மைப்படுத்தி அன்பையும் அவிரோதத்தையும் உயிர்நாடியாக வைத்து பாடிப் பணிந்தார் அருணகிரியார். அவர் அருளிய திருப்புகள் பாக்கள் சந்தச் சிறப்பும் பொருள் நயமும் மிக்கவை. திருப்புகழ் பாடல்கள் 425. அவை திருப்பரங்குன்றம் திருச்செந்தூர் பழநி சுவாமிமலை திருத்தணிகை கதிர்காமம் திருக்காளத்தி சிதம்பரம் பழமுதிர்ச்சோலை ஆகிய திருத்தலங்கள் பற்றியும் இன்னும் பலவேறு தலங்கள் பற்றியும் எழுந்தவை. சிவனார் மகிழ்குமரன் படைக்கப்பங்கயன் துடைக்கச் சங்கரன் புரக்கக் கஞ்சைமன் பணியாகப் பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம் பரத்தை கொண்டிடும் தனி வேலவனாகின்றான். பிரமன், சங்கரன், மால் ஆகிய மூவரும் பணியும் பரம்பொருள்.

இப்பரம் பொருளின் மகிமையை விளக்க எழுந்த பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட விளங்கும் பாக்களே திருப்புகழ் எனப்படுபவை. அவை ஒவ்வொன்றும் முருகனைப் பணியும் தோறும் அம் முருகன் மரண பயத்தை அறுப்பான். பவவினையை அழிப்பான் உயர் கருணையையும் இறையை எமதுள்ளத்தே அறியும் அன்பினையும் தருவான் என இவ்வுலகத்தில் வாழும் அனைவருக்கும் அறிவுறுத் துவதாய் அமைந்துள்ளது.

**கணத்தில் என்பய மறமயில் முதுகினில் வருவாயே**
**பவமின்றுகழிந்திட வந்தருள் புரிவாயே**
**சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்**
**தென்செய வழிந்தமிழ் தழியமெய்ச்**
**சிந்தைவர என்று நின் தெரிசனைப் படுவேனோ**
**உயர்கருணை புரியுமின்பக் கடல் மூழ்கி**
**உனையெனதுள் அறியுமன்பைத் தருவாயே**

என அறு முருகனை வாழ்த்தி வணங்கி வேண்டுகின்றார் அருணகிரியார்.

திருப்புகழ் பாடல்கள் மூலம் முருகனைத் தன் அகத்தில் வந்தமரும்படி வேண்டுவதோடமையாது தனது அகந்தையை அறவே அறுத்துத் தன்னை யாரென அறிந்து கொள்ளும் கடமையையும் முதன்மையாகக் கொண்டார். அருணகிரியார் தன்னைப்பற்றி கூறும் போது

**உனைத் தினந்தொழு திவனுனதியல்பினை**
**உரைத்திலன் பல மலர் கொடுன் அடியிணை**
**உறப் பணிந்திலன் ஒ்ரு தவமிலன்..........**
**உளத்துளன்பினர் உறைவிடம் அறிகிலன்**
**விருப்பொடுன் சிகரமும் வலம் வருகிலன்**
**உவப் பொடுன் புகழ் துதிசெயவிழைகிலன்**
**பலதுன்பம் உழன்று கலங்கிய**
**சிறியன் புவையன் கொலையன்**
**அவமாயை கொண்டுலகில் விருதா**
**வலைந்துழலு மடியேன்**

எனப் பலபட விதந்து ரைக்கின்றார். இத்தைகைய எளியேனை உன்னருளால் காத்தருள்வாய் முருகா என மனமுருகி வேண்டுகிறார். முருகனும் அவர் வேண்டுகோளை ஏற்கின்றான். அஞ்சலென்றருள வேண்டும். அருள் ஞான இன்பம் புரிய வேண்டும். அருள தருளி எனையும் மனதொட்டடிமை கொள்ளவும் வரவேண்டும். என்றும் இரங்கிய அருணகிரியாருக்கு முருகனருள் கிடைத்ததென்பதன் சான்றே திருப்புகழ். இறைஞானம் இன்றேல் இத்தகைய அருட்பாக்கள் சலசலத்தோடும் ஆறுபோல் பாய்ந்தோட முடியாது. எட்டு அடிகள் பதினாறு அடிகள் இருபத்து நாலு அடிகள் கொண்ட பாக்களில் ஆளப்படும் சொற்கள் வளமானவை. அவற்றை ஆளும் முறை செறிவும் திறனும் தெற்றென விளங்கும் வகையில் உள்ளது. ஒருசிறு உதாரணம்.

முருகா நீயோ

**தடக்கைப் பங்கயம் கொடைக்குக் கொண்டல் தண்**
**டமிழ்க்குத் தஞ்சமென்றுலகோரைத்**
**தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்**
**தளர்ச்சிப் பம்பரந் தனையூசற்**
**கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்**
**கலத்தைப் பஞ்சஇந் த்ரியவாழ்வைக்**
**கணத்திற் சென்றிடந் திருத்தித் தண்டையங்**
**கழற்குத் தொண்டுகொண்டர்ள்வாயே**

கண்முன்னால் உள்ள அழகிய தாமரை கொடுப்பதிற் கொண்டற் காற்றைப் போன்றவன் (மழைகொடுக்கும் கொண்டல்) நீயே தண்தமிழ்க்குத் தஞ்சம் பம்பரம் போல் தளர்ந்து தளர்ந்து ஊசலாடும் மனதையுடைய துன்பம் நிறைந்த மண்ணாலாகிய

இவ்வுடம்போடு கூடி ஐம்புலன்களால் அலைக்கப்படும் வாழ்வினைக் கணத்தில் திருத்தியமைத்து வைக்க உன் திருவருள் கைகூட வைக்கவேண்டும். மனித வாழ்வில் நாம் பயன் பெறவேண்டுமாயின் இறையருள் கை கூடவைக்கவேண்டும் எனத் தெள்ளத் தெளிவாக எட்டு வரிகளில் ஒரு சொற் சித்திரம் வரைந்துள்ளார். அருணகிரியார்.

இறையருள் கைகூட முருகனை வேண்டி வேண்டி அவன் அழகை அவன் வீரத்தை இச்சா சக்தி கிரியாசக்தி என விளங்கும் வள்ளி தெய்வ யானையைத் தன்னோடணைத்து விளங்கும் பண்பை உயர் மயில் வாகனத்தை வளரும் வாழையும் இஞ்சியும் மஞ்சளும் கமுகும் பலாவும் வளர்ந்து வளம் தரும் தென் தமிழ் நாட்டினைச் செந்தமிழினை எல்லாம் போற்றிப் படிப்போர் பலன் பெற்று உய்யுமாறு அளித்துள்ளார் அருணகிரியார். அத்துடன் அரி திருமருகன் திரிபுரதகனம் செய்த சங்கரன் மகன் உமை அந்தரி மந்தரி சுந்தரி தந்த குமரன் ஐங்கரனுக்கு இளையோன் என்றெல்லாம் முருகனை ஒரு குடும்பத்திற்கு

வாய்த்த அருமைப் பிள்ளையாகவும் காண்கின்றார். இப்பிள்ளை செய்யும் வீரச் செயல் கொடுவினை போக்குதல் அல்லது பிறருக்கு அல்லல் விளைவிக்கும் கொடியோரைத் தாக்கி அழிப்பது என்னும் விதத்திலே

**திருமருக சூரன் மார்பொடு சிலையுருவ வேலை ஏவிய**
**ஜெய சரவணா மனோகர செந்திற் கந்தப்பெருமாளே**

என்கிறார்.

இத்தகையதோர் பிள்ளை தன் தந்தைக்கே குருவாய் அமைந்த தன்மைப் பலப் பல விதமாக எடுத்துக்காட்டும் அருணகிரியார் சிறு பிள்ளைகளையோ எமக்கு வயதிற் குறைந்தோரையோ நாம் கணக்கிலெடுக்காது அவர்கள் திறனை ஏத்தாது எமக்கே எல்லாம் தெரியும் புரியும் என்று இருந்து விடமுடியாது என்னும் கருத்தையும் புலப்படுத்துகின்றார்.

**சிவ வடிவங்காட்டுஞ் சற்குருபர**
**ஜெபமாலை தந்த சற்குரு நாதா**
**எருத்தி லேறிய இறையவர் செவிபுக உபதேசம் இசைத்த நாவினர்**
**மெஞ்ஞான குருநாதன்**
**நடமிடு பத மழகியர் குருநாதா**
**சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிரு**
**செவி மீதிலும்பகர் செய் குருநாதா**
**குறைவற நிறைந்த நிர்க்குணமது பொருந்தி**
**வீடுறக் குருமலை விளங்கு ஞான சற்குரு**
**ஆதி அரனுக்கும் வேதமுதல்வர்க்கும்**
**ஆரண முரைத்த குருநாதா**

திருப்புகழ் முழுவதிலுமே பலப்பல இடங்களில் சிவ நாதனின் குருநாதன் என முருகனை ஏத்தி ஏத்தி வழிபடும் அருணகிரியார் ஞான சற்குருவான அறுமுகக் கடவுளே **தெரிதமிழை உதவு சந்தப் புலவோன்** எனக்காட்டி மகிழ்கின்றார். முருகன் தமிழர்க்கோர் அருந்தெய்வம் தமிழேயான தெய்வம். தமிழ் நாடெங்கும் தலங்கள் பெற்ற தெய்வம். தமிழர் இருக்குமிடமெல்லாம் பாடியும் ஆடியும் பரவியும் பணியும் தெய்வம். குழந்தையாகக் குமரனாகக் கூர் வேலனாக வள்ளி தெய்வானை வேலனாக வரமளிக்கும் தெய்வமாக ஞானச்சுடராக படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்திறத்திற்கும் உரியவனாக வீடுபேற்றை அளிக்கும் ஞானத்தை நல்கவல்ல ஞான குருவாக எம் முன் காட்சிதர திருப்புகழைப் பாடித் தந்தார் அருணகிரியார். அத் திருப்புகழிலே மேலும் தமிழினை ஞான சித்திச் சித்திர நித்தத் தமிழாலே என தமிழ்மொழியானது ஞானம் போற்றும் மொழி நித்தியமாய் நிரந்தரமாய் வாழும் மொழி என்றார். முருகனோ

**குறுமுனிவனேத்தும் முத்தமிழோன்**
**தெள்ளுதமிழ் பாடத்தெளிவோன்**
**தமிழ் தனைக் கரைகாட்டிய திறலோன்**
**திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோன்**
**மயிலினேறி நொடியில் வந்து புளகமேவ**
**தமிழ்புனைந்த முருகோன்.**

அவனே தண் தமிழுக்கும் தஞ்சம் என்று காட்டும் அருணகிரியார் முருகனைத் தமிழர் வழிபட வேண்டும் முருக தத்துவத்தை முற்றாக உணர வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றார்.

**வெகு மலரது கொண்டு வேண்டியாகிலும்**
**ஒரு மலரிலை கொடு மோர்ந்து யானுனை**
**விதமுறு பரிவொடு வீழ்ந்து தாள் தொழ அருள்வாயே**

எனும் போது பலவித மணமலர்களுடன் ஒரு மலராம் எம் மனதினால் முருக தத்துவத்தை உணர்ந்து அன்பினொடு வணங்க அருள் கேட்கின்றார்.

இவ்வாறு பரமஞான முனிவர் நிலையிலே தன்னையுமுணர்ந்து தன் சூழலையுமறிந்து திருப்புகழ் பாடிய அருணகிரியார் மனித உடம்பின் தோற்றம் வளர்ச்சி முதிர்ச்சி இறப்பு உடம்போடியைந்த உயிர் அதன் பரிணாமம் இறுதியில் வீடுபேறு என்பன பற்றியெல்லாம் திருப்புகழ் பாடல்களில் விளக்கியுள்ளார்.

**கருவடைந்து பத்துற்ற திங்கள்**
**வயிறிருந்து முற்றிப் பயின்று**
**கடையில் வந்து தித்துக் குழந்தை வடிவாகி**

அவனிதனிலே பிறந்து மதலை யெனவே **தவழ்ந்து**

# லக்சுமிஸ் ஜுவலர்ஸ்
# &
# சில்க் ஹவுஸ்



**East Ham மஹாலக்ஷ்மி ஆலயமருகே**
**பிரமிக்கத்தக்க அழகுக்காட்சியறையுடன்**
**வைரத்தாலிக்கொடி, சங்கிலிகள், காப்புகள்,**
**அட்டியல்கள்,படையப்பா நெக்கிலஸ்கள்**
**என சகல தங்க நகைகளும்**
**22 கரட்டில் உறுதியானவை.**

திருமணத்திற்கான சிறந்த ரககூறைச் சேலைகள்,
காஞ்சிபுரம் ரங்கோலி,
கோலம், பட்டுப்புடைவைகள்

**இன்னும் புதிய மிலேனியத்தில்**
**உங்கள் புதிய வாழ்வோடு இணைகிறது**
**DAKSHINOTRI**
**(டக்ஷ்சிநோற்றி)**


வாரத்தில் ஏழு நாட்கள் திறந்திருக்கும்

தரம்! தெரிவு!! மலிவு!!!
இவையனைத்தையும் மிக மலிவு விலையில் பெற்றிட

**LAKSHMIS JEWELLERS & SILK HOUSE**
**276 High Street North, East Ham E12 6SA**
**Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448**

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை
Specialist in 22 ct. Gold Jewellery

# WESTERN JEWELLERS



## Creates the New Woman

230 UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW

**Tel : 0181 767 3445**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

---

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 020 8646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14.04. 2000 அன்று வெளியிடப்பட்டது.